Registered as a Newspaper

**NEW MASTER**
INSTITUTE
241, Navalar Road, Jaffna

89 A/L
ZOOLOGY
Sat & Sun – 8.30 a.m.
விலங்குப்பாகுபாட்டியல்
Sat. & Sun. 11-30 a. m.
நீர் சனனித் தொகுதி
ஆசிரியர்:
திரு. நாகநாதன்

# சஞ்சீவி

**அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி**

விலை ரூபா 3-50

**NEW MASTER**
INSTITUTE
241, Navalar Road, Jaffna

89 A/L
PHYSICS
நிலை மின்னியல்
ஆசிரியர்:
திரு. வர்ணம்
ஆரம்பம்;
10-09-1988
Sat – 2.30 p.m.

மலே: 3 யாழ்ப்பாணம் விபவ ஞு ஆவணி மீ 25 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 முஹர்ரம் பிறை 27 (10-09-1988) **SANJEAVY** REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 27

# படையினர் நடத்திய கொலைகள்:
# சுதந்திர விசாரணைக்கு வற்புறுத்து

## கைதான தமிழர் பலர் சுடப்பட்டு சடலங்கள் இரகசியமாகப் புதைப்பு
## மன்னிப்புச் சபை அம்பலப்படுத்துகிறது

— அலுவலகப் பிரதிநிதி: பெஞ்சமின் ராஜரத்தினம் —

யாழ்ப்பாணம், செப்டம்பர் 10

**✶ பழிவாங்கல் நடவடிக்கையாக, இலங்கை அரச படைகளும், இந்திய அமைதிப் படையும் கொலைகளைச் செய்திருப்பதாகக் கிடைத்திருக்கும் முறைப்பாடுகள் குறித்து விசாரணை செய்ய வேண்டும்.**

**✶ "காணமற் போனவர்"களின் கதி குறித்தும் விசாரிக்கப்பட வேண்டும்.**

இந்த இரண்டு விசாரணைகளையும் பாகுபாடற்ற முறையிலும், சுதந்திரமாகவும் மேற்கொள்வதற்கான விசாரணைக் குழு ஒன்றை இலங்கை அரசு நியமிக்க வேண்டும்.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கத்திடம் வற்புறுத்தியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை வந்து விசாரணை நடத்தலாம் என்று பெப்ரவரியில் இலங்கை அரசு (ஜனாதிபதி திரு.ஜெயவர்த்தன, பி. பி. சிக்கு அளித்த பேட்டியின்போது) வாக்குறுதி அளித்து இருந்தது.

இவ்வருடம் ஏப்ரலில் மன்னிப்புச் சபை உறுப்பினர் இலங்கை வரலாம் என அறிவித்துவிட்டு, பின்னர் அதிலிருந்து அரசு பின்வாங்கிவிட்டது.

அதனால் விசாரணைக் குழு ஒன்றை இலங்கை அரசு அவசியம் நியமிக்க வேண்டும் என்று மன்னிப்புச் சபை அதனை வற்புறுத்தி உள்ளது.

அத்தோடு, முன்னர் நிகழ்ந்தது போன்ற (4 ஆம் பக்கம் பார்க்க)

## வறிய மக்களுக்கான தர்மப் பணம் இருமடங்கு

கொழும்பு, செப் 10

வறியமக்களுக்குத் தர்மப் பணம் இரட்டிப்பாக்கப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

இதுபற்றி அரசு தீவிரமாக ஆலோசனை செய்து வருகிறது.

25 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு அரசு தற்போது தர்மப்பணம் வழங்கி வருகிறது.

உத்தேச அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் தற்போது 40 ரூபா பெறுபவருக்கு இனி 100 ரூபா கிடைக்கும். 150 ரூபா பெறுபவருக்கு 300ரூபா வழங்கப்படும். (ஓ-எ)

## சுபநேரம்

10 – 09 - 88
ஆவணி - 25
சனிக்கிழமை

சுபநேரம்:
03 03 முதல் 04.33 வரை
ராகுகாலம்:
09 03 முதல் 10.33 வரை
அமாவாசை விரதம்

## மடு வீதி மோதலில் 4 பேர் மரணம்

வவுனியா செப் 10

ரயில் பாதையில் காவலில் இருந்த இந்தியப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதல் ஒன்றில் நால்வர் பலியாகினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை காலை பறையனாலங்குளத்திலிருந்து சுமார் 1½ மைல் தூரத்தில் மடு ரோட் பக்கமாக இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இறந்தவர்களில் இருவர் படையினர் என்றும் இருவர் போராளிகள் என்றும் கூறப்பட்டது. (ஓ-161)

அனுராதபுரத்தில்

## ஆஸ்பத்திரிக்குள் புகுந்து தமிழரைத் தாக்கியது ஒரு கோஷ்டி

அநுராதபுரம். செப்10

அநுராதபுரம் அரசினர் ஆஸ்பத்திரிக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு உட்புகுந்த அடையாளம் காணப்படாத கோஷ்டி ஒன்று வார்ட் ஒன்றுக்குள் சென்று தமிழ் நோயாளிகளைத் தாக்கி ஆபத்தான காயங்களை விளைவித்துள்ளனர்.

இக் கோஷ்டியினரால் தாக்கப்பட்ட நோயாளிகளில் நால்வர் சத்திர சிகிச்சையின் பின் வார்ட்டில் தங்கியிருந்தவர்கள் ஆவர்.

இத் தாக்குதலில் படுகாயமடைந்த பெரிய அழகு (34) சுப்பிரமணியம் மகேந்திரன் (23) ஏ. அயூப் (32) சவிரிமுத்து பெனடிக்ற் ஆகியோர் இப்பொழுது வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றனர். (ஓ)

## ரயில் நிலைய அதிபர் சுட்டுக்கொலை

அம்பலாங்கொட ரயில் நிலைய அதிபர் நேற்று இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஜே. வி. பி இயக்கத்தின் தேசப் பிரேமி ஜனதா வியாபாரய பிரிவே இக் கொலையைச் செய்திருக்கலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ)

## ஐ.தே.கட்சி - இ.தொ.கா. உறவு முறியுமா?

கொழும்பு, செப் 10

ஆளும் கட்சியான ஐ.தே.க. விற்கும் இ.தொ. கா. வுக்கும் இடையிலான உறவு முறிவடைந்து விடலாமென கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியவருகிறது.

ஜனாதிபதி தேர்தலின் முன், இ.தொ.கா.வின் இரு முக்கிய கோரிக்கைகளுக்கு தீர்வு காண்டாக வேண்டும் என்ற நிலையில் ஆளும் கட்சியினர் உள்ளனர்.

★ மலையக இளைஞர்கள் விடுதலை

✶ மலையக மக்கள் பிரசாவுரிமை.

இந்த இரு விடயங்களும் சொல் வடிவத்திலுள்ளதே தவிர செயல் வடிவத்தில் இல்லை.

செயல் வடிவம் பெறுமானால் இ தொ கா – ஐ தே க கூட்டு நிலைக்கும். இல்லையேல் முறிவு ஏற்படலாம்.

அண்மையில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சி வெற்றி பெற இ தொ கா.தான் பிரதான காரண (4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் பகுதி மீனவர்களின் புனர்வாழ்வுக்கு ஐ.நா. உதவி

கொழும்பு. செப். 10

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை மாவட்ட மீனவர்களின் புனர்வாழ்வுக்கு என ஐ நா. அகதிகள் ஆணையாளர், ஒரு கோடி 10 லட்சத்து 5 ஆயிரம் ரூபா நிதி உதவியை கடற்றொழில் அமைச்சுக்கு வழங்கியிருக்கிறார்.

ஐ. நா. அகதி ஆணையாளர் சார்பில் வதிவிட பிரதிநிதி திரு. டபிள்யு. டி. கிளாரன்ஸ் இவ்வுதவித் திட்டத்தின் கீழ் 5 வாகனங்களை அடையாளமாக அமைச்சரிடம் கடந்தபுதன் வழங்கினார்.

இந்தியாவில் இருந்து திரும்பும் அகதிகள், ஆயுதங்களை ஒப்படைத்தவர்கள், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்து விடுவிக்கப் பட்டவர்கள் இடம் பெயர்ந்தவர்கள் ஆகியோருக்கு இந்த நிதி உதவித் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## விரிவுரையாளர் பற்றாக்குறையால் சிறந்த டாக்டர்களை உருவாக்கமுடியாத நிலை
### மருத்துவபீடத் தலைவர் கவலை

யாழ்ப்பாணம் செப் 10

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு அனுபவம் வாய்ந்தபேராசிரியர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக மாணவர்களின்மருத்துவ கல்வி பாதிக்கப்பட்டிருப்பதுடன், சிறந்த டாக்டர்களை நாட்டுக்கு உருவாக்கிக் கொடுக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத் தலைவர் பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் சஞ்சீவிக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

மருத்துவ பீடத்தில் இன்று சுமார் 400 மாணவர்கள்வரை உள்ளனர்.

மொத்தம் 51 பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் இருக்கவேண்டிய பீடத்தில் இன்று 24 பேர் மாத்திரமே உள்ளனர்.

திறமையும், அனுபவமும் வாய்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்களில் பலர் வெளிநாடு சென்றுவிட்டனர்.

இதனால் எமது மருத்துவ மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள பெருமளவு வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு இருபது வெற்றிடங்களுக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

ஆனால் அவற்றிற்கு கிடைத்த பலாபலன் (4 ஆம் பக்கம் பார்க்க)

முன்னாள் பிரதமர் தலைமையில்

## இடைக்கால அரசு பர்மாவில் அமைக்கப்பட்டது

ரங்கூன், செப் 10

பர்மாவில் முன்னாள் பிரதமர் யூநா தலைமையில் இடைக்கால அரசு ஒன்று அமைக்கப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

அரசு எதிர்ப்புக் குழுக்கள் சேர்ந்து இந்த அரசை அமைத்திருப்பதாக பி.பி.சி. அறிவித்தது.

ஜனாதிபதி, வெளியுறவு அமைச்சர் ஆகியோரும் நியமிக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தி தெரிவித்தது.

அடுத்த மாதம் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலை நடத்தப்போவதாகவும் பல அரசியல் கட்சி (4 ஆம் பக்கம் பார்க்க)

ஆயுதக் கோஷ்டி ஒன்றினால்

## செட்டிகுளத்தில் ரயில் மறிக்கப்பட்டு 52 அரிசி மூடைகள் கொள்ளை!

செட்டிகுளம் ரயில் நிலையத்தில் வைத்து 52 அரிசி மூடைகள் ஆயுதம் தாங்கிய குழு ஒன்றினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மதவாச்சியில் இருந்து மன்னாரில் உள்ள தனியார் வர்த்தகர் ஒருவருக்கு ரயிலில் அனுப்பி வைக்கப்பட்ட அரிசி மூடைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

இச்சம்பவம் கடந்த புதனன்று நடைபெற்றது.

மதவாச்சியில் இருந்து எரிபொருள் ரயில் பதை வேலைகளுக்கான கற்கள் என்பவற்றை ஏற்றிச் சென்ற சரக்கு ரயில் செட்டிகுளம் ரயில் நிலையத்தில் தரித்து நின்ற போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது

வகன் ஒன்றில் இருந்து கொள்ளையடிக்கப் பட்ட அரிசிமூடைகள் லொறி ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டதாம்.

படையினருக்கு உணவுப் பொருள்கள் ரயிலில் கொண்டு செல்லப்படுகிறதா என்று சோதனையிட்ட பின்னரே இக் கோஷ்டியினர் கொள்ளையில் ஈடுபட்டுள்ளார்கள்.

இச்சம்பவத்தின் பின்பு புறப்பட்டுச் சென்ற ரயிலை சுமார் ஒருமைல் தூரத்தில் வழி மறித்த இந்திய அமைதிப்படையினர் விஷயம் அறிந்து ரயிலை செட்டி குளத்திற்கே திருப்பிக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### செழியன் இராஜினமா

சென்னை, செப். 10

தமிழ்நாடு ஜனதாக் கட்சித் தலைவர் பதவியில் இருந்து திரு.இரா. செழியன் நேற்று இராஜினமாச் செய்துவிட்டார்.

ஏழு எதிர்க்கட்சிகள் சேர்ந்து அமைந்துள்ள தேசிய மக்கள் முன்னணியில் திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்த்ததை ஆட்சேபித்து திரு. செழியன் இராஜினமாச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

### 4 பேருக்கு மின்கம்பத் தண்டனை

கொழும்பு செப் 10

வெலிஅம பொலிஸ் பகுதியில் இனந் தெரியாதவர்களால் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சடலங்கள் மின் கம்பத்தில் கட்டப்பட்டிருந்தன. (ஓ)

### தொடர்ந்து ஊரடங்கு

குருநகர், செப் 10

பண்டத்தரிப்பு, சங்கானை. இளவாலை, மாதகல். சில்லாலை, விளான், சண்டிலிப்பாய், சித்தங்கேணி ஆகிய பகுதிகளில் தொடர்ந்தும் நேற்று மூன்றுவது நாளாகவும் ஊரடங்கு அமுலில் இருந்தது. (ஓ-51)

### இவர்களின் ஓய்வூதியம் அதிகரிக்கும்

கொழும்பு. செப் 10

உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியமும் அதிகரிக்கப்படவிருக்கிறது.

சென்ற ஜனவரி மாதம் முதல் இந்த அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

இதற்காக 99 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவை அமைச்சரவை அங்கீகரித்து உள்ளது. (ஓ-எ)

### பறவைக் காவடிகள்

குருநகர், செப் 10

நல்லூர் தேர்த்திருவிழா தினமாகிய நேற்று பத்துக்கும் குறையாத பறவைக் காவடிகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து கோவில் நோக்கி வந்தன.

இதைத் தவிர நூற்றுக்கணக்கான பால் செடில் காவடிகளும் வீதிகளில் நெடுந்தூரங்களில் இருந்து கோவிலை நோக்கி பேரிகையுடன் வந்துகொண்டிருந்ததையும் காண முடிந்தது. (ஓ-51)

ஆரம்ப ஆசிரியர்:

### மேலும் 22பேரின் பட்டியல்

யாழ்ப்பாணம், செப் 10

மேலும் 22 ஆரம்ப ஆசிரியர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்று கல்விச் சேவை ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்தப் பெயர்ப்பட்டியல் கடந்தபுதன்கிழமை அன்று கல்விச் சேவை ஆணைக்குழுவினால் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இது அடுத்த திங்கள் அளவில் யாழ். கல்வித் திணைக்களத்தை வந்தடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-9)

### விபத்தில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 10

நேற்று கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் நடைபெற்ற விபத்து ஒன்றில் மூவர் காயமடைந்தனர்.

இவர்களில் சில்வெஸ்டர் ரவீந்திரன் (யாழ்ப்பாணம்) காலில் பலத்த காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-9)

### விமான விபத்தில் 75 பேர் பலி!

பாங்கொக், செப் 1

வியட்னும் அரசுக்கு சொந்தமான விமானம் ஒன்று பாங்கொக் விமான நிலையத்தில் நொருங்கி விழுந்ததில் 75க்கும் அதிகமான பயணிகள் உயிரிழந்தனர்.

கடும் மழை காரணமாக இவ் விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விமானம் துண்டு துண்டாகச் சிதறியது. விபத்து நடந்தபோது விமானத்தில் 100க்கும் அதிகமான பயணிகள் இருந்தனர்.

**10 பேர் பலி**

ஈகுவடோரிலும் ஒரு விமான விபத்து இடம் பெற்றது.

இரண்டு விமான மோட்டிகளுட்பட 10 பேர் இவ் விபத்தில் உயிரிழந்தனர். எண்மர் பயணிகள் ஆவர். (ஓ-எ)

### கோப்பாய் வாசி சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம் செப் 10

நேற்று மாலையில் இனந் தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு கோப்பாய் வாசி ஒருவர் பலியானார்.

இந்தச் சம்பவம் கோப்பாய் கிராம சபை முன்றலில் நடைபெற்றது.

இறந்தவர் எஸ். அலெக்சாண்டர் என்பவர் இவர் பிரஸ்தாப சபையின் காவலாளி ஆவார். (ஓ-9)

**புதுமையும் எழிலும் நிறைந்த பல்சுவை வார இதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★சின்னஞ் சிறு விளம்பரம்★

## விற்பனைக்கு

புதிய Honda Reconditioned புதிய பழைய Model C 90, C 50, CD90, CD 50, MD 90, Chaly மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. No. 16, சண்டி வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம் (A. G. A அலுவலகம் முன்பாக) (6193)

மோட்டார் சைக்கிள் Honda CG 125 90 Sri Series Moris Van33 Series ஆகிய இருவாகனங்களும் விற்பனைக்குண்டு S. நடராசா சிந்தாவத்தை மூளாய் வீதி, மூளாய். (6376)

Honda CD200 நல்ல நிலையில் விற்பனைக்குண்டு தொடர்பு: பரஸ்சோலாபிறிசேசன் சேர்விஸ் பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தை, நல்லூர். (6189)

நீராவியடியில் உள்ள அரைக்கும் ஆலை (Grinding Mill) விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்:-28, நீராவியடி, யாழ்ப்பாணம். (6149)

உபயோகித்த வீட்டுத் தளபாடங்கள் கட்டில், தேக்கு அலுமாரி, கண்ணாடி மேசை, Show-Case, சாப்பாட்டு மேசை, பித்தளைப் பொருள்கள், ஹோல் செற, விருந்தைக் கதிரைகள் உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம், (சென்பற்றிக்ஸ் சந்தியருகில்,) (6170)

பிறிமா இன (Prima) ஒருநாள் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் 10-9-88 முதல் விநியோகிக்கப்படும். அத்துடன் ஒரு நாள் சேவல் குஞ்சுகளும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்க;- M.G M. Forage Stores, 208, 1st Cross Street, Jaffna. (6172)

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், C/o நல்லூர் விடியோ சென்ரர், 19, முருகேசர்லேன்' நல்லூர். (6143)

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No. 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (6186)

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் விடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C/109)

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள்' சேவற் கோழிகள், குப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு Nallur Farm Centre, C/o Nallur விடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6144)

### காணிவிற்பனைக்கு

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் பருத்தித்துறை வீதியையும்ஸ்டேசன் வீதியையும் இணைக்கும்First Lane அருகே வீடுகட்டுவதற்குவசதியான மூன்று பரப்புக் காணிவிற்பனைக்குஉண்டு.தொடர்பு.NO 356 C/OUthayan. Jaffna (C151)

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் இணுவில் வீதியில் (பிரதான வீதியிலிருந்து 100யார் தூரத்தில்) 3 பரப்புக்காணி பயிர்களுடன் விற்பனைக்கு உண்டு, தொடர்பு: இ கமலநாதன், சட்டத்தரணி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (6161)

### பனைகள் விற்பனைக்கு

நூறு வயது வைரப் பனைகள் முப்பது விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் பொ. கந்தையனார் பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (6179)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards),திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, பவின சந்தை, யாழ்ப்பாணம். (C124)

## தேவை

யாழ். நகரில் வெகு விரைவில் ஆரம்பிக்க இருக்கும் ஹோட்டலுக்கு ரீமேக்கர், சமையல் வேலை, இடியப்பம்,பிட்டு தயாரிப்பாளர்கள்; சப்ளையர் வேலைக்கும் நன்கு அனுபவம் உடையவர்கள் நேரில் வரவும். இல. 52, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (6177)

### முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



**திரு கந்தர் சின்னையா**

தோற்றம்: 19—08—1886

மறைவு: 24—08—1987

திதி: 10—9—1988

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய அன்புத் தந்தையே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டு அகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (6340)

### ஆள் தேவை

மரக்கடைசல் வேலை தெரிந்த ஆண், பெண் இருபாலாரும் தேவை. தொடர்புகொள்ளவும்: மகாலக்ஷ்மி ரேட் குறூப், 75, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (6194)

### தவறி விட்டது

சுதுமலை தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த செல்வி துரோபதி இராமநாதன் ஆகிய எனது அடையாள அட்டை இல- 575801544 V வண்ணை பெருமாள் கோவிலில் 3/9/88 அன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6374)

சின்னப்பு- தம்பிஐயா என்பவரின் சாரதி அனுமதிப்பத்திரம் இல DOO2778, கொமேசியல் வங்கி காசோலைப்புத்தகம் இல 12122. அடையாள அட்டை இல 482092764V மற்றும் தஸ்தாவேஜுகள் கொக்குவில் நுண்கலைக்கல்லூரிக்கும் பிறவுண் வீதிக்கும் இடையில் கைதவறிவிட்டது. இவை எனக்கு முக்கியமானபடியால் உதயன் காரியாலயத்தில் அல்லது 66/13 பிறவுண் வீதி 5 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம் இல் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6373)

### கூப்பன் தவறிவிட்டது

தனம் ஸ்ரோர்ஸ், தனபாலசிங்கம் ஆகிய நான் என் கடைமுன்னால் அன்னுசிப்பழம் விழுத்தியவருக்கு ஒரு பாக் கொடுத்து உதவி செய்தேன். அந்த பாச்னுள் உணவு முத்திரையை தவறுதலாக கொடுத்து விட்டேன். தயவு செய்து அந்த உணவு முத்திரைகளை கொடுத்து உதவுமாறு வேண்டுகிறேன். (6190)

### சேவை

யாழ்ப்பாணத்தில் நன்கு காயவைத்த சீயாக்காய், மருந்துச் சரக்குகள், இலுப்பைப் பருப்பு அரைப்பதற்கும் தேங்காயெண்ணை ஊற்றுவதற்கும், நெல் உடைப்பதற்கும் ஈஸ்வரி மில்ஸ், (நல்லூர் கல்வியங்காட்டுச் சந்தைக்கு எதிரில்) வெள்ளிக்கிழமைகளில் மில் திறக்கப்படமாட்டாது. (6165)

### சேவை

உங்கள் எண்ணம் போல் கண்கவர் நிறங்களில் பற்பல டிசைன்களில் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ரெராசோ புளோரிங் (Terraso Flooring) (மாபிள் நிலம்) அமைத்துக் கொடுக்கப்படும் சதுர அடி 30 — 36 வரை தொடர்பு: N P லோகேஸ்வரன், No. 33 மூத்த விநாயகர் 1 ஆம் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி. நல்லூர். (6151)

### இரவு பகல் சேவை

திருமணம் பிறந்த நாள் போன்ற சகல வைபவங்கட்கும் சிறந்த முறையில் படம்பிடித்துக் கொடுப்பவர்கள் கி. வீ போட்டோ, 20 (46). செப்பல் வீதி, யாழ்ப்பாணம். (6367)

### தங்குமிட வசதி

கல்விகற்கும்,தொழில் பார்க்கும் பெண்களுக்கு, பாதுகாப்பான சூழலில் சாப்பாட்டுடன் தங்குமிடவசதிஉண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இல 25, கைலாசபிள்ளையார் வீதி, யாழ்ப்பாணம். (6155)

### வாடகைக்கு உண்டு

சிறிய குடும்பத்திற்கு ஏற்ற Annex வாடகைக்கு உண்டு. (யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு மிக அண்மையில்) தொடர்பு R. பாலசுப்பிரமணியம் 125, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (6375)

### சோதிட, மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலக்குமி கடாட்சம். நோய்பிணி தீரல், சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்களுக்கு நாடுங்கள்;- 'சக்தி சரவணா'( அரச அங்கீகாரம் பெற்றசோதிடரும், மட்டக்களப்புபாரம்பரிய-பரம்பரைமாந்திரீக நிபுணரும்) 210. கஸ்தூரியார் வீதி, (யாழ். இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம் (6372)

### பிரத்தியேக வகுப்புகள்

G. C. E. A/L பரீட்சைக்கு தோற்றவிருப்பவர்களுக்கு விட்டில் வந்து Chemistry, Physics கற்பிக்கப்படும். தனியாக அல்லது சிறு குழுக்களாக கற்பிக்கப்படலாம் தொடர்பு கொள்ளவும்: 185, C/o உதயன், யாழ்ப்பாணம் (6084

### A/L இரசாயனம்

108. Brown Road, Jaffna, A/L 89 சேதன இரசாயனம் ஆசிரியர் சக்தீஸ். ஆரம்பம் 13. 9 88 செவ்வாய் 4 30(p m) (செவ்,வியா 4.30 p.m) பௌதிக இரசாயனம்- ஆரம்பம் (16. 9 88) வெள்ளி 4 30 p m. விபரங்கள் நேரில். இவ்வாசிரியரின் சேதன இரசாயனம் நூல் வெளிவந்து விட்டது. (6362)

### A/L இரசாயனம்

108, Brown Road Jaffna A/L 89 இரசாயனம் ஒரு ஒருவருட வகுப்பு ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் 12. 9. 88 திங்கள் 5. 15 p.m (திங், செவ், புதன், வியா, வெள்ளி) எல்லா நட்களும், பிரிவுII ஆரம்பம் 11- 9- 88 ஞாயிறு 4. 30 (p. m.) (சனி, ஞாயிறு). விபரங்கள் நேரில் இவ்வாசிரியரின் சேதன இரசாயனம் நூல் வெளிவந்துவிட்டது. (6363)

### வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் 186. சண்டிவீதி யாழ்ப்பாணத்தில் கச்சேரிக்கும் சுண்டுக்குளி பாடசாலைக்கும் அண்மையில் பெந்தேகொஸ்தே சபைக்கு எதிரே, முன்பு D R. O. Office ஆக இருந்த வீடு, உடனடியாக வாடகைக்கு உண்டு பிற்பகல் 1மணிக்கும் 5மணிக்கும் இடையில் இவ்வீட்டில் சந்திக்கவும் (6175)

### காரைநகரில் கையெழுத்துப் போராட்டம்

பூஸாக்கைதிகளை விடுதலை செய்யக்கோரி ஈரோஸ் நடத்தும் கையெழுத்துப் போராட்டம் காரைநகர் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ- 73)

### சனசமூக நிலையங்களுக்கு பணம்

சங்கானை,செப். 10

சங்கானைப் பிரதேச சனசமூக நிலையங்களுக்கு 1986ஆம் ஆண்டிற்கான அரச நன்கொடைப் பணம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ- 29)

### மட்டக்களப்பு திரும்பிய அகதிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 38 பேர் அண்மையில் இந்தியாவிலிருந்து அகதிகளாக நாடு திரும்பினர்.

கப்பல் வழியாகத் திருமலைத் துறைமுகத்துக்கு இந்த அகதிகள் வந்து அங்கிருந்து இ. போ. ச. மூலம் மட்டக்களப்பு வந்து சேர்ந்தனர். (இ- 21)

### இன்று நிறைவு விழா

யாழ்ப்பாணம், செப். 10

காரைநகர் விளானை சன சமூக நிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திரு. க. தில்லையம்பலம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி க. அம்பிகைபாகனும் சிறப்பு விருந்தினராகத் திருமதி பழனி நாதன் சிவநேசமும் கலந்து கொள்வார்கள்.

சிறப்புச் சொற்பொழிவுகள், சங்கீதக் கச்சேரி 'தனியார் கல்வி அவசியமா? அவசியமில்லையா? என்ற பட்டி மன்றம் என்பன விழாவில் இடம் பெறவுள்ளன.

### புதுக்குடியிருப்பு உ. அ. அதிபர்

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபராக இம்மாதம் முதல் திரு எ. இராசரத்தினம் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் முல்லைத் தீவு மாவட்ட அமைச்சின் இணைப்பு உத்தியோகத்தராக பணிபுரிந்தவர்

இவ்வலுவலக உதவி அரசாங்க அதிபராக பணிபுரிந்த திரு. எஸ் தனபாலசிங்கம் கடந்த மாத இறுதியுடன் ஓய்வு பெற்றார். (இ-94)

### விண்ணக வாழ்வின் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சாமுவேல் அருளுதயராசா**

(சுன்னாகம், மக்கள் வங்கிக் காசாளர்)

தோற்றம்: 29—6—1941 மறைவு: 10—9—1985

பண்பின் சிகரமாய் அன்பின் அரசாட்சியாய் அறிவுப் பேரொளியாய் தியாகத்தின் தீபமாய் கடமையில் கண்ணியமாய் வாழ்ந்த எங்கள் அன்புத்தெய்வமே, எங்களை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகள் ஓடிமறைந்தாலும் உங்கள் அன்பின் திருவுருவம் எங்கள் உள்ளத்தை விட்டு என்றும் அகலாது. உங்கள் திருவடிகளுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகள் உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள்


அம்பலவாணர் றோட், உடுவில். (6343)


## உஷா தையல் மெஷின் தொடர்



டொமெஸ்டிக் டிலியூக்ஸ் (நேரான தையல்) ட்ரோப் டீ பொறிமுறையும் முகப்பு அலங்காரத் தையலும். ரூபா 3850/-

தையற்காரர் மொடல் ரூ. 4000/-



எக்ஸெலா 30 (சிக்சாக் தையலுக்கும் நேரான தையலுக்கும்.) 30 வடிவமைப்பு அச்சுக்கள் ரூபா. 5,850/-



சிக் சாக் எக்ஸெலா 55 பிக்கொட் விளிம்பு தைக்கும் வசதியும் இரட்டை ஊசியும் உண்டு. 55 வடிவமைப்பு அச்சுக்கள், சிக்சாக் தையல், அலைவிளிம்புத் தையல், பொத்தான் துளை தைத்தல், முதலியன. ரூபா. 7850/-

சகல பாகங்களும் உலோக மெருகிடப்பட்டவை.

ஒரு வருட உத்தரவாதம் இலகு தவணை முறையிலும் வாங்கலாம், அண்மையிலுள்ள ஊஷா விற்பனையாளரிடம் இன்றே விரையுங்கள்.

விநியோகத்தர்: ஊஷா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட் 68, அத்திடிய றோட், ரத்மலானை. தொலைபேசி: 71-6922, 71-7934, 71-7381

Mel Ads 9353




# ஈழம் வாழ் மக்களே!

## PASSPORT, INDIAN VISA, TRAVELLERS CHEQUE, AIR TICKETS ஆகிய ஒழுங்குகளுக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

- ✶ இத்துறையில் நல்ல அனுபவமுள்ளவர்களால் சிறந்த ஆலோசனைகள் கடமைப்பாடு அல்லாமல் முழுமை ஆக வழங்கப்படும்.
- ✶ திருவனந்தபுரம், திருச்சி, **MADRAS** ஆகிய நகரங்களுக்கு இந்திய விசாவுடன் உறுதிப்படுத்தப்பட்ட விமான டிக்கற் ஒழுங்குகள் மிகவும் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.
- ✶ உலகில் எந்த நாட்டிற்கும் (INDIA, AUSTRALIA, CANADA, AMERICA, SINGAPORE, BANGKOK மற்றும் நாடுகளுக்கும்) கொழும்பில் பெறும் கட்டணத்திலேயே யாழ்ப்பாணத்தில் டிக்கற் வழங்கப்படும்.
- ✶ CONFIRMATION, RECONFIRMATION, CANCELLATION OF TICKETS ஆகியவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ✶ பாஸ்போட், பொண்டிங், EXTENSION ஆகியவைகளும் துரிதமாகச் செய்து கொடுக்கப்படும்.
- ✶ **CESSNA 206** விமானம் யாழ் - கொழும்பு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

MACK

**MACK TRAVELS (Pvt) Ltd., JAFFNA.**



விமான சேவை

(C/149)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் ஆவணி மாதம் 27 ஆம் திகதி (12-9-88) திங்கட்கிழமை நண்பகல் 11-30 மணி தொடக்கம் 1-00 மணி வரையுள்ள சுபவேளையில்,

| எமது புத்திரன் திருநிறைசெல்வன் **சண்முகவரதன்** அவர்களுக்கும் | எமது புத்திரி திருநிறைசெல்வி **சுசீலா** அவர்களுக்கும் |
|---|---|

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருமணம் செய்யத் திருவருள் கூடியிருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

**திரு. க. துரைராஜா தம்பதிகள்**
"இரத்தின-கிரி"
தொண்டைமானாறு.

**திருமதி க. கு. பாலசுப்பிரமணியம்**
வல்வெட்டித்துறை.

தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை

(6333)

---

உ
சிவமயம்

## திருமணம்

திருவருள் ஆணையின் கீழ்
விபவ ஆவணி 27ஆம் நாள் (12-9-1988) திங்கள்
முற்பகல் 10-00 மணி முதல் 11-30 மணி
வரையுள்ள துலா லக்கின சுபவேளையில்

| திருவளர் செல்வன் விசுவலிங்கம் **சண்முகநாதன்** (கொள்வனவு முகாமையாளர், ரெலிகோணர், சாவகச்சேரி) தலைமகன் | திருவளர் செல்வி சிவஞானசம்பந்தன் **தயாநிதி** தலைமகளைத் |
|---|---|

தலைகூடும் திருமண வைபவம் நிகழும்.

மணவாளக் கோலம்: காலை 6 - 28 — 7 - 33 மணமகனில்லம்
மங்கலநாண் பூட்டல்: முற்பகல் 10-00 — 11-30 மணமகளில்லம்
வரவேற்புபசாரம்: பிற்பகல் 3-00 மணி முதல் மணமகனில்லம்

நிகழ்ச்சிகளில்; தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து ஆசிர்வதித்தலை அன்பு மீதூர வேண்டி நிற்கின்றோம்.

வணக்கம்

**திருமதி வி. செல்லம்மாவும் குடும்பத்தினரும்**
"லலிதா வாசம்"
நுணுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

**திரு. செ. சிவஞானசம்பந்தன்**
இளைப்பாறிய அதிபர் (சோதிடர்)
**திருமதி சி. அன்னலட்சுமி**
"சிவா மகால்"
சரவணை மேற்கு, வேலணை.

(6318)

---

கலர்ப்படங்களைக் கவர்ச்சிகரமாகப்
**பிரதிசெய்ய விரும்புகிறீர்களா?**

- மைக்குரோ கொம்பியூட்டர் மூலம் கொழும்பில் பிரதிசெய்து வழங்கப்படும்.
- ஐந்து (5) நாட்களில் கலர்ப்படங்களைப் பெற்றுக் கொள்ளலாம்,
- Processing இலவசம்.

பிரதி ரூபா 4. 25

**எமது கலர் லாப்பில்
பிரதிசெய்ய ரூபா 4-00**

**பிரதி 4-00**

**கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்**

(C.154)

---

**MODERN EDUCATION CENTRE**
KARAVEDDY.
G. C. E (A/L) 89 one Year Course
[பால் நேர வகுப்பு]

பொருளியல்— திரு. லோகசிங்கம்
அளவையியல்— திரு. விக்கி
கணக்கியல்— திரு. பவான்
வர்த்தகம்— திரு. கனேஸ்
தமிழ்— செல்வி. மீரா
இந். நா— திரு. யோகராஜா
ஜெகதீஸ்வரன்

ஆரம்பம் 14 09-1988 காலை 8 00 மணி

(6305)

---

கற்பகதருவாக இயற்கை தந்த பனை வளத்தை நம்பியுள்ள எம்மக்களே!

உங்கள் பனம் உற்பத்திகளை இல. 53, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தும் காரியாலயத்தில்விற்பனை செய்து வருமானத்தைப் பெறுங்கள்.

**நாட்டுக்காக உயிர் நீத்த உத்தமர்கள் நினைவாக வீட்டுக்கொரு பனம் விதையை நாட்டுங்கள்**

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை.

தலைமை அலுவலகம்.
பனை அபிவிருத்திச்சபை.
இல. 54, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

(C/137)

---

+
J. M. J

**உங்கள் பயண அமைப்பாளர்**

# S.P. ANTON

**மகிழ்ச்சியுடன் வழங்கும்**

## வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

**கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், அமெரிக்கா**

வெளிநாடுகளுக்குப் பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம், ஒவ்வொரு வாரமும் எமது குழுக்கள் இறைவன் நல்லருளுடன் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகின்றன நீங்கள் விரும்பும் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்ளுவதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம். எனவே மற்றும் சகல விபரங்களுக்கும்

**1. சவூதி அரேபியா**
கிளினேர்ஸ் ஆஸ்பத்திரி எயர்போட் கிளினேர்ஸ் உடன் தேவை. S. R 400

**2. சிங்கப்பூர் - கிறீஸ் கனடா - ஓமான்**
வீட்டு வேலைப் பணிப்பெண்கள் உடன் தேவை.

**3. சிங்கப்பூர்**
கப்பல் வேலை வாய்ப்புக்கள்

**4. சவூதி அரேபியா**
சவூதி அரேபியாவின் முக்கிய தலைநகரில் பராமரிப்புக் கம்பனியில் பணியாற்றுவதற்குக் கீழ்க்காணும் 120 வேலைவாய்ப்புகள் உண்டு.

1. பாதுகாவல் அலுவலர் Security Guard
2. A. C மெக்கானிக்
3. உதவி A. C மெக்கானிக
4. H. V. ட்றைவர்
5. சுவர் பெயின்றர் -Wall Painters
6. தண்ணீர் சுத்திகரிப்புப் பணியாட்கள் Water Treatment Assistants
7. போர்க்லிப்ட் ஒப்பறேட்டர்
8. " " உதவியாளர்கள்
9. ஷோபா தயாரிப்பாளர்

உணவு, இருப்பிடம் இலவசம்.
மூன்று வருட ஒப்பந்தம்.
ஓவர்டைம் உத்தரவாதம்

மற்றும் சகல விபரங்களுக்கும் உடனடியாக நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் பயண அமைப்பாளர்:
**S. P. அன்ரன்**
No. 648½, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C/134)

---

வடக்கு கிழக்கில் தேர்தல் நடத்துவது

# அமைதிக்குப் பதில் பெரும் குழறுபடிகளை ஏற்படுத்தும்

## நவ சமசமாஜச் செயலாளர் அறிக்கை

கொழும்பு, செப்.10
வடக்கு-கிழக்கில் இப்போது மாகாணசபைத் தேர்தல் நடத்துவது ஆபத்தானது. அமைதிக்குப் பதில் குழறுபடியையே அது ஏற்படுத்தும். நிலைமை சீரடைந்த பின்பு தேர்தல் நடத்துவது தான் அர்த்தமுள்ளதாக இருக்கும்.

நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணரத்தின வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இன்றுள்ள நிலைமையைச் சீர்செய்து சகஜ நிலையைத் தோற்றுவிக்க ஓர் இடைக்கால நிர்வாகம் அவசியம் தேவை.

முன்பு இந்த இடைக்கால நிர்வாகத்தைத் தருவதாகக்கூறிய ஜனாதிபதி ஜெயவர்த்தன தனதுசகாக்களின் நெருக்குதலினால் பின் வாங்கிவிட்டார்.

இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### பௌத்த காங்கிரஸின் ஆதரவுயாருக்கு?

கொழும்பு, செப்.10
பௌத்தமதத்தை அரசமதமாக்குவதற்கு முன்வரும் எந்த அரசியல் கட்சிக்கும் அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் ஆதரவளிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ்தலைவர் கேர்ணல் ஜி. ரணதுங்க இத்தகவலை வெளியிட்டார். (ஒ-எ)

### தேர்தலில் ருக்மன் கட்சியும் போட்டியிடும்

கொழும்பு செப்.10
அடுத்தநாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ருக்மன் சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய இலங்கைமக்கள்கட்சி போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டது.

கேகாலையில் நடந்த கட்சிக் கருத்தரங்கு ஒன்றில் இத்தகவலைத் திரு. சேனநாயக்கா வெளியிட்டார். (ஒ-எ)

### இடை நடுவில் நின்ற வீதித் திருத்த வேலைகள்

காங்கேசன்துறை.
செப் 10
கீரிமலை நகுலேஸ்வரா வீதி செப்பனிடும் வேலைகள் தடைப்பட்டுள்ளதால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாமல் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

பன்முகரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்து பணம் ஒதுக்கப்பட்டு செப்பனிடும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ஆனால் சில தடைகள் ஏற்பட்டதால் வேலைகள் இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ளன. (இ-68)

---

## வெற்றிடம்

**பிளேற்றின் மெசின் ஒபரேட்டர்**

15 ஆம் நம்பர், 2 ஆம் ஒழுங்கை மின்சார வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள, உதயன் அச்சகத்தில் மேற்குறிப்பிட்ட வெற்றிடம் நிரப்ப இருப்பதால், தகைமை உடையோர் நேரில் வரவும்.

(C/147)

---

## பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் சீ வசீகரன்**

திரு. சிவரெத்தினத்தின் அன்புமகன் வசீகரன் இன்று தனது ஏழாவது பிறந்த தினத்தை சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அப்பம்மா, பெரியப்பா சித்தப்பா, அத்தைமார் மற்றும் உறவினர்கள் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

கோண்டாவில் வடக்கு.
சிவகாமி அம்மன் கோயிலடி,
கோண்டாவில்.

[6316]

---

# NEW MASTER INSTITUTE

**1st Lane, Power House Road, JAFFNA.**

**89 DAY CLASSES**

கலை, வர்த்தகம்

**ஆரம்பம்: 12-09-88** திங்கள் காலை 7-30 மணி

| | | |
|---|---|---|
| Economics | — 7-30 | திரு. சின்னத்தம்பி |
| Accounts | — 8-30 | திரு. ராஜன் |
| Commerce | — 9-30 | திரு. தேவா |
| Logic | — 10-30 | திரு. சந்திரராஜா |
| Accounts | — 11-30 —2 30 (Monday) | திரு. யோகராஜா |

(C-1 3)

---

## பகிரங்க ஏல விற்பனை

பண்டத்தரிப்புப் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான பின்வரும் வாகனங்களும், மற்றும் இயந்திரங்களும் 18/09/1988 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு மாதகல் றோட்டிலுள்ள மொத்த விற்பனை நிலைய முன்றலில் பகிரங்க ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் கீழ்க் குறிப்பிட்ட பொருட்களை சங்க வேலை நாட்களில் மொத்த விற்பனை நிலயத்தில் பார்வையிடலாம்

லொறி — இன்ரநஷனல் இல. 24ஸ்ரீ3309
கார் — ஏ-40 இல. ஈவை 2306
மின் ஒட்டும் இயந்திரம் — 01 தனி (Welding Machine)
துவிச்சக்கர வண்டிகள் — 04 தனி
பாவிக்கப்பட்ட பழைய ரயர்கள் (லொறி, வான்)
நீரிறைக்கும் இயந்திரம் — மார்க் 12- சிக்மா

லொறி, கார், மின் ஒட்டும் இயந்திரம் ஆகியவற்றிக்கு ஏலம் கேட்போர் ருபா 25/- சங்கத்தில் மீளப் பெறமுடியாத வைப்பு இடப்படுதல் வேண்டும்.

ஏலத்தில் பெற்றவர்கள் முழுப் பணத்தையும் சங்கக் காசாளரிடம் கட்டி பற்றுச் சிட்டைக் காண்பித்துப் பொருட்களை உடன் வெளியில் எடுத்துச் செல்லல் வேண்டும். தவறின் அவரது கேள்வி நிராகரிக்கப்படும்

மேற்படி ஏலத்தில் பெற்ற கூறு விலையை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சங்கத்திற்கு உரிமையுண்டு. இவ் ஏல விற்பனை சம்பந்தமாக எவ் விடயத்திலும் சங்கத்தின் தீர்ப்பே இறுதியானதாகும்.

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

05-09-1988 (C/145)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இயற்கை வாழ்வே சிறந்த வாழ்வு"
நுளம்புத் தொல்லையை நீக்கி விட்டுத்
தூய்மையைத் தரவல்லது

"நீம் சுகாதார தூபம்"
ஒரு பைக்கற் விலை
ரூபா ஒன்று மட்டுமே.

இது ஓர் மில்க்வைற் தயாரிப்பு.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

10 - 09 - 1988 சனிக்கிழமை

நல்லூர்க் கந்தசாமி கோவில் வீதியில்
"மில்க்வைற் சகாயம்"
மில்க்வைற் தயாரிப்புக்கள்
இருபது ரூபாவுக்கு வாங்குவோருக்குப் பொலீத்தீன் பையில் அழகிய முருகன் ஸ்ரிக்கர் உட்பட கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும். இன்னும்
மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதியான பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்
நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும் "மில்க்வைற்"
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

+
J. M. J
உங்கள் பயண அமைப்பாளர்
**S. P. ANTON**
மகிழ்ச்சியுடன் வழங்கும்
வெளிநாட்டுப்
பயண ஒழுங்குகள்

செல்வம் கொழிக்கும்
குவைத் நாட்டில்
ஆஸ்பத்திரி, பாடசாலை
மற்றும் பொது அலுவலகங்களில்
சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக
**CLEANERS**
ஆகப் பணியாற்றுவதற்கு விரும்புகிறீர்களா?
இதோ ஓர் அரிய வாய்ப்பு!
கடவுச்சீட்டு இல்லாதவர்களுக்கு அதற்கு உரிய ஒழுங்குகளைச் செய்து அடுத்த பத்து நாட்களுக்குள் பயணம் செய்வதற்கான
உடனடிப் பயண ஒழுங்குகளைச் செய்து கொடுக்கிறோம்.
சம்பளம்: 35—40 குவைத் டினார்கள்
உணவு, உறைவிடம் இலவசம்
மற்றும் சகல விபரங்களுக்கும் உடனடியாக நேரில் தொடர்பு கொள்ளுங்கள்
உங்கள் பயண அமைப்பாளர்
S. P. அன்ரன்
No. 648½ ஆஸ்பத்திரி வீதி,
காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக
யாழ்ப்பாணம்.
( C/132 )

## படையினர் . . .

மனித உரிமை மீறல் சம்பவங்களைத் தடுக்க வேண்டும் என்றும், இப்போது நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இலங்கை அரசிடம் மன்னிப்புச் சபை வற்புறுத்தி இருக்கிறது.

### அம்பலம் ஆதாரம்

இந்தத் தகவல்கள் மன்னிப்புச் சபையின் ஆகப் பிந்திய ஆகஸ்ட் மாத அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையில்— 1983 ஜூலைக்கும் 1987 ஜூலைக்கும் இடையில் 685 தமிழர்கள் "காணாமற்போன"தற்கு இலங்கைப் பாதுகாப்புப் படைகளே பொறுப்பு என்று சர்வதேச மன்னிப்புச் சபை கருதுகிறது. காணாமற் போனவர்களின் பெயர், விவரங்கள் சபையிடம் பூரணமாகக் கைவசம் உள்ளன.

"காணாமற்போன"வர்கள் விசாரணையின் போது சித்திரவதை செய்யப்பட்டார்கள் என்பதற்கும், அவர்களில் பலர் சுடப்பட்டு, சடலங்கள் இரகசியமாகப் புதைக்கப்பட்டன என்பதற்கும் எம்மிடம் ஆதாரங்கள் உள்ளன. -என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அறிக்கை தரும் மற்றும் முக்கிய தகவல்கள் வருமாறு:-

★ இலங்கை- இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர், மன்னிப்பு வழங்கி விடுதலையான பலர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த வேளை தாம் சித்திரவதை செய்யப்பட்டதாக உறுதிப் பத்திரம் தந்துள்ளார்கள்.

★ ஒப்பந்தம் விடுதலைக்கு வகை செய்த போதிலும் சுமார் 650 தமிழர்கள் இன்னும் விடுவிக்கப்படாமல் சிறையில் வாடுகிறார்கள்.

★ 1987 ஜூலைக்குப் பின்னர் நூற்றுக்கணக்கான சிங்களவர் (ஆண்களும், பெண்களும்) அனேகமான ஜே.வி.பி உறுப்பினர் கைது செய்யப்பட்டு, வழக்குத் தொடரப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

★ 1987 ஜூலைக்குப் பின்னரும் இலங்கையில் மனித உரிமைகள் பெரிய அளவில் மீறப்பட்டு வருகின்றன.

★ இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்ட தமிழர்களில் சிலரும் வடக்கில் காணாமல் போய் உள்ளனர்.

இந்திய அமைதிப் படையின் முறைகேடுகள் சம்பந்தமான அறிக்கைகளை சர்வதேச மன்னிப்புச் சபை இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் இந்திய அமைதிப் படையின் உறுப்பினர்கள் கற்பழிப்பு, கொடுமைப் படுத்தல். நிராயுதபாணிகளான பொதுமக்களை பழிவாங்கல் நடவடிக்கைகளில் கொலை செய்தல் ஆகிய மனிதஉரிமை மீறல் செயல்களுக்கு பொறுப்பாக இருந்தார்கள் என்றும் அறிக்கைகள் கிடைத்துள்ளன,

(அ-ஐ)

## இடைக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக முறையை அமுலுக்குக் கொண்டு வரப்போவதாகவும் இடைக்காலத் தலைவர் யூநூ தெரிவித்தார்.

திரு. யூநூ இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னர் பிரதமராக பதவி வகித்தார்.

ஜெனரல் நீவின் நடத்திய ராணுவப்புரட்சியில் திரு.யூநூ பிரதமர் பதவியை இழந்தார்.

மொங்மொங் தலைமையிலான அரசு, இடைக்கால அரசு பிரகடனம் செய்யப்பட்டது பற்றி கருத்து எதுவும் வெளியிடவில்லை. (ஓ-எ)

## ஐ.தே.க....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ணமாக இருந்தது.

ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தலில் இ. தொ. கா. வின் கூட்டு ஐ தே. க. விற்கு இன்றியமையாதது.

இந் நிலையில் இத்தேர்தல்களுக்கு முன் இரு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படுமா என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்படுகிறது.

இ. தொ. கா. இத் தேர்தல்களில் யாரை ஆதரிப்பதென இது வரை முடிவு செய்ய வில்லை. (ஓ-21)

## விரிவுரை....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

களோ உற்சாகம் ஊட்டுவதாக இல்லை.

எமது பல்கலைக்கழகத்திலிருந்து சித்தியடைந்து நாட்டில் பல்வேறு பகுதியிலும் உள்ள எமது மாணவர்களே இங்கு வந்து கடமை புரியத் தயங்குகின்றனர்.

இந்த நிலையில் நாம் ஏனையோரிடமிருந்து எவ்வாறு விண்ணப்பங்களை எதிர்பார்க்க முடியும்.

தற்போது இங்குள்ள பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் தமது முழுச்சக்தியையும் பயன்படுத்தி உழைத்து வருகின்றனர்.

அதனால் பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் மருத்துவ மாணவர்களுக்கான வகுப்புகளை நடாத்தி வருகின்றோம்

இருந்தும் மருத்துவ மாணவர்களின் கிளினிக்கல் பயிற்சி வகுப்புகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஓ-ஐ)

## இணைப்புக்குழுக் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,செப் 10

வடக்கு கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுக் கூட்டம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும்.

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள பிரசைகள் குழுவினர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகும்

(ஓ)

## செட்டி....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவந்து விசாரணைகள், தேடுதல்களை நடத்தினர்.

செட்டிகுளம் ரயில் நிலைய அதிபர், ஊழியர்கள், உட்பட அங்கிருந்தவர்கள் பலரும் தாக்குதலுக்கு உள்ளானார்கள் எனக் கூறப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டதனால் செட்டிகுளம் பகுதியில் சில மணிநேரம் பதற்றம் நிலவியது. (ஓ 164)

## நல்லூரில் இன்று பரிசளிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

யாழ் மாநகர சபை நடத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு இன்று பரிசில்கள் வழங்கப்படும்

நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள சுகாதார அலுவலகத்தில் பரிசளிப்பு இடம்பெறும்

(ஓ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்லப்பா மீனாட்சிப்பிள்ளை

மலர்வு : 13-12 1922

உதிர்வு : 11-08-1988

திதி: 10-09-1988

அன்பாய், பண்பாய், பாசமாய் எம்முடன் இருந்து எம்மைவிட்டுப் பிரிந்த அன்பின் சுடரே! உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடையதினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

'கவிதா வாசா'
காழ்வை,
மாவிட்டபுரம், தெல்லிப்பளை (6335)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
24 07 1913

இறைவன் அடியில்
29 08 1981

திதி.
10-09-1988



### அமரர் டாக்டர் சின்னப்பு சின்னையா (R M P)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்ப் பிரகாசித்து மனிதகுலத்தின் மதிப்பிடமாயும் எம்குலத்தின் வழிகாட்டியாயும் திகழ்ந்த தெய்வமே! வெள்ளி மறைந்தது போல் மறைந்துஎங்களை ஆறாத்துயரில்விட்ட அன்புத் தந்தையே! நீங்கள் இறைவனடியில் மறைந்திருந்தாலும் எங்கள் உள்ளத்தில் என்றென்றும் வாழ்ந்திருப்பீர்கள்.

ஐயா, உங்கள் ஆத்மா சாந்தியடைய நல்லைக் கந்தனின் தீர்த்தோற்சவமான இன்று பிரார்த்திக்கும்,

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

காரைநகர். [6341]

## மரண அறிவித்தல்கள்

### திரு. த. சிவக்கொழுந்தர்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

மயிலிட்டி தெற்கு-கட்டுவனைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. த. சிவக்கொழுந்தர் காலமாகிவிட்டார். இவர் அன்னம்மாவின் அன்புக்கணவரும் Dr. தியாகராஜா (U. K.), தவராஜா (T A. Irrigation Dept.), சிவதாசன் (Simulator Engineer, U S A.), குகதாசன் (C T B ). தேவராஜா (Electrical Engineer, Lanka Cement Ltd.- K K.S.), திருமதி விமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி Dr. கலைவாணி (U.K.). திருமதி சாந்தினி, திருமதி விஜயகுமாரி (U S.A ), திருமதி சத்தியபாமா, திருமதி கௌரி, சி புவனச்சந்திரன் (Proprietor-Sinnathurai & Bros ) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரமேஷ், ரம்ஜா, ரஞ்ஜித், நீரஜா, லாவண்யா, தர்ஷிகா, நிஷான், நிரேஷ், சிந்துஜா, சஞ்ஜீவ், சுபத்திரா ஆகியோரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்ற ஆ த. சுப்பிரமணியம், பொன்னம்மா, இராசம்மா, ஆ. த. நடராஜா ஆகியோரின் சகோதரருமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-9-88 சனிக்கிழமை (இன்று) காலை 10-00 மணியளவில் 224/14, பிறவுண் றோட் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காகப் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

224/14, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம் (6487)

### திரு. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(மணியம் பிரபல வர்த்தகர்)

திருவாளர் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் 8-9-88 அன்று அகால மரணமெய்தினார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி கணபதிப்பிள்ளை அவர்களின் கனிஷ்ட புதல்வனும் திரு. க. சின்னத்துரை (மானிப்பாய் பிரபல வர்த்தகர்), திரு. க. இராசதுரை (குடிவரவு குடியகல்வு இளைப்பாறிய உதவிக் கட்டுப்பாட்டு அதிகாரி), திரு. செல்வரத்தினம் (வர்த்தகர்), திரு. குமாரவேலு (பொறியியலாளர் நீர்ப்பாசன இலாகா), அன்னலக்ஷ்மி, சரஸ்வதி, மகேஸ்வரி, குணமணி, நாகேஸ்வரி, செல்வி தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும். திருவாளர்கள் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம். வைத்திலிங்கம், பரராஜசிங்கம், கந்தசாமி, குமாரசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் அவரது மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 10-9-88 சனிக்கிழமை பிற்பகல் 1மணியளவில் பிப்பிலிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: சகோதரர்கள்.**

மார்க்கட் லேன்,
மானிப்பாய். (6169)

### ஆறுமுகம் கேதாரநாதன்

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ் சென்ற ஆறுமுகம் சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகன் கேதாரநாதன் (சங்கத்திணைக்களம்) 9- 9- 88 இல் காலமாகிவிட்டார். அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும் வசந்தன் (இந்துக் கல்லூரி), விமலன் (சென் பற்றிக்ஸ்). ஜோன் சுதர்சினி (சுண்டுக்குளி)விசாகன் ,(வேலணை மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சாம்பசிவம் காந்திமதியின் அன்புச் சகோதரரும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். தகவல்:-

(6198) க. அரசன்

ஆங்கிலத்தில் பேச வேண்டும்
என்ற விருப்பம்-
ஆனால் தவறாகப் பேசி
விடுவோமோ என்ற தயக்கம்-
இதுதானே
உங்களது பிரச்சினை?
பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது. இதற்கான காரணம் நாம் பாடசாலைகளில் படித்தது
WRITTEN ENGLISH
ஆனால் நடைமுறையில் நாம் பிறரிடம் உரையாடத் தேவைப்படுவது
SPOKEN ENGLISH
எனவே முறையான பயிற்சி இருந்தால் யாருடனும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்.
இதனைக் கருத்திற்கொண்டு
BRIGHT TRAINING CENTRE
நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச் சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்துகிறார்கள்.
உளவியல் அடிப்படையில்,
மிக மிகப் புதுமையான முறையில்
SPOKEN ENGLISH
பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம்.
விபரங்களுக்கு முத்திரையொட்டிய சுய விலாசத்துடன் தொடர்பு கொள்க.
BRIGHT
TRAINING CENTRE
P. O. Box 162, Colombo.
(6264)

தேரேறி வரும் நல்லூர்க் கந்தன் எல்லோருக்கும் அருள் பாலிக்கப் பிரார்த்திக்கின்றோம்.
NEW MASTER
INSTITUTE
B. M. C. LANE, JAFFNA.
89 A/L
DAY CLASSES
ஆரம்பம் 14-09-88
புதன் காலை 7-30 மணி

| | |
|---|---|
| ZOOLOGY | 7-30 — 8-30 a.m. |
| CHEMISTRY | 8-30 — 9-30 a.m. |
| PHYSICS | 9-30 — 10-30 a.m. |
| BOTANY | 10-30 — 11-30 a.m. |
| PURE & APPLIED MATHS | 10-30 — 12 30 p.m. |

(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)
★ கடந்த ஆண்டுகளில் முழுப்பாடத் திட்டமும் குறித்த காலத்தில் முடித்த ஒரேகல்வி நிறுவனம். ★ (C-117)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Saturday 10th September 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாகரிகத்திற்கேற்ப
★ பிறிடைம் ★ பாட்லி
★ திமோட் கொன்றேல்
★ அக்கினி நட்சத்திரம்
மற்றும் எல்லா வகையான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும் யாழ்நகரில்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி
சஞ்சிகை
10-09-1988 சனிக்கிழமை

★ பகி சேட்ஸ் ★ ஸ்கேட் & பிளவ்ஸ்
★ புறக்ஸ் ★ பேபி சூட்ஸ்
★ லேடீஸ் பகி பிளவ்ஸ்
அனைத்திற்கும் யாழ்நகரில்
புதிய ஓர் சங்கமம்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

## கருத்துக் கலசம்

மயூரா

### தொழில் மகத்துவம்

செய்யும் தொழிலே தெய்வம்.

ஒருவன் தான் செய்யும் தொழிலை விசுவாசமாகவும், பற்று வைத்தும், முழு மனதுடனும் செய்ய வேண்டும். கடவுள் மீது பக்தி வைப்பது போல, தொழில் மீதும் பக்தி வைக்க வேண்டும். அதனாலேயே தொழிலைத் தெய்வத்தின் மட்டத்திற்கு உயர்த்தினார்கள்.

ஆன்மாவுக்குப் பற்றுக்கோடாக விளங்குபவன் ஆண்டவன். வாழ்க்கைக்குப் பற்றுக்கோடாக விளங்குவது தொழில். ஆகையால் மனித வாழ்க்கையில் தொழில் மகத்துவம் மிக்கது, தன்நிகர் இல்லாதது.

தொழிலின் மகத்துவம் தெரியாது, அதனை உயர்ந்த தொழில், குறைந்த தொழில் என்று பிரித்துப் பார்க்கும் தன்மை, வகுத்துப் பார்க்கும் வழக்கம், மனிதரிடையே வளர்ந்து விட்டது.

தெய்வங்களில் உயர்ந்த தெய்வம், தாழ்ந்த தெய்வம் என்று இல்லை. ஆனால் தொழில்களைத் தாழ்ந்தவை, உயர்ந்தவை என்று பிரித்துப் பார்க்கிறான் மனிதன். அது போதாக்குறைக்கு, தொழிலைக் கொண்டு மனிதனையும் சாதி பிரித்து விட்டான்; இதுகேவலம்!

ஒவ்வொரு தொழில் மூலமும் கிடைக்கும் வருமானத்தை அடிப்படையாக வைத்தே உயர்ந்த தொழில் தாழ்ந்த தொழில் என்ற மதிப்பீடு செய்யப்படுகிறது.

ஒரு தொழில் செய்பவர், அடுத்த தொழில் செய்தால் மரியாதைக் குறைவு என்ற மூடத்தனமான அபிப்பிராயமும் வளர்க்கப்பட்டுள்ளது. தொழில்கள் யாவும் மனிதனின் தேவைகளை அடியொற்றி எழுந்தவையே.

அதனை உணராது தனது தொழிலைப் பெரிதாகவும், பிறர் தொழிலை இழிவாகவும் கருதும் வேண்டாத போக்கு சமூகத்தில் உறைந்து நிலைத்துவிட்டது. அந்த நிலைப்பாட்டை மாற்றவேண்டும்,

சம்பளத்துக்கு அல்லது வருமானத்துக்கு ஏற்றவாறு தொழிலை வரிசைப்படுத்தியும். வகுத்து வைத்தும் பார்ப்பது ஆகாது. ஒரு தொழில் செய்பவரின் சம்பளம் அல்லது வருமானம் குறைந்திருந்து. பின்னர் உயரும் போது தொழிற் சிறப்பும் உயர்ந்து விட்டதாகக் காட்ட நினைப்பதும் தவறு.

குறைந்த வருமானத்தின் மத்தியில் அந்தத் தொழில் சிறப்புடையது, மகத்துவமானது என்று நிலைநாட்ட, அபிப்பிராயத்தை உருவாக்க முனைவதே நல்லது.

தொழிலை மதிக்கும் தன்மை, அவற்றின் மகத்துவத்தைப் பேணும் தன்மை இளமையில் இருந்தே வளர்க்கப்பட வேண்டும். சிரமதானம், கூட்டுத்தொண்டு ஆகிய துறைகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் தொழில் மகத்துவம் பேணும் பழக்கத்தை அவர்களிடையே வளர்க்கலாம்.

# ஸ்ரீராம பட்டாபிஷேக அரங்கில் இலட்சுமணன் ஏன் சிரித்தான்?

மனிதன் சிரிப்பதற்கும் அழுவதற்கும் இடம், நேரம் உண்டு.

இடத்திற்கும் நேரத்திற்கும் பொருத்தம் இல்லாமல் செய்யப்படும் செயல் மற்றவர்களால் நவறுகப் பொருள் கொள்ளப்படும் என்பதோடு அல்லாமல் பெரும் குழப்பங்களையும் விளைவிக்கும்.

ஸ்ரீராமன் தந்தையின் ஆணைப்படி பதினான்கு ஆண்டுகள் வனவாசம் மேற்கொண்டு சீதாதேவியுடனும், லட்சுமணனுடனும் கானகம் சென்றான்.

வனத்தில் இலட்சுமணன் அவர்களுக்காகப் பர்ணசாலையைக் கட்டினான். பகலில் ஸ்நானத்திற்கான தண்ணீர் கொண்டு வந்தான். உணவுக்காக காய்கனிகளைச் சேகரித்தான்.

இரவில் அண்ணனுக்கும் தேவியாருக்கும் பாதுகாப்பாக உறங்காமல் விழித்திருந்தான்.

பதினான்கு ஆண்டுகள் கடந்தன. இராவணன் சீதையைச் சிறைப்படுத்தியது. வானர சேனையுடன் ஸ்ரீராமர் இலங்கை சென்று அசுரர்களைக் கொன்று சீதையை மீட்டது - அயோத்தி சென்று பரதனிடமிருந்து ராஜ்ய பாரத்தைப் பெற்றுக்கொண்டது எல்லாம் நடந்தன.

பட்டாபிஷேகத்துக்கு நாள் குறிக்கப்பட்டது. மக்கள் குதூகலிக்க வசிஷ்டரால் குறிக்கப்பட்ட அந்தநாளும் வந்துவிட்டது.

பட்டாபிஷேக அரங்கில் அனைவரும் அவரவரது இருக்கையில் அமர்ந்தனர். மங்கள நாதம் முழங்க, வேதங்கள் ஒலிக்க, முதிர்ந்த பெண்மணிகள் தெய்வகீதங்களைப் பாட வசிஷ்டப் பெருமான், ஸ்ரீராமர் — சீதை இருவருக்கும் நெற்றியில் திலகம் அணிவிக்க இதர பெரியோர்கள் அட்சதையிட்டு ஆசீர்வதித்துக் கொண்டிருக்கும் நேரம்.

இலட்சுமணன் தான் எத்தனையோ காலங்களாகக் கனவு கண்டு கொண்டிருந்த காட்சியைக் காண ஆவலோடு இருந்தான்.

திடீரென்று லட்சுமணனின் கண்கள் சோர்ந்துவிழ அவனால் கட்டுடபடுத்த முடியாதபடி பெரியதொரு கொட்டாவியும் வந்தது. அவன் காதுக்கு மட்டும் கேட்கும்படி ஓர் குரல் கேட்டது.

''லட்சுமணா! இத்தனை ஆண்டுகாலம் உன் விருப்பப்படி உன்னை நெருங்காமல் இருந்தேன். இப்போது என்னிடம் வாக்களித்தபடி என்னை ஆட்கொள்ள வேண்டும்—' இதுவே அந்தக்குரல்.

**சிரிப்பு**

அவ்வளவுதான், அனைவரும் கேட்கும்படி இலட்சுமணன் சிரித்துவிட்டான்.

**- சுவாமி சின்மயானந்தர் -**

சபையில் அனைவரும் திடுக்கிட்டனர்.

லட்சுமணன் ஏன்சிரித்தான்?

சபையில் கூடிய மக்கள் மனதில் பல சந்தேகங்கள் தோன்றின.

ஸ்ரீராமர் நினைத்தார்:

'நான் பலவருடங்கள் இராவணனிடம் சிறைப்பட்டிருந்த சீதையை மீட்டுவந்து இன்று வெட்கமில்லாமல் அவளை அருகில் அமர்த்திப் பட்டாபிஷேகம் செய்துகொள்வதை எண்ணித்தான் இலட்சுமணன் சிரிக்கிறான்'—

சீதை எண்ணினாள்:

'நான் இராவணனிடம் சிறைப்பட்டு இருந்தும் இன்று ராமன் அருகில் மகாராணியாக அமர்ந்திருப்பதை எண்ணித்தான் இலட்சுமணன்சிரிக்கிறான்.'—

கைகேயி சிந்தித்தாள்:

'நான் ராமனை பதினான்கு வருடம் வனவாசம் அனுப்பிவிட்டு இன்று வைபவத்தில் மகிழ்ச்சியுடன் இருப்பதாக நடிக்கிறேன் என்று எண்ணியே இலட்சுமணன் சிரிக்கிறான்'—

குலகுருவான வசிஷ்டர் நினைத்தார்:

'நான் முன்பு நிச்சயித்த நாளில் பட்டாபிஷேகம் நடக்காமல் ராமன் வனவாசம் சென்றும், நான் வெட்கமில்லாமல் மீண்டும் நாள்குறித்து பட்டாபிஷேகம் நடத்துகிறேன் என்று எண்ணியே இலட்சுமணன் சிரிக்கிறான்'—

அங்கு கூடியிருந்த நாட்டு மக்கள் பலரும் பலவிதமாக எண்ணினர்.

அனைவரது எண்ண ஓட்டங்களையும் கண்ணுற்ற ஸ்ரீராமன் சினங்கொண்டார்.

தனது இருப்பிடத்திலிருந்து எழுந்து இலட்சுமணனைப் பார்த்து, 'லட்சுமணா! இந்தச் சிரிப்பிற்கு என்ன காரணம்—?' என்றுகேட்டார்.

**சிரித்த காரணம்**

ஆழ்ந்த யோசனையில் இருந்த இலட்சுமணன் சிரிப்பினால் ஏற்பட்ட விளைவுகளை அறியவில்லை.

ஸ்ரீராமனின் கர்ஜனை கேட்டுத் திடுக்கிட்டான்.

ஸ்ரீராமனிடம் பணிவோடு, 'அண்ணா,

வனவாசத்தின்போது உங்களுக்கும் தேவியாருக்கும் பாதுகாப்பாக உறங்காமல் இருந்தது நித்திராதேவிக்குப் பொறுக்கவில்லை. ஸ்ரீராமன் உட்பட சகல ஜீவராசிகளும் எனக்கு அடிமையாகி இருக்க நீ மட்டும் விதிவிலக்கா? என்று கூறி என்னைத் தன் வயப்படுத்த நித்திராதேவி எவ்வளவோ முயன்றும் பலிக்கவில்லை. முடிவில் தன் தோல்வியை ஒப்புக் கொண்டாள்.

பதினான்கு ஆண்டுகள் அவள் என்னை அணுகுவது இல்லை என்றும், அயோத்திக்குத் திரும்பிச் சென்றதும் தன்னை நான் தடுக்கக்கூடாது; என்னை அணுகும் நேரம், இடம் இவற்றைத் தன் முடிவுக்கே விட்டுவிட வேண்டும் என்றும் அவள் கேட்டுக் கொண்டாள்.

நானும் அதற்கு ஒப்புக் கொண்டேன்.

எல்லோரும் ஆவலோடு காத்திருந்த இந்த ஸ்ரீராம பட்டாபிஷேக முகூர்த்தத்தில் தூங்குவதா?

அந்தப் பட்டாபிஷேகக் காட்சியைக் காணவிடாமல் செய்யும் நித்ராதேவியின் விஷமத்தை எண்ணத்தை நினைத்து என்னால் சிரிப்பைக் கட்டுப்படுத்தமுடியவில்லை, சிரித்துவிட்டேன். பொறுத்தருள்க!

இப்படி இலட்சுமணன் சொன்னான்.

இலட்சுமணனின் பதினான்கு ஆண்டு சாதனையைச் சபையோர் புகழ்ந்தனர். ★

# பாரதி வெறும் வழிகாட்டியல்ல; வாழ்ந்து காட்டியவன்

'புதியன விரும்பு',

'பெரிதினும் பெரிது கேள்'—

இது பாரதி வளரும் தமிழினத்துக்குக் காட்டிய வழி.

பாரதி வெறும் வழிகாட்டியல்ல; வாழ்ந்து வழிகாட்டியவன்.

அவன் தனது சாதனையை,

'சுவை புதிது,
பொருள் புதிது,
வளம் புதிது, சொற்புதிது,
சோதி மிக்க
நவ கவிதை எந்நாளும்
அழியாத மாகவிதை'—

என்று நெஞ்சு நிமிர்த்திப் பெருமைப்பட முழக்கினார்.

'மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்' என்றான்:

'பாட்டுத் திறத்தாலே, இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்றான்.

'நாநில மாந்தருக்கெல்லாம் நன்றி, ஒன்றிய அன்பில் ஓங்குதல்' என்றான்.

'வேதம் புதுமை செய்!'

'வையத் தலைமை கொள்!'—

என்று அவன் நமக்குக் கம்பீரமாக ஆணையிடும்பொழுது, புதுமையிலும் புதுமையைக் காட்டுகிறான்.

**கூட்டுமேதை**

இந்தப் புது உலகச் சிற்பி வள்ளுவனுக்கும் கீதாசாரியனுக்கும் கூட்டுமேதை விலாசத்தில் தெள்ளிய வாரிசாக விளங்குகிறான் என்பதோடல்லாமல் புதிய ஜனநாயகத்தின் ஒப்பற்ற குழந்தையாகவும் சுடர் விடுகிறான்.

ஷெல்லி, வால்ட்விட்மன், தாகூர், இக்பால், மாயக்காவ்ஸ்கி ஆகிய கவிப் பேரரசர்கள் தரத்தில், மாற்றுக் குறையாமல், வரிசை தப்பாமல் அணிவகுத்து நிற்கிறான்.

தனது சிறப்பியல்பைக் காட்டுவதில் எவருக்கும் இளைத்தானில்லை. அவர்களைப் போல் பாரதியும் காலத்திலும் வாழ்ந்தான்; காலத்தைத் தாண்டியும் வாழ்கிறான்.

பழைமையின் சிறந்த கூறுகளைத் தன்மயப்படுத்தினான் என்பது மெய். ஆனால் பாரதியின் ஆத்மமையம் புதியமையம் புதிய முறைதான். தன் காலத்தில் தன்னேரிலாத பிரதிநிதி முறைதான்.

முக்காலத்தையும் உயிர்த்துள்ள இணைக்கும் உலகு தழுவிய கூட்டுமுறை, பாரதி முறை.

**உண்மை ஒளி**

உள்ளத்தின் உண்மை ஒளியால் வாக்கினில் ஒளி உண்டாக்கியவன் பாரதி. நாடினான் இடையுறாத முயற்சி முழுமையைநாடி, தனது இரு கரங்களையும் விரித்துத் தாவித் தாவிச் செல்ல, உண்மையை நாடினான்.

இயற்கை வாழ்வு, சமுதாய வாழ்வு, மனவாழ்வு என்ற முக்கூறு கொண்ட வாழ்க்கை நூலைப் பாரதி தனக்கே உரிய முறையில் படித்தான்.

அதன்விளைவாக—கலை இலக்கிய தத்துவங்களை-கோட்பாடுகளைத் தனக்கு உகந்த முறையில் புதுமை செய்துகொண்டான்.

உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தமிழ். இலக்கியத்தில் பாரதிரகம், புதுரகம் – தனிரகம். காலம் பெருமைப்பட படையல்களை அருளினான்.

பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு ஆகியவை மட்டுமல்ல, தனிப் பாடல்களும் பக்திப் பாடல்களும் புதிய சகாப்தத்தின் புதுமுத்திரை தாங்கிப் பிறந்திருக்கின்றன.

தன்னை வெளியிடுவதற்கும், உலகத்தைப்பற்றி தனது மனப்பான்மையை வெளியிடுவதற்கும் மாத்திரமல்ல, இலக்கியம் பாரதிக்குத் தேவைப்பட்டது; கலையின் சேனையர் குறிக்கோளான மனிதப் பெருங்கடலுக்கு ஊழியம் புரிவதற்கும் இலக்கியம் அவனுக்குத் தேவைப்பட்டது.

பாரதி, கலைஞன் வாழ்வைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறான். இணக்கமாகவும் துல்லியமாகவும் வெளியிடவேண்டும் என்கிறான். பல்லலங்காரப் பண்புகளால், ஆனந்தக்கனவுகள் காட்டி மகிழ்விக்கவும் வேண்டும்; உள்ளத்தை உருக்கவும் வேண்டும் என்கிறான்.

ஒரு சிறந்த கலைஞன், சென்ற காலத்தை விளக்கிக் கூற வேண்டும்; நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளவேண்டும்; எதிர்காலத்தை ஊடுருவிப் பார்க்கவேண்டும்.

நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளவேண்டுமானால் காட்சித் தெளிவும், வாக்கியத் தொடர்போன்ற சரித்திர பூர்வவளர்ச்சியும் கலைஞனுக்கு இருக்கவேண்டும்.

சென்றகாலம், நிகழ்காலத்தில் உள்ள பல முரண்பாடுகளைப் புரிந்துகொள்ளவும், இதன் உட்சாரத்தை அறிந்துகொள்ளவும் உதவும், இன்றைய வாழ்வுக்குத் தீர்வு காண, எதிர்காலத்தை ஊடுருவிப் பார்க்கிற கலைஞனுக்குத் தான்முடியும்.

பாரதியின் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' பாட்டு சென்ற காலத்தைப் பற்றிய அவன் அறிவுவிளக்கத்திற்கு எடுத்துக்காட்டு.

நிகழ்காலத்தைப் பற்றிய பாரதி அறிவு 'நெஞ்சு பொறுக்குதில்லையே' பாட்டில் முரசடிக்கிறது.

வருகின்ற பாரதத்தில் அவனுடைய எதிர்காலக் காட்சி சுடர் விடுகிறது.

'ஒற்றுமைக்குள் உய்யவே
ஒரு பெரும் செயல் செய்வாய்
வா, வா. வா.'

**பாரதியும் கோர்க்கியும்**

உணர்ச்சிப் பெருங்கடலும் எழுத்துக் கலைஞனுமான ஸ்டீபாலஸ்விக், மாக்ஸிம் கோர்க்கியைப் பற்றிக் கூறினார்.

'.....கோர்க்கியின் நினைவு ஆற்றல் நமது சகாப்தத்தின் உண்மையான சில அற்புதங்களில் ஒன்று.

''கோர்க்கி தீட்டிய சித்திரங்களை வரைவதில்லை அவன் வெளிச்சத்தை அதிகப் பிரகாசமாக்குவதோ, இருட்டை அதிக அடர்த்தியாக்குவதோ கிடையாது. கோர்க்கி தெளிவாக உண்மையையே பார்க்கிறான்.''

மாக்ஸிம் கோர்க்கிக்குச் சூட்டும் இந்தப் புகழ்மாலையில் விடாமல் வற்புறுத்தப்படும் கருத்து என்ன? கோர்க்கியின் எழுத்துப் படையல்களில் காணக்கிடக்கும் 'நிகரற்ற உண்மையும் இணையற்ற தெளிவும்' ஆகும்.

தமிழ்நாட்டுக் கோர்க்கியான பாரதிக்கும் இந்தப் புகழ்மாலையை நாம் பெருமையுடன் சூட்டி மகிழ முடியும். அவனுடைய இலக்கியம் முழுவதிலும் 'நிகரற்ற உண்மையையும் இணையற்ற தெளிவையும்' பொதிந்து தரும் நன் முயற்சியின் அடிச்சுவடுகளைக் காணலாம். ★

மாகவி பாரதியாரின் நினைவு தினம் நாளை வருகின்றது. 11-2-1882 இல் பிறந்த பாரதியார் 11-09-1921 இல் மறைந்தார். அன்னார் பற்றி தமிழகத்தின் பழம்பெரும் பூலஸ்ட் தலைவரும் தமிழறிஞருமான அமரர் ப. ஜீவானந்தம் எழுதிய 'பாரதியைப் பற்றி' என்ற நூலில் இருந்து ஒரு பகுதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.



# கைவேலே காப்பு!

சேவல் கொடியுடையாய்
நின்
பாதம் கண்டு தாமரைகள்
நாணமிகும்,
மேனி ஒளிவீச்சில்
பவளங்கள் ஒளியிழக்கும்
நின்
சேவல் குரலாலே
உலகம் விழிக்கிறது
விழிக்கும் உலகத்தை
நின்
கைவேலே காக்கிறது.

— வேலணையூர் தாஸ்

சங்க இலக்கியங்களில் ஒன்றான 'குறுந்தொகை' காதல் சுவை சொட்டும் அகத்திணை இலக்கியமாகும்.

இவ்விலக்கிய மொழிநடை, தற்கால மொழி நடையில் இருந்து வேறுபடுவதால் யாவராலும் இதைப் படித்தின்புற முடிவதில்லை.

அவை கூறும் கருத்தினைப் புதுக்கவிதை வடிவில் எழுதினால் எப்படி இருக்கும் என்று **வேலணையூர் தாஸ்** ஆவல்கொண்டார். அம்முயற்சியே இது.

[மேலே 'புதுக்கவிதை'யில் தரப்பட்ட குறுந்தொகைப் பாடல் கீழே தரப்படுகிறது.

தாமரை புரையும் காமர் சேவடி
பவளத்தன்ன மேனி
திகழ் ஒளி
குன்றி ஏய்க்கும் உடுக்கை
குன்றின் நெஞ்சு பகவெறிந்த
செஞ்சுடர் நெடுவேல்
சேவலன் கொடியோன் - காப்ப
ஏமவைகல்
எய்தின்றால் உலகே

— குறும் 1. பெருந்தேவனார்,

(குறிஞ்சி நில மக்களின் தெய்வம் முருகன். அவன் எப்படி இருக்கிறான். பவளம் போன்ற மேனியை தாமரைப் பாதம் தாங்க, குன்றிமணி போன்ற சிவந்த ஆடையுடுத்தி, சேவல்கொடியோடு கையில் வேல் தாங்கி நிற்கிறான்—அவன் காவலில் உலகம் இன்புறுகின்றது.) ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரத்தைக் காப்பாற்றிய தாலி!

சஞ்சீவி சிறுகதை

ஓலைக் குடிசையின் மூலையில் பலகைக் கட்டையின் மேல் இருந்த பொன்னி உறக்கத்தில் இருந்த கணவனை வெறித்துப் பார்த்தாள். காலை எட்டு மணியாகியும் தலையில் இருந்து கால்வரை போர்த்து மூடிக்கொண்டு உறங்கிக்கொண்டிருந்தான் பழனி.

கடந்த பத்து நாட்களாக ஒரு வேலைக்கும் போகாது குடித்துவிட்டு சாப்பிடுவதும் உறங்குவதுமாகப் பொழுதைக் கழிக்கிறான். பொன்னி அரிசி குத்தியும், மா இடித்தும் சம்பாதிக்கின்ற சிறு வருமானத்தில் குடும்பம் நடக்கிறது. அன்றாடம் குடிப்பதற்கு சண்டை பிடித்து அவளிடம் பணம் வாங்கிவிடுவான்.

புகையிலைப்பாத்தி சாறுவதற்கு உடையார் பலமுறை சொல்லி அனுப்பியும் அவன் போகவில்லை. அவன் மண்வெட்டியைத் தொட்டே பல நாட்கள் ஆகிவிட்டன.

பொன்னிக்கு அழுகையும் வந்தது. ஆத்திரமும் வந்தது. எத்தனை நாட்களுக்கு இப்படிக் குடும்பம் நடத்துவது? கலியாணம் முடித்து இந்த ஒருவருட காலமாக இதே கதைதான். அது தொடர் கதையாகப் போய்க்கொண்டிருக்கிறது.

கல்யாணம் முடிக்கு முன்பே பழனியைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாள். 'வேலை வெட்டி எதுக்கும் போகாமல் குடித்துக்கொண்டு திரியுறான் அவனுக்கேன் பெண்ணைக் கொடுக்கிறே' என்று பொன்னியின் தாப்பனைப் பலர் கேட்டது பொன்னிக்குத் தெரியும். ஆனால் வேறு வழி இருக்கவில்லை. காணியோ, நகையோ, பணமோ ஒன்றுமே இல்லாமல் நல்லவன் கூடாதவன் என்று பார்க்கும் நிலையில் பெற்றோர் இருக்கவில்லை. தாலி கழுத்தில் ஏறினால் அவனைத் திருத்திவிடலாம் என்று நினைத்தாள். அது முடியாத காரியமாகிவிட்டது.

எழுந்துபோய் அவனைத் தட்டியெழுப்பினாள். 'எழுந்திருங்க. எம்முட்டு நேரம் நித்திரை கொள்ளுறது' என்று சொல்லி அவனை எழுப்பினாள்.

தலையை மூடியிருந்த போர்வையை விலக்கி, கண்களைக் கசக்கிவிட்டு அவளை எரித்து விடுவது போல் பார்த்தான்.

'சும்மா இருடி. வாய் கொழுத்துப் போச்சு. நித்திரைகொள்ளக் கூட விடமாட்டேங்குறாள்' என்று சத்தம் போட்டான். பின்பு மீண்டும் தலையைப் போர்த்து மூடி நித்திரை கொண்டான்.

பொன்னி ஒன்றும் பேசாது பானையை எடுத்துக்கொண்டு தண்ணி அள்ளப் போனாள். அவன் எழும்பியவுடன் தேனீர் கொடுக்கவேண்டுமே!

பொன்னியின் மனதில் கடந்த கால நினைவுகள் அலைமோதின. கல்யாணம் முடிக்க முன்பு எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தாள். அயல் வீட்டுப் பெண்கள் இவளைப் பார்த்து நதியாவின் சாயலாக இருக்கிறாள் என்று சொன்னபோது எத்தனை இன்பக் கனவுகள் கண்டாள். இப்போ எனக்கு இந்தக் கதியா என எண்ணியபோது துக்கம் அவள் நெஞ்சை அடைத்தது.

தண்ணீர்ப் பானையுடன் வந்தபோது பழனி முற்றத்தில் இருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து பீடி பற்ற வைத்துக் கொண்டிருந்தான். பொன்னியைக் கண்டதும் 'ஒரு இரண்டு ரூபா கொடு' என்றான்.

'எங்கிட்ட காசுமில்லை ஒண்ணும் இல்லை. இரு தேத்தண்ணி ஊத்திறேன்' என்றாள். பழனிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. பொன்னியை எரித்து விடுவதுபோல் பார்த்தான்.

பின்பு கொடியில் இருந்த துவாயை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வெளியே போனான்.

அவன் போன பின்பு அடுப்பை மூட்டி, பானையில் தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்துவிட்டு வெளியில் வந்தாள். சமையலுக்கு அரிசிக்கு என்ன செய்வது என்று யோசித்தாள். 'ஒரு சுண்டு அரிசி யாரிடமாவது கடன் வாங்கவேண்டும்' என்று எண்ணியவாறு பாத்திரங்களைக் கழுவினாள்.

பதினொரு மணியளவில் பழனி வெறியில் தள்ளாடிக்கொண்டு வந்தான். நேரே பொன்னியிடம் போய் 'ஏண்டி காசு கேட்டா தேத்தண்ணி தர்றேன்னு சொல்றியாடி' என்று கேட்டபடி ஓங்கித் தலையில் அடித்தான். எதிர்பாராத இந்தத் தாக்குதலினால் பொன்னி நிலைகுலைந்து தரையில் விழுந்தாள். அப்போது மஞ்சள் கயிற்றில் கட்டியிருந்த தாலி அவன் கண்ணில் பட்டது. 'கழட்டடி தாலியை' என்று கத்தியபடி அவள் கழுத்தில் இருந்து கழற்றி எடுத்தான்.

'கீழே விழுந்து கிடந்த பொன்னி எட்டி அவன் கால்களைப் பிடித்துக் கெஞ்சினாள். 'தாலியை மட்டும் வித்திடாதை. காசு தர்றேன்' என்று மன்றாடினாள்.'

'நான் கட்டிய தாலியடி. எனக்கு உதவாம வேறு யாருக்கு உதவப் போகுது?' என்று சொல்லியபடி காலை உதறிவிட்டு வெளியில் வந்து கட்டிலில் அமர்ந்தான். தாலி கிடைத்த மகிழ்ச்சியில் ஒரு பீடியைப் பற்ற வைத்துக்கொண்டு கையில் தாலியை வைத்து எவ்வளவுக்கு விற்கலாம் என்று மதிப்பீடு செய்தான்.

தரையில் விழுந்து கிடந்த பொன்னி மெல்ல எழுந்தாள். குடிசையில் கட்டியிருந்த கொடியில் இருந்து தனது இரண்டு சேலைகளையும் எடுத்து ஒரு பையில் வைத்தாள். அது தான் அவளது பொக்கிஷம். அதைக் கையில் எடுத்துக்கொண்டு குடிசையை விட்டு வெளியேறினாள்.

முற்றத்தில் பீடி குடித்துக் கொண்டிருந்த பழனி, பொன்னி பையுடன் போவதைப் பார்த்தான். 'கொப்பன் விட்டைப் போறியாடி. போ போ. திரும்பி வந்தா கால் முறிப்பன்' என்று எச்சரித்தான்.

ஒன்றும் பேசாது மௌனமாக அவனைக் கடந்து போனாள்.

பொன்னி போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த பழனி 'சனி தொலையட்டும்' என்று சொல்லியபடி குடிசைக்குள் போனான்.

சேர்ட் ஒன்றை அணிந்துகொண்டு வெளியே வந்தவன் கையில் வைத்திருந்த தாலியை ஒரு கணம் பார்த்தான். அதை அன்றைக்கே விற்றுப் பணமாக்க வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது. உடனே சைக்கிள் ஒன்றை இரவல் வாங்கி யாழ்ப்பாணம் புறப்பட்டான்.

பொன்னி கேற்றைக்கடந்து வீதிக்கு வந்ததும் மனம் தடுமாறியது, எங்கே, யாரிடம் போவது என்று தெரியாது தவித்தாள். ஏழ்மையின் பிடியில் சிக்கித்தவிக்கும் வயசான பெற்றோரிடம்போய் அவர்களுக்குச் சுமையாக இருப்பதா என்று கவலைப்பட்டாள். கொடிகாமத்தில் இருக்கும் மாமனின் நினைவு வந்தது. அங்கு போகலாமா என்று யோசித்தாள், அங்கு ஏதாவது கூலிவேலை செய்து பிழைக்கலாம். ஏன்பிழைக்கவேண்டும், யாருக்காக வாழவேண்டும், கிணற்றில் விழுந்து தற்கொலைபண்ணலாமா? அவள் மனம் பலவாறு சிந்தித்தது.

நெஞ்சம் அலைமோத, கண்கள் குளமாக கால்கள் எங்கே போவதெனத் தெரியாது நடந்துபோக கால்கள் போன வழியால் போய்க்கொண்டே இருந்தாள். பிரதான ரோட்டை அண்மிக்கவும் பஸ் ஒன்று வரவும் சரியாக இருந்தது. ஒரு முடிவுக்கு வந்தவளாய் அதில் ஏறி யாழ்ப்பாணம் போனாள்.

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில் கொடிகாமம் போவதற்காகக் காத்துநின்ற பொன்னிக்குப் பெரிய ஏமாற்றமும், திகிலுமாக இருந்தது. ஒரு பஸ்ஸும் இல்லை. என்ன செய்வதென்று தெரியாது மனம் சிக்கித் தவித்தது. காலையில் தேனீரும் குடிக்கவில்லை, சாப்பிடவும் இல்லை. பசிக்களை வேறு. உடலும் சோர, உள்ளமும்சோர நின்ற பொன்னிக்கு துக்கம் பீறிட்டுக் கொண்டுவந்தது. அழுகையை அடக்கி 'அம்மா மாரியாத்தா எனக்கொரு வழி காட்டுதாயே' என்று உள்ளம் பிரார்த்தித்தது.

ஆண்துணையின்றி, கழுத்தில் தாலியோ, வேறு நகைகளோ இன்றி நிர்க்கதியாய் நின்ற பொன்னி[illegible] ஒரு சிலர் கவனம் சென்றது. டாக்ஸி ஒன்றிலிருந்து பொன்னியைக் கவனித்த ஒருவர் நேரே பொன்னியிடம் வந்தார், 'இன்னிக்கு பஸ் இல்லை வா போகலாம் டாக்ஸியில்' என்று சொல்லி அழைத்தார். அவரின் பார்வை அவரின் நோக்கத்தை வெளிப்படுத்தியது. பொன்னி பயத்தினால் உடம்பு நடுங்க ஒன்றும் பேசாது நின்றாள். இதற்கிடையில் வேறு இருவர் வந்து 'பயப்படாதே புள்ளை டாக்ஸியில் போ, என்றனர். இப்போது பொன்னியைச்சுற்றி ஒரு கூட்டமே கூடிவிட்டது. வேடிக்கை பார்த்தவர்கள் பொன்னி டாக்ஸிக்காரனின் உறவினள் என்று எண்ணினர்.



தாலியை விற்கவந்த பழனி பஸ்நிலையத்தில் கூட்டத்தைப் பார்த்து அவனும் வேடிக்கை பார்க்கவந்தான் அங்கே பொன்னியின் நிலைமையைக் கண்டு அவன் இரத்தம் கொதித்தது. ஆத்திரம் தலைக்கேறியது. உருட்டிக்கொண்டுவந்த சைக்கிளை நிலத்தில் போட்டுவிட்டு 'ஒரு பொம்புளை தனியாக இருந்தால் வம்பாட பண்ணுறியள்' என்று ஆவேசமாகக் கத்தியபடி கூட்டத்தை விலத்தி பொன்னியிடம் போனான்.

'யார்ரா இவன் கட்டின புருஷன்மாதிரியல்ல பேசுறான், கிட்டப்போய் அணைப்பான் போலிருக்கு' என்று கூட்டத்தில் ஒருவன் சொன்னான். மற்றவர்கள் சிரித்தார்கள்.

'ஆமான்டா, புருஷன் தான்டா' என்று சொன்னபடி சேர்ட் பொக்கேற்றுக்குள் இருந்த தாலியையும் மஞ்சள் கயிற்றையும் எடுத்து 'இந்தா பொன்னி இதைக் கட்டிக் கொண்டு வீட்டை வா' என்று சொன்னான்.

ஒன்றும் பேசாது வாங்கிக் கழுத்தில் கட்டிவிட்டு பழனியின் பின்னால் சென்றாள்.

அடுத்தநாள் காலை ஐந்து மணிக்கு படுக்கையைவிட்டு எழும்பிய பழனி 'பொன்னி தேத்தண்ணிபோடு தோட்டத்துக்குப் போய்வாறன்' என்று சொல்லிக்கொண்டு மண்வெட்டியைத் தோளில் வைத்தபடி வேலைக்குப் போனான். ★

- வில்வம் பசுபதி -

# ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணாலா?

அதர்மம் செய்பவர்கள் அழிவார்கள்; தர்மம் செய்பவர்கள் வாழ்வார்கள்.

எப்போதும் சத்தியம் நிலைக்கும். அசத்தியம் நிலைக்காது.

நூறுபேரா (கௌரவர்கள்) வென்றார்கள். ஐந்து பேர் (பஞ்சபாண்டவர்கள்) தான் வென்றார்கள். காந்தாரியிடம் போய் உன்னால்தான் துரியோதனன் இறந்தான் என்று கிருஷ்ணன் கூறினான்.

''வேறு யாராவது சொன்னால் கோபப்பட்டிருப்பேன். நீ சொல்வதால் கோபித்துக் கொள்ள முடியவில்லை; என்னால் தான் துரியோதனன் இறந்தான் என்று எப்படிக் கூறுகிறாய்?''— என்று காந்தாரி திருப்பிக் கேட்டாள்.

## வாரியார் புதுவிளக்கம்

கிருஷ்ணன் பதிலளித்தார்: ''போருக்குப் புறப்படும் முன்னர் துரியோதனன் உன்னிடம் ஆசி பெற வந்தான். வெல்வாய் என்று நீ அவனிடம் கூறவில்லை. எங்கே தர்மம் உள்ளதோ அங்கே வெற்றி என்று தானே கூறினாய். அதனால்தான் தர்மம் உள்ள இடம் வென்றது; அதர்மம் அழிந்தது''—

அன்பு வாழ வைக்கும். ஆசை அழிக்கும். இராமன் காட்டுக்குப் போன உடன் தசரதன் தான் இறந்தான். தாய் கோசலை இறக்கவில்லை.



திருமுருக கிருபானந்தவாரியார்

தாய்தானே பாசம் உடையவள். அவள் ஏன் இறக்கவில்லை?

இராமன் மீது கோசலை அன்பு வைத்திருந்தாள். அதனால் சாகவில்லை. தசரதன் ஆசை வைத்திருந்தான். அதனால் இறந்தான். எனவே அன்பு வாழ வைக்கும். ஆசை அழிக்கும்.

ஆவதும் பெண்ணாலே: அழிவதும் பெண்ணாலே என்பார்கள்.

வீட்டை அழிப்பதும் பெண் [illegible] வீட்டை அழிக்க மாட்டாள்.

அழிவதும் பெண்ணாலே என்றால் கணவனுக்கு வரும் கஷ்ட, நஷ்டங்கள் அழிவதும் பெண்ணாலே என்று பொருள்.

இதற்கு இரண்டு உதாரணங்களைக் கூறுகிறேன்.

எமனிடமிருந்து தன் கணவன் சத்தியவான் உயிரை மீட்டுத் தந்தாள் சாவித்திரி. கணவன் உயிரைக் காலன் பறித்துச் சென்றான்.

எமனைப் பின் தொடர்ந்த சாவித்திரி. என் கணவன் உயிரைக் கொடு என்று கேட்டாள்.

உயிரைத் தவிர வேறு ஏதும் கேள் தருகிறேன், என்றான் எமன்.

எனக்குப் புத்திர பாக்கியத்தைக் கொடு என்றாள் சாவித்திரி.

ஏமாந்து போன எமன் வேறு வழியின்றி சத்தியவான் உயிரைக் கொடுத்தான். தன் கற்பினாலும் மதியினாலும் தன் பதியின் உயிரை மீட்டாள் சாவித்திரி.

அரிச்சந்திரன் கடன் பட்டான். கடனைத் தீர்த்து சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டுமே என்று கவலைப் பட்டான்.

அவன் மனைவி சந்திரமதி. ''கவலைப்படாதீர்கள் என்னை அடகுவைத்தாவது உங்கள் கடனைத் தீர்த்துச் சத்தியத்தைக் காப்பாற்றுங்கள் என்றாள்.

அதன்படியே அரிச்சந்திரன் செய்தான். தன் கணவனின் கஷ்ட, நஷ்டங்களைத் தீர்த்தாள்.

ஹரிச்சந்திரனின் மனைவி சந்திரவதிதான், சந்திரமதி அல்ல.

பார்வதி, குணவதி, புனிதவதி, திலகவதி போன்று சந்திரவதிதான். அவள் பெயர் சந்திரவதி என்பதே நாளடைவில் சந்திரமதி ஆகிவிட்டது. ★

# நன்றியுள்ளவனாக இரு!

நாம் மற்றவர்களுக்குச் செய்யவேண்டிய கடமை, பிறருக்கு உதவி புரிவதும் உலகிற்கு நன்மை செய்வதுமே யாகும். நாம் ஏன் உலகிற்கு நன்மை செய்ய வேண்டும். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் உலகிற்கு நன்மை செய்வதாகத் தோன்றும், ஆனால் உலகத்திற்கு நன்மை செய்வதனால், உண்மையில் நமக்கு நாமே உதவி செய்து கொள்கிறோம்.

கொடுப்பவன் தான் பாக்கியசாலியே தவிர, பெறுபவன் அல்ல. இந்த உலகில் உன்னுடைய தர்ம சிந்தனையையும், இரக்க மனப்பான்மையையும், பயன்படுத்த வாய்ப்புக் கிடைத்திருப்பதற்காக நீ நன்றியுள்ளவனாக இரு. இதன் மூலம், தூய்மையும், பரிபூரணத்தன்மையும் உன்னை வந்தடையும். எந்த விதமான சுயநல நோக்கமும் இல்லாமல், பணம், புகழ், மற்றும் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல், நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே தொண்டு செய்பவன் தான் சிறப்பாகப் பணியாற்றுகிறான். இத்தகைய மனநிலையில் ஒருவன் பணியாற்ற வல்லவனாகும்போது அவன் ஒரு புத்தபகவான் ஆகிவிடுகிறான்.

## கால விளையாட்டு

நதியைச் சாக்கடை
எள்ளி நகைக்கிறது
நாணல் பெருமரத்தை
நசுக்க நினைக்கிறது
கடலில் பெரிதென்னக்
குளமுந்தான் எண்ணிறது
கால விளையாட்டு
அம்மி மிதக்கிறது!

புயலைச் சிறுகாற்று
புழுவாய் கருதிறது
வெயில் நிழலை
வீணென்று சொல்கிறது
அடுமடை இகழ்கிறது
அறிவை! விதியென்னும்
கால விளையாட்டு
குடுவை அமிழ்கிறது!

ஊரைச் சுருட்டி
உலையிடும் உன்மத்தர்
வேரறுத்து மூலையில்
வீழ்த்துகிற ஜென்மங்கள்
ஊருக்கு உபதேசம்
உரைக்கின்ற காலத்தால்
அம்மி மிதந்துசுரைக்
குடுவை அமிழ்கிறது!

— நெடுந்தீவு லக்ஸ்மன்


## யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காகக் கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

உடனடியாக உதயசேவையில் சேர்ந்துவிடுங்கள்!

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி ஓடி வருவான்!!



உதயசேவை

இலவசம்! இலவசம்!!

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:
விநியோக முகாமையாளர்,
உதயன் / சஞ்சீவி
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆயுத விற்பனையில் வல்லரசுகள்

உலகில் கடந்த ஆண்டு ஒரு லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஆயுத விற்பனை நடந்துள்ளது.

இதில் முன்னணியில் நிற்பது சோவியத் யூனியனும் அமெரிக்காவுமே.

சோவியத் யூனியன் 37 ஆயிரம் ரூபாய்க்கும் அமெரிக்கா 35 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் ஆயுத விற்பனை செய்து இருக்கின்றன.

அமெரிக்காவுக்கு அடுத்த பிரான்ஸ் 3 ஆவது இடத்தையும் வகிக்கின்றன. ★

## தூக்கிச் செல்லும் நீச்சல்குளம்

தூக்கிச் செல்லும் நீச்சல் குளம் ஒன்றை அமெரிக்க நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது.

சொந்த உபயோகத்துக்காக வீட்டிலேயே வைத்துக் கொள்ளக்கூடியதாக இந்த நீச்சல் குளம் அமைக்கப்பட்டுள்ளது.

இது 12 அடி நீளம், 6 அடி அகலம் 4 அடி உயரம் உள்ளது.

எடையற்ற பைபரினுல் (Fibre) செய்யப்பட்டது.

2,500 கலன் தண்ணீர் கொள்ளக்கூடியது.

இந்தத் தொட்டியோடு இணைக்கப்பட்டு உள்ள சக்கரம் தொட்டியில் உள்ள நீரை நீளவாக்கில் மேலும் கீழுமாக சுழலச் செய்கிறது.

இதனுல் தொட்டிக்குள் படுத்து இருப்பவர், ஆற்று நீரின்வேகத்தைவிட எதிர்த்து நீச்சல் அடிப்பது போன்று இருக்கும். இது உடலுக்கு நல்ல பயிற்சி என்று கூறப்படுகிறது. ★

## வெயிலில் ஓடுவது நல்லதா?

கடுமையான வெயிலில் ஓடுவது, சைக்கிள் ஓட்டுவது, மலை ஏறுவது போன்ற உடற் பயிற்சிகளில் ஈடுபடுகிறவர்கள் மாரடைப்பினுல் மரணம் அடைய வாய்ப்பு இருப்பதாக அமெரிக்காவின் டெக்ஸாஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிருர்கள்;

இந்த உடற்பயிற்சியின் போது: சுவாசிக்கப்படும் காற்றில் கார்பன் மொனுக்ஸைட் அதிகம் இருந்தால் அது இன்னும் ஆபத்தானது என்று அவர்கள் கூறுகிருர்கள். ★

## புகைப்பது பற்றி ஒரு புள்ளி விவரம்

புகைக்கும் சிகரெட் பற்றி ஒரு புள்ளிவிவரம்:

உலகில் இப்போது சிகரெட் உற்பத்தி முதன்முறையாக ஆயிரம்கோடி ரூபாவைத் தாண்டிவிட்டது.

புகையிலை பயிரிடும் தொழிலில் சுமார் 3½ கோடி மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

விநியோகம் செய்யும்வேலையில் 2 கோடியே 16 லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

புகையிலை தயாரிக்கும் பணியில் 66லட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

உலக நாடுகளுக்கு புகையிலை மூலம் ஆண்டுக்கு இரண்டு லட்சம் கோடி ரூபா வரியாகக் கிடைக்கிறது.

புகைப்பதனுல் 'புகையாக' போகிறவர்கள் எண்ணிக்கை கிடைக்கவில்லை. ★

## உங்களுக்குத் தெரியுமா?

★ ஆசியாக் கண்டத்தில் முதன் முதலில் டெலிவிஷனை அறிமுகப்படுத்திய நாடு 'தாய்லாந்து' தான்.

★ இராணுவமே இல்லாத நாடு மத்திய அமெரிக்காவில் உள்ள காஸ்டாரிகா என்று அழைக்கப்படும் மிகச் சிறிய நாடு.

★ இந்தியாவில் அரசியல் அமைப்பைத் தயாரிப்பதற்கு ஆன செலவு ரூ. 63, 96, 729. செலவான நேரங்கள் 2 வருடம் 11 மாதம் 18 நாட்கள். தயாரிப்பில் பங்குகொண்டவர்கள் 368 பேர். ★

# பாவேந்தர் கூறிய புத்திமதி!

பாவேந்தர் பாரதிதாஸன் வீட்டில் ஒரு பசுமாடு.

அது ஆழாக்கு பால் கறந்தால் அதிகம். அந்த அளவுக்குப்பயன் தந்து பசு மெலிந்திருந்தது.

பாவேந்தரின் துணைவியார் அதைவிற்றுவிட்டு வேறுமாடு வாங்கவேண்டும் என்று தீர்மானித்தார். பலரிடம் சொல்லியும் வைத்தார்.



ஒருநாள், பாவேந்தரின் நண்பரான ஒரு ஆசிரியர் அதற்காக ஒருஆளைக் கூட்டி வந்தார். அவரும் மாட்டை வாங்கச் சம்மதித்து அம்மாவிடம் முற்பணமாக இருபத்தைந்து ரூபாய் தந்தார்.

திரும்புகையில் இருவரும் பாவேந்தரின் அறைக்கு வெளியே நின்று எட்டிப்பார்த்தார்கள். நிமிர்ந்து பார்த்த பாவேந்தர் 'யார் அந்தப் பிள்ளையாண்டான்!' என்று ஆசிரியரிடம் கேட்டார். ஆசிரியர் விஷயத்தைச் கூறினுர்.

உடனே பாவேந்தர், மாடு வாங்கவந்த ஆளைப் பார்த்து, 'ஏம்பா! அந்த மாடு ஆழாக்குப்பால்தான் கறக்கும். அது போதும்னு வாங்கிட்டுப்போ' என்ருர்'

மாடுவாங்க வந்தவர் பாவேந்தருக்குப்பெரியகும்பிடு போட்டு,வாழ்த்திக்கொண்டே போய்விட்டார்.

பாவேந்தர் ஆசிரியரைப் பார்த்து, 'உனக்கு வேண்டியவருன்னு சொல்றே. வேண்டியவருக்கு நல்லதாப் பார்த்து வாங்கிக்கொடுக்கணும் சரி சரி போ'—என்ருர்.

ஆசிரியர் சென்றதும் பாவேந்தரின் துணைவியார் அங்கு வந்தபடி 'அந்த மாட்டுக்கு வயதாகிவிட்டது...இனி அதை கொட்டடியில் வீணுக்குக்கட்டிப்போட்டு தீனிபோட முடியுமா?' என்று கேட்டார்:

'ஏன் எனக்கும்தான் வயதாகிவிட்டது. அதற்கு என்ன செய்யலாம். சொல்'—என்று திரும்பக்கேட்டார் பாவேந்தர். மனைவி மௌனியாகி விட்டார். ★

## ரேகனுக்கு பென்ஷன் 70 ஆயிரம் டாலர்

அமெரிக்க ஜனுதிபதி ரேகன் பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும், ஆண்டு ஒன்றுக்கு 69,630 டாலர் பென்ஷனுசப் பெறுவார்.]



ரேகன்

ஜனுதிபதியாவதற்கு முன், எட்டாண்டு காலம், கலிஃபோர்ணியோ மாநிலத்தின் கவர்னராக ரேகன் இருந்திருக்கிருர். ஆகவே ஓய்வு பெற்ற கவர்னர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் 29, 188 டாலர் கிடைக்கும்.

இராணுவப்பிரிவு ஒரு கணிசமான தொகையை, நான்காண்டுகள் றேகனுக்கு வழங்கும்.

பாதுகாப்பு, இதர பல தேவைகளுக்காக, ஏராளமான சலுகைகளையும் ஆதாயங்களையும் அடைவதற்கான அனைத்துத் தகுதிகளும் ரேகனுக்கு உண்டு.

ஓய்வுக்காலத்தில் அளிக்கப்படும் இந்த மாதிரியான ஆதாயங்களை ரேகன் ஏற்றுக்கொள்ளலாம், அல்லது வேண்டாமென்று மறுத்துவிடலாம். அது அவர் விருப்பம்.

ரேகனின் மரணத்திற்குப் பின் அவரது மனைவிக்கு, அவருடைய வாழ்நாள் முழுவதும், ஆண்டொன்றுக்கு 20,000 டாலர் பென்ஷனுகக் கிடைக்கும். ★

## உழைப்புக்குத்தான் மதிப்பு!

மன்னன் அக்பரும் பீர்பாலும் ஒருநாள் மாலைப் பொழுதில் உலாவச் சென்ருர்கள்.

அப்போது இளைஞன் ஒருவன் வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்து தன்னுடைய செருப்புக்களை பட்டுச்சால்வையால் துடைத்துக் கொண்டிருந்தான்.

அதைக் கண்ட அக்பர் ஆச்சரியத்தோடு பீர்பாலை நோக்கினுர்.

'மன்னர் பெருமானே! இந்த இளைஞன் ஒரு முட்டாள். அவனுடைய செருப்புக்கள் ஐந்து ரூபா மதிப்புடையவை. ஆனுல் இருபது ரூபா மதிப்புடைய சால்வையால் துடைக்கிருனே என்று தானே நீங்கள் எண்ணுகிறீர்கள்? ஆனுல் அவன் அப்படிச் செய்யக் காரணம் என்ன? அந்தச் செருப்புக்கள் அவன் உழைப்பில் இருந்து வாங்கியவையாக இருக்கலாம்.

சால்வையோ அவனுடைய தகப்பனுடையதாயிருக்கலாம். தன் உழைப்பின் மூலம் கிடைத்த பணத்தினுல் வாங்கியவற்றை மிகவும் பாதுகாப்பார்கள். ஆனுல் உழைப்பில்லாமல் கிடைத்த பொருளை அலட்சியமாகக் கருதுவார்கள்'—

இப்படி பீர்பால் சொன்னுன்.

இளைஞனை அழைத்து விசாரித்ததில் பீர்பால் கூறியது உண்மை என்று தெரிய வந்தது.

பீர்பாலின் சாதுரியத்தை வெகுவாகப் புகழ்ந்தார் மன்னர். ★

### பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

## தார்பூலச் செய்திகள்

★ சீனர்கள் வெற்றிலையை இடது கையால் வாங்கமாட்டார்கள்.

★ தூக்கிலிடுவதற்கு முன்பு குற்றவாளிகளுக்கு வெற்றிலை பாக்கு கொடுக்கும் வழக்கம் நீண்ட காலமாகப் பர்மாவில் இருந்து வருகிறது.

★ சிறையில் அடைபட்டுக் கிடக்கும் கைதிகளுக்கு மலேரியா போன்ற நச்சுக் காய்ச்சல் வராதிருக்க அவர்களுக்கு வெற்றிலை கொடுப்பது நெதர்லாந்து நாட்டின் வழக்கம்.

★ சண்டை போட்டுக் கொண்டவர்கள் சமாதானம் அடைய வெற்றிலை மாற்றிக் கொள்வது மலேசிய நாட்டின் வழக்கம். ★

## ராஜ்கபூரின் விநோத பயம்

அண்மையில் மறைந்த பிரபல ஹிந்தித் திரைப்பட நடிகர் ராஜ்கபூருக்குக் கட்டிலில் படுத்துறங்குவதென்ருல் மிகவும் பயம். எப்போதும் தரையிலேயே மெத்தை விரித்துப் படுத்துறங்குவார். ஒரு பெரிய ஹோட்டலில் தங்கியிருந்த நாட்களில் அவர் கட்டிலிருந்து மெத்தையை எடுத்து கீழே விரித்திருந்த குற்றத்திற்காக அபராதப்பணம்கூடக் கட்டியதுண்டு. அபராதமாக பணம் கொடுத்தாரேயன்றி கட்டிலில் அவர் படுத்துறங்கவில்லை. ★

## மனித உடலில்......

★ சிறுநீரகம் பத்து லட்சத்துக்கு மேற்பட்ட சிறிய குழாய்களால் ஆனது. இரண்டு சிறுநீரகங்களில் உள்ள குழாய்களின் மொத்த நீளம் 40 மைல் ஆகும்.

★ இரப்பையில் சுரக்கும் ஹைட்ரோகுளோரிக் அமிலம், துணி அல்லது இரும்பைக்கூட கரைக்கும் திறன் பெற்றது.

★ ஒருசதுர அங்குல மனிதத் தோலில் 19 மில்லியன் செல்கள், 60 ரோமங்கள், 90 எண்ணெய்ச் சுரப்பிகள், 19 அடி நீள ரத்தக்குழாய்கள், 625 வியர்வைச் சுரப்பிகள், 19ஆயிரம் உணர்ச்சிச் செல்கள் உள்ளன.

★ மனிதனின் மூளைக்கு உணர்வு கிடையாது. மூளையை இரண்டாக வெட்டினுலும் மனிதன் வலியை உணரமாட்டான்.

★ மனித ஈரலில் எண்பது சதவீதம் வெட்டப்பட்டாலும் மீதியுள்ள ஈரலின் பகுதி எல்லாப்பணிகளையும் திறம்படச் செய்யும். சில மாதங்களில் வெட்டப்பட்ட ஈரல் முழு வளர்ச்சி பெற்று விடும்.

★ மனித உடலில் ரத்தம் பாயாத பகுதி கண்ணின் விழி வெண்படலம் ஆகும். அது நேரடியாகக் காற்றில் இருந்து ஒக்சிஜனை எடுத்துக் கொள்ளும்.

★ அறுபதாம் வயதில் மனிதன் 50 சதவீதம் சுவை உணர்வையும், 40 சதவீதம் வாசனை உணர்வையும் இழந்து விடுகிருன்.

★ மிகப்பெரிய செல், பெண்ணின் முட்டைக்கருவில் உள்ள செல். ஆணின் விந்துவில் உள்ள செல் மிகச் சிறியது.

— இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஒப் இந்தியா. ★

## அலுவலக ஊழியருக்கு...

உங்களுடைய அலுவலகத்துக்கு சற்று முன் கூட்டியே போவது நல்லது! அன்றைய தினம் செய்ய வேண்டிய வேலைகளை சிரமமாக ஒரு சிறிய காகிதத்தில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். பிறகு முக்கியமானதை முதலில் தொடங்குங்கள்.

ஒவ்வொரு வேலையையும் அதை எப்பொழுது முடிக்க வேண்டும் என்பதைத் தீர்மானம் செய்து கொள்ளுங்கள். எப்பாடுபட்டாவது அதன்படி முடிக்க உறுதி கொள்ளுங்கள்.

மேஜையை ஒழுங்குபடுத்துவது, பென்சிலைச் சீவுவது, தினசரித் தாளைப் புரட்டுவது, ஒரு கப் காப்பி அருந்துவது இது போன்றவைகளில் ஈடுபட்டு விட்டு, எப்படி இவ்வளவு நேரம் ஓடிவிட்டது என்று வியப்படையாதீர்கள்.

உங்களுடைய டெலிபோன் பேச்சு சிறியதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கட்டும். முக்கியமான விஷயமாயிருந்தால், முதலில் அதைக் காகிதத்தில் குறித்துக் கொண்டு பேசுவது நல்லது. டெலிபோனில் அவர் சொல்லும் பதிலை அந்தக் காகிதத்திலேயே குறித்துக்கொள்வது நல்லது. ★

## 'பலூன்' சக்கரவர்த்தி



அமெரிக்க கோடீஸ்வரர் மால்கம் போர்பஸ் பத்திரிகை வெளியீட்டாளர் இவர். மேலும் பிரபல ஹொலிவூட் நடிகை எலிஸபெத் டெய்லரின் நெருங்கிய நண்பரும் கூட.

அமெரிக்காவுக்கும் துருக்கி நாட்டுக்கும் இடையே நட்புறவை வளர்க்கப் புதிய திட்டம் ஒன்றை உருவாக்கி உள்ளார், இந்தக் கோடீஸ்வரர்.

அதற்காக நூதன உத்தி ஒன்றை மேறமிாண்டிருக்கிருர்.

அதன் அடிப்படையில் பிரிஸ்டல் என்ற பகுதியில் உள்ள ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையில் பிரத்தியேக பலூன் ஒன்று தயாரிக்க உத்தரவிட்டார் இவர்.

அதன்படி துருக்கியின் முன்னைள் சக்கரவர்த்தி சுலைமானின் அந்த பலூன் தயாரிக்கப்பட்டது.

பலூனின் உயரம் 170 அடி. அந்த பலூனையே படத்தில் காண்கிறீர்கள்.

அதனுள் உஷ்ணக்காற்றை அடைத்து அதை வானில் பறக்க விடுவார்கள்: அது பறப்பதைச் சோதனை செய்வதற்காகத் தொழிற்சாலைக்கு வெளியே கொண்டு வந்த போது எடுத்தபடம் இது.

முன்பு கொடி கட்டிப்பறந்த இந்த முன்னுள் சக்கரவர்த்தியை இன்று பலூன் கட்டிப் பறக்க விடுகிருர்கள் போலும்.

அதன் மூலம் வானுயரப் போவது சக்கரவர்த்தியின் புகழ் மட்டுமல்ல......இரு நாடுகளின் உறவும் தான்!

அமெரிக்காவின் வளர்ச்சிக்கு அது விண்ணில் ஏவும் ரொக்கட்டுக்கள் மட்டும் போதாது......இந்த நல்லுறவு பலூன்களும் தேவைதானே...! ★

## தபேலா வாசிப்பிலும் கின்னஸ் சாதனை!

தபேலா வாசிப்பிலும் சாதனை நிகழ்த்தப்பட்டு, அது கின்னஸ் புத்தகத்திலும் இடம்பெற்றுவிட்டது.

உத்தரப்பிரதேச மாநிலம் அலிஹாரைச் சேர்ந்தவர் சண்டன் சட்டர்ஜி. 30 வயதான இந்த இளைஞர் ஒரு தபேலா வித்வான்.

இவர் 25 மணிநேரம் இடைவிடாது தபேலா வாசித்து உலக சாதனை ஏற்படுத்தியிருக்கிருர்.

மாவட்ட நீதிவான் முன்னிலையில் இந்தச் சாதனையை நிகழ்த்தினுர்.

இதற்காக இவரது பெயர் உலகசாதனை (கின்னஸ்) புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது.

## சீன ஏரியில் மர்ம விலங்கு!

சீனுவில் ஜின்ஜியாங் பகுதியில் உள்ளது கர்னுச்சி ஏரி.

இது கடல்மட்டத்தில் இருந்து 3,700 அடி உயரத்தில் இருக்கிறது. மிகவும் ஆழமானது.

இந்த ஏரியில் 35 அடி நீளமுள்ள ராட்சத விலங்கு ஒன்று கிடக்கிறது. அது பார்ப்பதற்கு மீன் போன்று உள்ளது.

ஏரிக் கரைக்கு வரும் ஆடு, மாடு, நாய் ஆ அது பிடித்து விழுங்கி விடுகிறது. ★

## பிரிட்டனில் கூர்க்கா படை

இங்கிலாந்து இராணுவத்தில் ஐந்து கூர்க்காப் படைப் பிரிவுகள் உள்ளன.

இவற்றில் 8 ஆயிரம் வீரர்கள் உள்ளனர்.

இவற்றில் மூன்று படைப் பிரிவுகள் ஹொங்கொங் தீவிலும்,

ஒரு பிரிவு புருணையிலும், 5ஆவது பிரிவு இங்கிலாந்திலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து வசம் உள்ள ஹொங்கொங் தீவு 1997 ஆம் ஆண்டு சீனுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது

இதை ஒட்டி கூர்க்காப் படைப் பிரிவுகள் அனைத்தையும் கலைத்துவிட இங்கிலாந்து அரசு திட்டமிட்டுள்ளது.

இங்கிலாந்து இராணுவத்தில் இந்தப் படைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு 150 ஆண்டுகள் ஆகிறது. ★

## 1,788 அறை மாளிகையில் வாழும் உலகின் 'நம்பர் 1' பணக்காரர்!

உலகின் 129 பெரும் பணக்காரர்களின் பட்டியலை 'போர்ச்சூன்' என்ற ஆங்கில சஞ்சிகை வெளியிட்டிருக்கிறது.

இதில் முதல் இடம் வகிப்பவர் அரபு நாடான புரூணை நாட்டின் மன்னர் சுல்தான் அசனுல் போல்கியா. இவரது சொத்தின் மதிப்பு 65 ஆயிரம் கோடி ரூபாய்.

அவர் வசிக்கும் மாளிகை முழுவதும் 'குளுகுளு' வசதி செய்யப்பட்டது. அதில் 1,788 அறைகள் இருக்கின்றன. சுல்தான் 2 மனைவிகள், 3 மகன்கள், 6 மகள்மார்களோடு அந்த மாளிகையில் வசிக்கிருர்'

ஆர்ஜென்டினுவில் பிரபலமான 200 மட்டக் குதிரைகள் சுல்தானிடம் உள்ளன. அக் குதிரைகள் தங்கும் கொட்டடியும் குளுகுளு வசதி செய்யப்பட்டுள்ளது.

உலகின் 2 ஆவது பெரிய பணக்காரர் சவூதி அரேபியா மன்னர் அப்துல் அசீஸ். அவரது சொத்தின் மதிப்பு 46 ஆயிரம் கோடி ரூபாய்.

3 ஆவது பெரும் பணக்காரர் அமெரிக்காவின் பொரஸ்ட் மார்ஸ். 84 வயதான இவர் சொக்லட் கம்பெனி வைத்து இருக்கிருர்.

இங்கிலாந்தின் எலிஸபெத் மகாராணி, 4 ஆவது பெரும் பணக்காரர். அதே நேரத்தில் உலகின் முதலாவது 'பணக்காரி'யாகத் திகழ்கிருர். அவரது சொத்தின் மதிப்பு 1,310 கோடி ரூபாய்.

இந்த 129 கோடீஸ்வரர்களின் சொத்தின் மதிப்பு 8 லட்சத்து 32 ஆயிரம் கோடி ரூபாய்.

இந்தொகையைக் கொண்டு அமெரிக்காவின் இராணுவ பட்ஜட்டுக்கு நிதி ஒதுக்கி, கொலம்பியா, ஈகுவடோர் ஆகிய நாடுகளின் வெளிநாட்டுக் கடனையும் அடைத்து விடலாமாம். ★

## பூனை குறுக்காக ஓடினுல் அபசகுனம்; கூடவே ஓடினுல் என்ன கிடைக்கும்?

மனித நோய்களைத் தீர்க்க மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கள், தங்களின் புதிய மருந்து சோதனைகளை மேற்கொள்ளத் தேர்ந்து எடுப்பது மிருகங்களை அல்லது பிராணிகளைத்தான்.

உதாரணமாக இப்போது எய்ட்ஸ் நோய்த்தடுப்பு ஆராய்ச்சிக்கு மேலைநாடுகளில் அதிகம் பயன்படுபவை மனிதக் குரங்குகள்.

இப்படி மருத்துவ ஆராய்ச்சிக்கு என்று அல்லாமல் மற்ருெரு மகத்தான பணிக்காக காட்டுப்பூனையைத் தேர்ந்தெடுத்திருக்கிருர், ஒருவர்.

இங்கிலாந்தைச் சேர்ந்த இவர் தலைசிறந்த ஓட்டக்காரர். பெயர் ஜோன் ரிட்ஜியான், வயது 21.

நடக்கப்போகும் சோல் ஒலிம்பிக்போட்டியில் 110 மீற்றர் தடை தாண்டும் ஓட்டப் பந்தயத்தில் வெற்றிப்பதக்கத்தை நிச்சயம் தட்டி வருவார் என்று இங்கிலாந்து இப்போது நம்பிக்கொண்டிருக்கிற முக்கிய வீரர் இவர்.



இங்கிலாந்தில் வெல்வின் கார்டன் சிற்றி பகுதியில் தினமும் ஓட்டப்பயிற்சி மேற்கொள்கிருர் ஜோன்.

அவரோடு முக்கிய பங்காளியாக ஓடுவது யார் தெரியுமா? இந்தக்காட்டுப் பூனை.

பூனையின் பெயர் டுகால். வயது நான்கு. ஓடும் வேகம் 40 மைல்.

பூனை குறுக்கே ஓடினுல் அபசகுனம் என்று நாம் சொல்கிருேம்.

ஆனுல் பூனை கூடவே ஓடினுல் என்ன கிடைக்கும்? ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் [illegible] ஜோன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருக்கெழுத்துக் கலையில் வெற்றிகாண விரும்புகின்றீர்களா?

## இதோ சில வழிமுறைகள்!



### சுருக்கெழுத்து:

1. பயிற்சி செய்யும்போது இரு கால்களையும் நிலத்தில் படும்படியாக வையுங்கள்.

2. எழுதும் பென்சிலைக் கூராக வைத்திருங்கள்.

3. நீளம் குறைந்த பென்சிலைப் பாவிக்காதீர்கள்.

4. அழிகருவியைப் பாவிக்காதீர்கள். எழுதும் குறியீடு பிழையானால் அதன் மேல் வட்டம் இடுங்கள்.

5. ஆசிரியரின் அறிவுரைகளை உன்னிப்பாக அவதானியுங்கள். சந்தேகம் இருந்தால் தயக்கம் இன்றி திரும்பவும் கேளுங்கள்.

6. எழுதுவதற்கு ஆகக் குறைந்த சக்தியைச் செலவிடுங்கள்.

7. பென்சிலை உங்களது கையில் இருந்து நழுவாதவாறு பிடியுங்கள்.

8. ஆசையுடனும் உற்சாகத்துடனும் படியுங்கள்.

9. சுருக்கெழுத்துக் கலையில் வெற்றி அடைவதன் இரகசியம் கிரமமான பயிற்சியே.

10. பயிற்சி செய்யும்போது வாயால் உச்சரியுங்கள்.

11. பயிற்சிக்குத் தரமான பென்சிலையும் எழுது தாளையும் பாவியுங்கள்.

12. எழுதும்போது நிறுத்தற் குறியீடுகளைப் போட மறுக்காதீர்கள்.

13. வசதியான இடங்களில் சொற்களுக்கான குறியீடுகளை சேர்த்து எழுதுங்கள்.

14. படித்த பாடங்களைக் கிரகித்துக் கொண்டு வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்பே வகுப்பறைக்குச் செல்லுங்கள்.

15. தனிக்குறிச் சொற்கள் (Grammalogues), சுருக்கங்கள் (Contractions) ஆகியவற்றைப் பூரணமாகப் பயன்படுத்துங்கள்.

16. அச்சடித்த சுருக்கெழுத்தை வாசித்து, அறிவை விருத்தி செய்யுங்கள்,

17. மெய் எழுத்துடன் உயிர் எழுத்தையும் சேர்த்து எழுதுவதால் மொழி பெயர்ப்பது சுலபம்.

18. ஆங்காங்கு பார்க்கும் சொற்களுக்கான குறியீடுகளை மனதால் கீறிப் பாருங்கள்.

19. விதிகளை எல்லாம் உதாரணங்களோடு எழுதிப் பழகுங்கள்.

20. குறியீடுகளை உறுப்பாகவும் அழகாகவும் எழுதுங்கள்.

### தட்டெழுத்து:

1. கை விரல்களில் உள்ள நகங்களை வெட்டிச் சுத்தமாக வைத்திருங்கள். (நகம் வளர்ந்து இருந்தால் விசைப் பலகையை அடிப்பதில் சிரமம் ஏற்படலாம்.)

2. மேசை விளிம்பிற்குச் சுமார் ஒரு அங்குலம் முன்னால் இருக்கும்படி தட்டச்சுப் பொறியை வையுங்கள்.

3. தட்டச்சுப்பொறி சரியாக இயங்கும் நிலையில் உள்ளதா என்பதை ஆரம்பத்திலேயே அவதானியுங்கள்.

4. தட்டச்சுப் பொறியில் எப்போதும் இரட்டைக் காகிதமாகப் (Double Paper) போடவேண்டும். அவற்றின் விளிம்புகள் ஒரே நேராக இருக்க வேண்டும். தனிக் காகிதம் போட்டால் எழுத்துக்களைப் பொறிக்கும்போது அதன் விசை உருளையைப் பாதிப்புறச் செய்யும்.

5. தட்டச்சுப் பொறிப்பவர் அதற்குரிய ஆசனத்தில் உஷாராக இருக்கவேண்டும். கால்கள் இரண்டையும் நிலத்தில் படும்படி வைக்கவேண்டும். அவ்வாறு வைப்பது சிரமம் எனில் மேசைக் கால்களுடன் இணைக்கப்பட்டிருக்கும் சட்டத்தில் வைக்கலாம்.

6. தொடுமுறையில் [Touch System] தட்டச்சுப் பயிற்சிகளை ஆரம்பத்திலிருந்தே செய்தல்வேண்டும்.

7. இடைவெளிச் சட்டத்தை [Space bar] எப்பொழுதும் வலது கைப் பெருவிரலாலேயே தட்டுதல்வேண்டும். இடதுகைப் பெருவிரலை அல்லது வேறு விரல்களை எச்சந்தர்ப்பத்திலும் பாவிக்கக் கூடாது,

8. சாதாரணமாகத் தட்டச்சு வேலைகளைச் செய்யும்போது இடதுபக்கத்தில் எல்லையாகப் பத்து இடைவெளிகளும், வலது பக்கத்தில் எல்லையாக ஐந்து இடைவெளிகளும் விடலாம். மேற்பக்கத்தில் ஒரு அங்குல இடைவெளியும் கீழ்ப்பக்கத்தில் ஒன்று முதல் அரை அங்குல இடைவெளிவரை வசதிக்கேற்றவாறு விடலாம்.

9. தட்டச்சுப் பொறிக்கும் போது விசைப் பலகையைப் பார்க்காது கையெழுத்துப் பிரதியைப் பார்த்துக்கொண்டே பொறிக்கவேண்டும். அப்போதுதான் சரியாகவும் விரைவாகவும் பொறிக்கலாம்.

10. பார்த்துப் பொறிக்கும் கையெழுத்துப்பிரதியைப் பொறியின் இடதுபக்கத்திலேயே வைத்தல்வேண்டும்.

11. தொடுமுறையில் தட்டச்சுப் பயிற்சிகளைச் செய்யும்போது விரல்கள் அதற்குரிய எழுத்தை அடித்தவுடன் பிரதான விசைப்பலகையை வந்தடையவேண்டும்.

12. தட்டச்சுப் பொறியில் ஒவ்வொரு வரிக்கும் இடையில் சாதாரண ஒரு இடைவெளி அல்லது $1\frac{1}{2}$ இடைவெளிவிடலாம். இவ்வாறு தேவையான இடைவெளிகளை சுலபமாக விடுவதற்காகக் கைப்பிடியின் அருகில் 5 நிலைகள் உள்ளன. [1, $1\frac{1}{2}$, 2, $2\frac{1}{2}$, 3]

13. கைப்பிடியை எப்போதும் இடது கையாலேயே பிடிக்கவேண்டும்.

14. தட்டச்சுப் பொறித்துக்கொண்டிருக்கும்போது பொறித்தவற்றை வெட்டுவதோ அல்லது பொறித்தவற்றுக்கு மேல் மீண்டும் பொறிப்பதோ தவிர்க்கப்படல்வேண்டும்,

15. தாளின் கீழ் ஓரத்தை அறிவதற்கு முன்கூட்டியே எழுதுகருவியால் குறித்துக் கொள்ளல்வேண்டும்.

16. உள்ளங்கையை விசைப் பலகையிலோ அல்லது இடைவெளிச் சட்டத்திலோ (Space bar) வைக்காதீர்கள்.

17. பின்தள்ளும் விசையை Back space] அடிக்கடி பாவிக்காதீர்கள்.

18. வரி மாற்றும்போது கைப்பிடியை [Handle] வேகமாகத் தள்ளாதீர்கள்.

19. தட்டச்சுப் பொறியை ஒரே இடத்தில் வைத்துப் பாவிக்கவேண்டும். இடத்திற்கு இடம் மாற்றுவதால் பொறிக்குப் பாதிப்பு ஏற்படலாம்.

20. வேலைகள் முடிந்தவுடன் பொறியில் தூசி படியாதவாறு உறை [Cover] ஒன்றினால் மூடிவைக்கவேண்டும். ★

- வ. சிவச்சந்திரதேவன் -

---

# விஞ்ஞானி ஆர்க்கிமிடிஸ் வாழ்வில்...

அந்த நாட்டிற்கு அது மிகவும் ஆபத்தான நேரம். அரசர், அரசவையிலேயே சிறந்த அறிஞர் என்று போற்றப்பட்ட அந்த மனிதரை அழைத்தார்:

''நமது நாட்டை போர் மேகங்கள் சூழ்ந்து வருவதை நீங்கள் அறிவீர்கள். எதிரியின் கடற்படை நமது கடற்கரையை நெருங்கி விட்டது. அதைத் தடுத்து நிறுத்த உங்களால் ஏதாவது செய்ய முடியுமா?''

அந்த மனிதர் அரசரிடம் சொன்னார்:

''நீங்கள் கொஞ்சமும் கவலைப்படாதீர்கள் அரசே! அவர்களது கப்பலைத் தடுப்பது மட்டுமல்ல; அழித்தே விடுகிறேன்!''

அரசருக்கு அவரின் திறமையில் நம்பிக்கை இருந்தாலும், ஆச்சரியமாக இருந்தது.

''எப்படி அவர்களது கப்பல்களை அழிப்பீர்கள்?''

''எரியச் செய்யும் கண்ணாடிகளால்!''

அரசர் ஒன்றும் சொல்லவில்லை. தலையை ஆட்டி ஒப்புதல் கொடுத்தார். அதிகமாகப் படித்ததால் அந்த அறிஞருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று மற்றவர்கள் நினைத்தார்கள்.

பளபளப்பான வளைந்த உலோகத் தகடுகளைக்கொண்ட மிகப்பெரிய குழிந்த கண்ணாடிகளை (Concave mirrors) அமைத்தார். எதிரியின் கப்பல்கள் அருகில் வந்ததும் அந்த ஆடிகளைத் திருப்பி சூரியனின் வெப்பக்கதிர்கள் கப்பல்களின் மேல் விழும்படி, செய்தார். குவிக்கப்பட்ட சூரியக்கதிர்களால் அந்தக் கப்பல்கள் தீப்பிடித்தன.

அந்த அறிஞர் தான் புகழ் பெற்ற கிரேக்க விஞ்ஞானி ஆர்க்கிமிடீஸ். ஆர்க்கிமிடீஸ் தத்துவம் என்று எட்டாம் வகுப்பில் படித்திருப்பீர்களே! அவரேதான்!

தனி ஒருவராக நின்று தன்னுடைய உத்திகளால் சைரக்கடஸ் நாட்டை அவர் காப்பாற்றினார். பெரிய சக்கரங்களையும் கயிறுகளையும் கொண்ட 'புல்லி'கள் (Pulleys) அமைத்து பெரிய கப்பல்களைத் தூக்கிப் பந்தாடினார்.

ரோமானிய அரசன் மார்செல் சொன்னார்: ''ஆர்க்கிமிடீஸ் என்ற அந்தக் கணித அரக்கன் இருக்கும் வரை நாம் ஒன்றும் செய்ய முடியாது.''

சாதாரணமாக ஒரு கயிற்றையும் ஒரு குச்சியையும் எங்காவது பார்த்தால் அதில் ஏதாவது ஒரு ஆயுதம் இருக்குமோ என்று ரோமானியர் பயந்தனர்.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் இரவு சைரக்கடஸ் நாட்டு மக்கள் ஆர்டிமிஸ் என்ற நிலாக்கடவுளுக்கு திருவிழாக் கொண்டாடினார்கள்.

அளவுக்கு மீறிக் குடித்து, கூத்தாடி, அறிவு மயங்கிய வேளையில் ரோமானியர்கள் கோட்டைக்குள் புகுந்து விட்டனர். பல நாட்கள் காத்திருந்த கோபத்தில் அவர்கள் நகரைச் சூறையாடினார்கள்.

மார்செல், ''ஆர்க்கிமிடீஸ் என்ற அந்த அற்புத மனிதரை ஒன்றும் செய்துவிடாதீர்கள். அவர் நமது விருந்தினர்'' என்று தனது வீரர்களுக்குக் கட்டளையிட்டார். ஆனால் அந்தக் கட்டளை எல்லா வீரர்களுக்கும் எட்டவில்லை.

ஆர்க்கிமிடீஸ் கடைத் தெருவில் அமர்ந்து ஏதோ விட்டங்கள் போட்டு கணிதப் புதிர்களைச் சிந்தித்துக்கொண்டிருந்தார்.

உருவிய சத்தியுடன் வரும் ரோமானிய வீரனை ஆர்க்கிமிடீஸ் பார்த்தார்.

''என் அருமை நண்பனே! சற்றுப் பொறு, இந்த வட்டங்களை முடித்து விடுகின்றேன். பிறகு என்னைக்கொல்லலாம்'' என்றார்.

அவன் காத்திருக்கவில்லை. கத்தியைப் பாய்ச்சிவிட்டான். ★

— நன்றி: முத்தாரம்

தகவல்: கே. கணேசலிங்கம்.




## மா மரமே .. ஓ! .. மாமரமே!..

பாமரர்கள் வாழ்த்துகின்ற மாமரமே — உன்
நாமத்திலும் உயர்ந்து விட்டாய் கனிமரமே

மங்களநாள் வந்து விட்டால் உன் இலையை
எங்கெங்கும் தூக்கிடுவார் விதவிதமாய்
நங்கையும் மலர்வது போல் உன் கனியை
பங்கமின்றி பறித்தெடுத்தே உண்டிடுவார்.

கோடையிலே உன் நிழலில் தங்கிவிட்டால்
கோடி சுகம் கிடைத்திடுமே நெடுமரமே
வாடைக் காற்றில் பசுமை பொங்கிப் பூக்குலுங்க
பாடிடுமே குயில் தேனீ புள்ளினங்கள்.

பல் சுவைக்கனி இதமாகக் கனிந்துவர
பகலிரவாய் உனைச்சுற்றி வலம் வந்து
கிட்டாத தீங்கனியாம் உன்மகளை
அகங்குளிர அள்ளிக் கொண்டே சென்றிடுவார்.

உன்மகளைத் தூரத்தே அனுப்பி ஆங்கே
பொன் மகளாய் வளர்ந்து செஞ்சில் பூச்சூட
இன் சுவையாம் கனியினையே அவர்க்கீந்து
தன்மானங் காத்தே தலை மரமானாய்.

கனியுண்டு, காயுண்டு, விறகுண்டு மண்
தனையுண்ட இலைகள் தந்த வளமுண்டு
உன் நிழலில் வாழ்கின்ற உயிர்களுக்கு
என்னகுறை? மழைதருமே குளிர்மையுண்டு.

எஸ். சிவானந்தராஜா

## விடுகதைகள்

1. பொக்குளைத் தட்டினால் சிரிக்கும் அது என்ன...?
2. அம்மா அப்பாணி, பிள்ளை இழுப்பாணி இவர்கள் யார்?
3. மொட்டாக்குள் மூன்று மனிதர்கள் இது என்ன...?
4. நரைத்த கிளவி ஊர் எல்லாம் உலாவுகிறாள் யார் அவள்...?
5. கழுத்துண்டு தலைஇல்லை, கையுண்டு காலில்லை, வயிறுண்டு குடலில்லை இதுஎன்ன?

### விடைகள்

[illegible]

தொகுப்பு:- அல்லையூர் [illegible]

---

# பல்லாண்டு காலம் இணைந்து வாழ்வது எப்படி---?

காதலிக்கத் தெரியும். கல்யாணம் முடிக்கத் தெரியும். பல்லாண்டு காலம் வாழ்க்கையைக்கொண்டு செல்வது எப்படி......?

வாழ்க்கைப்படி சரியாக அமையாததன் காரணமாகத்தான் இன்று எத்தனையோ குடும்பங்களில் கணவன் மனைவியர் பிரிந்து வாழும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இது ஏன் ஏற்பட வேண்டும்? கல்யாணம் என்று வந்துவிட்டால் ஒருவரை மற்றவர் கட்டுப்படுத்துவதை விட்டு, கணவன் மனைவியரிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஏற்பட வேண்டும்.

இருவரும் தமக்குள் இருக்கும் உட்பூசல்களையோ, பிரச்சினைகளையோ பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும். இது கௌரவப் பிரச்சினையாக உருவாகக் கூடாது.

இல்லறவாழ்வினுள் நுழைந்த மனைவியானவள் கணவனுக்காக உயிரையும் கொடுக்கக்கூடிய மனைவியாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கும் கணவன், மனைவியும் அப்படியே எதிர்பார்ப்பாள் என்பதை மனதில் கொள்ளல் வேண்டும்.

கணவன் வீட்டுக்கு மனைவியாகச் செல்லும் நீங்கள் கணவனின் சகோதரர்கள், உறவினர்களை உங்கள் வீட்டு உடன்பிறப்பாக எண்ணி உபசரிக்க வேண்டும்.



இது மனைவிக்கு மட்டுமல்ல, கணவனுக்கும் பொருந்தும்.

இன்று பெரும்பாலும் கணவன் மனைவி இருவருமே வேலைக்குச் செல்பவர்களாக இருக்கிறார்கள்.

கடமை முடிந்து கணவனோ மனைவியோ வீட்டுக்கு வரும் பொழுது சிடுமூஞ்சிகளாக இல்லாமல் ஒருவரை ஒருவர் மலர்ந்த முகத்துடன் வரவேற்க வேண்டும்.

எந்த வேளையிலும் ஒருவருக்கொருவர் கோபமான சொற்களையோ தரக்குறைவான வார்த்தைகளையோ பிரயோகிக்கக் கூடாது.

கணவன் தவறு செய்திருந்தாலும் மனைவியானவள் அதனைச் சகித்துக்கொண்டு சந்தர்ப்பம் வரும்போது மெதுவாக அவன் குறைகளைச் சுட்டிக்காட்டித் திருத்த வேண்டும்.

இதுவும் மனைவி மட்டுமல்ல நிச்சயமாக கணவனும் கையாளவேண்டியதொன்றே.

முக்கியமாக மாதாந்தச் செலவீனங்களில் சிக்கல் ஏற்படும்போது வாழ்க்கைப் பிரச்சினையும், குடும்பத் தகராறும் தானாக வருகிறது.

இதற்கு இருவரும் மாதாந்த வருவாயை அனுசரித்து அதற்கேற்ப வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ★

— அகிலா




---

## குழந்தைகளை அடிப்பது பற்றி....

பெற்றோர்கள் குழந்தைகளை அடிப்பது பற்றி மேற்கு ஜேர்மனியில் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

2 ஆயிரம் பெற்றோர்களிடம் கருத்துக் கேட்டதில் கிடைத்த புள்ளி விவரம் இதுதான்.

30 சத வீதம் குழந்தைகள் 2 வயது ஆவதற்கு முன்பே



அடிவாங்கத் தொடங்குகிறார்கள்.

குழந்தைகள் எரிச்சலூட்டுவதால் அடிப்பதாக 52 சத வீதம் பெற்றோர் காரணம் சொல்கிறார்கள்.

குறும்பு செய்வதால் அடிப்பதாக 43 சத வீதம் பெற்றோர் கூறுகிறார்கள்.

குழந்தையை அடித்த பிறகு 18 சத வீதம் பெற்றோர் அதற்காக வருந்துகிறார்கள்.

48 சத வீதம் பெற்றோர் அந்த அடியைக் குழந்தை தாங்கிக் கொள்ளும் என்று கூட கவலைப்படுவது இல்லை. நம் நாம் நாட்டுப் பெற்றோர் இதில் எந்த ரகமோ! ★

---

# வேம்பை வளர்த்து உடல்நலம் பெறுவோம்!

வேப்ப மரம் வெப்பப் பிரதேசங்களிலும் குளிர்ப் பிரதேசங்களிலும் வளர்கிறது. வேம்பில் நில வேம்பு, மலை வேம்பு, வேம்பு என்று மூன்று வகை இருப்பினும் அவை வெவ்வேறு ஆகும். வேம்பை விம்பமரம் என்றும் சொல்வார்.

வேம்பின் இலை, பூ, காய், பழம், வித்து, மட்டை முதலிய அனைத்தும் மருத்துவ பயன் தருபவை ஆகும். வேம்பின் இலை கிருமி, பித்தம், சுரம், புண் முதலியவற்றைப் போக்கும, என்று அகத்தியர் கூறியுள்ளார், தேரையர் பித்தம், காமாலை போக்கும், புத்தி தீட்டும், கபம் ஓட்டும், வித்துக்கு வீரியம் ஊட்டும், அழல் அதிகம் ஆக்கும் என்று கூறுகிறார்கள் வேப்பசர்க்கை குடிநீர் செய்து தந்தால் குழந்தையின் மாந்தம் போகும். வேப்ப இலையுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து பற்றுப் போட்டால் அம்மைப் புண் ஆறும்.

வேப்பம்பூவை ரசமாகவும் துவையலாகவும், செய்து சாப்பிடலாம். இது வெப்பத்தால் ஏற்படும் சுவையின்மை, பெருமூச்சு, முதலியவற்றைப் போக்கும். வேம்பின் பழச்சதையை லேகியம் செய்து சாப்பிட தோல் வியாதிகள் விலகும்.

வேம்பின் வித்திலிருந்து எடுக்கப்படும் நெய் வாதம் போக்கும். அதன் பிண்ணாக்கை சுட்டு முகர்ந்தால் தடிமன் போகும். வேம்பின் உட்பட்டையை காய்ச்சிய பாலில் ஊறவைத்து பின்னர் அந்தப் பாலை அருந்தினால் வயிற்றுப் புழுக்கள் அழியும். குஷ்டம், கரப்பான் முதலிய நோய்கள் போகும். இவற்றுக்கு நூறு ஆண்டு வயதான மரத்தின் பட்டைகள் சிறப்பான பலனைத் தரும். அதன் பிசின் மேக ரோகத்தை போக்கும். போகர் 7000 என்ற நூலில் கருவேம்பு, சர்க்கரை வேம்பு என்னும் இரு வகைகள் உண்டு எனக் கூறப்பட்டுள்ளது. சர்க்கரை வேம்பு ஒரு காய கல்பம் ஆகும். இதன் கொழுந்தை உண்டால் அழுக்குகளை அகற்றி தூய்மைபடுத்துகிறது' உள் உறுப்புக்களையும், விந்துவையும் பலப்படுத்தி காய சித்தியை உண்டாக்கிறது. இதனால் ஆயுள் அதிகம் ஆகும். இதன் பட்டையில் உப்புச்சத்தும், வேரில் பாதரசச் சத்தும் இலையில் துத்தநாகச்சத்தும் இருப்பதாக போகர் நூலில் காணப்படுகிறது.

வேப்பங்காற்று உடம்புக்கு நல்லது. அதனால்தான் மந்திரிப்பதற்கு வேப்பிலையைப் பயன் பயன்படுத்துகிறார்கள். மாந்திரிகம், மோடி முதலியவற்றிலும் வேப்பிலையை பயன்படுத்துகிறார்கள். அரச மரத்தையும், வேப்பமரத்தையும் தெய்வமாகக் கருதும் மனப்பான்மை நம் மக்களிடையே உண்டு. அரசுக்கும் வேம்புக்கும் திருமணம் செய்து வைப்பார்கள். அம்மரங்களைச்சுற்றி வந்தால் பிள்ளை பிறக்கும். என்ற நம்பிக்கையும் நிலவி வருகிறது.

வேம்பின் கொழுந்தைக் கற்ப மூலிகையாக உண்டு வந்தால் உடம்பில் விஷ எதிர்ப்பு சக்தி உண்டாகும். அவ்வாறு உண்டவர்களை விஷக் கடிகள் பாதிக்காது. வேப்பங்கொட்டையில் இருந்து தயாரிக்கப்படும் ''நிம்பிடின்'' என்னும் எண்ணெய் பூச்சி கொல்லி மருந்துகளிலும் பற்பசையிலும் பயன்படுகிறது. தானியங்களைப் பாதுகாக்க தானியக்களஞ்சியங்களில் வேம்பின் காய்ந்த இலைகளைப் போடுவதுண்டு. வேம்பின் மகிமையை உணர்ந்தவர்கள் நம் முன்னோர். பாண்டியன் வேப்பமாலையை அணிந்தவன் என்பதும், மாரியம்மனுக்கு உரிய சின்னம் வேப்பிலை என்பதும் இந்த உண்மையை உணர்த்தும்.

மருத்துவப் பயன் மிக்க இம்மரத்தை வீட்டுக்கு முன்னும் கோயில்களிலும் மற்றும் இயன்ற இடங்களில் எல்லாம் வளர்த்து உடல் நலத்தை உயர்த்திக் கொள்வோமாக.

தொகுப்பு:- க. கனகராசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈகிளின் முன்னேற்றப் பயணத்தில் பங்காளியாகுங்கள்

ஸி.ரீ.ஸி. ஈகிள் காப்புறுதிக் கம்பனி லிமிட்டெட் பொதுமக்களுக்கான அதன் பங்கு விநியோகத்தை விரைவில் ஆரம்பிக்க இருக்கிறது.

முதலீட்டிற்கான ஓர் உன்னத வாய்ப்பு இதுவாகும். சமபங்கு முதலீட்டில் அக்கறையுள்ள இலங்கையர் இந்த வாய்ப்பை நழுவவிட முடியாது.

பங்கு வர்த்தகத்திலே, உத்தேச முதலீட்டாளர்கள் முதலில் அறிய விரும்புவது கம்பனிக்கு ஆதாரமளிக்கும் பங்காளிகள் யார் என்பதையே.

ஸி.ரீ.ஸி. ஈகிள் காப்புறுதியின் பின்னணியில் இருப்போர் தொழிற்றுறை உலகில் நன்கு பிரசித்தமானவர்கள்.

பிரதம பங்காளியான சிலோன் டுபாக்கோ கம்பனி இலங்கையில் உள்ள மிகப் பெரிய, மிக வெற்றிகரமாக இயங்கும் தனியார் நிறுவனங்களுள் ஒன்றுகும். பொருளாதாரப் பங்களிப்பு, திட்டமிட்ட பன்முக நிகழ்ச்சித் திட்டம், விவசாய நடவடிக்கைகள், ஏற்றுமதி அபிவிருத்தி, விளையாட்டுகளுக்கும் கலைகளுக்கும் வழங்கும் ஆதரவு ஆகியவற்றிற்கு அது புகழ் பெற்றது. இப்பொழுது, சிரிசி நிறுவனம் ஐக்கிய இராச்சியத்தின் ஈகிள் ஸ்டார் குருப்பின் ஒத்துழைப்புடன் ஸி.ரீ.ஸி. ஈகிள் நிறுவனத்தை அமைத்துக் காப்புறுதி மூலம் நிதித் துறைச் சேவைகளிலும் இறங்கியுள்ளது.

இந்த நாட்டில், சமபங்கு நிதி வளங்களுக்கு நிறுவன ரீதியான அமைப்பு அவசியம் என்பதால் மூலதன அபிவிருத்தி – முதலீட்டுக் கம்பனி லிமிட்டெட் உருவாக்கப்பட்டது. இதன் பிரதான பங்குதாரர்கள்:-

இலங்கை அரசாங்கம்
இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
இலங்கை வங்கி
மக்கள் வங்கி

முக்கிய நகரங்களில் கிளைகளைக் கொண்ட இலங்கையின் மூன்றுவது பெரிய சுதேச வங்கியான மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை கொமேர்ஷல் வங்கி.

காப்புறுதித் துறையில் அனுபவம் மிக்க, முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் காப்புறுதிச் சேவைகளில் முதலிடம் வகிக்கும் ஜேம்ஸ் ஃ.பின்லே அன்ட் கம்பனி (கொழும்பு) லிமிட்டட்.

எமது தொழினுட்ப ஒத்துழைப்பு நிறுவனமாகிய ஈகிள் ஸ்டார் குருப் ஐக்கிய இராச்சியத்தில் நிலைகொண்டுள்ள ஒரு மிகப் பெரிய காப்புறுதிக் கூட்டுநிறுவனமாகும். தற்கால வாழ்க்கையின் தேவைகளுக்கு அமைவாக பொது மற்றும் ஆயுட் காப்புறுதி ஒப்பந்தங்களை ஏற்படுத்திய ஒப்பற்ற பெருஞ்சிறப்பு அதற்குண்டு. ஈகிள் ஸ்டாரின் நிறுவன அமைப்புகள் எல்லாக் கண்டங்களிலும் 70 க்கு மேற்பட்ட நாடுகளில் வியாபித்துள்ளன. 1987 ன் முடிவில் அதன் உலகளாவிய வருடாந்தக் காப்புறுதிக் கட்டண வருமானம் 170 கோடி பவுண் ஸ்ரேலிங்கிற்கு (ரூ. 8500 கோடி) அதிகமாகவும் அதன் நிர்வாகத்திலுள்ள முதலீட்டு நிதி 800 கோடி பவுண் ஸ்ரேலிங்கிற்கு (ரூ. 400,00 கோடி) அதிகமாகவும் இருந்தது.

ஸி.ரீ.ஸி. ஈகிள் காப்புறுதி நிறுவனம் அதன் பங்கு விற்பனையில் கலந்துகொள்ளுமாறு பொதுமக்களுக்கு விரைவில் அழைப்பு விடுக்கும். எனவே, உங்கள் பார்வையைக் கருடனின் பக்கம் திருப்புங்கள்.! உயரத்தில் பறக்க வாருங்கள்.

விண்ணப்பப் படிவம் கிடைக்குமிடங்கள் -

★ ஸி.ரீ.ஸி. ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்.
★ சிலோன் டுபாக்கோ கம்பனி, அதன் கிளைகள், புகையிலை களஞ்சியங்கள், பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்கள்.
★ இலங்கைக் கொமேர்ஷல் வங்கியும் அதன் கிளைகளும்.
★ ஹட்டன் நஷனல் வங்கியும் அதன் கிளைகளும்
★ கொழும்பிலுள்ள பிரபல வங்கிகள்
★ பங்குத் தரகர்கள்.

## சீ.ரீ.சீ. ஈகிள் இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்.

ஈகிள் ஹவுஸ் 75, குமாரன் ரத்னம் வீதி, கொழும்பு 2
தொலைபேசி : 21670/21679/80/81
ரெலெக்ஸ் : 22849 CTCE CE, ஃபக்ஸ் : 547620



JWT CTC 2666


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகதோஷம் நீக்கி அருள்மழை பொழியும்

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம்!

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வரலாறு, மிக்க தொன்மையானது. ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் நரசிம்ம அவதார காலத்தில் இருந்து அதற்கு வரலாறு உண்டு. தட்சிண கைலாய புராணம், தட்சிண கைலாய மான்மியம் என்பன அதற்குச் சிறந்த ஒப்படைகளாகும்.

ஆதமாமுனிவர், கோமதி யாற்றங் கரையிலே நைமிசாரிணியத்து முனிவர்களுக்கு அருளிச் செய்த ஸ்கந்த புராணத்திலுள்ள தட்சிண கைலாய மான்மியத்தின் ''ஸ்வர்ணலயம் வல்லிபுரம் விஷ்ணு க்ஷேத்திரத்துவலயந்தா'' என்று அதன் வரலாறு சொல்லப்படுகின்றது. இரணியன் என்னும் அசுரன், தேவர்கள் தங்கள் பாதுகாப்புக்காகக் கட்டிய இரட்சைகளைத் தன்னுடைய தூதர்கள் மூலம் பறிப்பித்துக் கடலில் எறிந்தான். அவ்வாறு எறியப்பட்ட இரட்சைகளை மீட்டுக் கொடுப்பதற்காக ஸ்ரீமத் நாராயணன் மச்ச அவதாரம் எடுத்து அவற்றை எடுத்துக்கொடுத்து விட்டு கடலிலே மறைந்தருளினார்.

**அற்புதம்**

முன்னொரு காலத்திலே லவல்லியென்னும் பெண்ணொருத்தி இருந்தாள். அவள் மக்கட்பேறின்றி மலட்டுத் தன்மையால் மிக்க மனம் வருந்தி, மகா முனிவராக விளங்கிய பிருகு முனிவரிடம் சென்று தன் துயரை எடுத்துக் கூறினாள். ''நீ உனது முற்பிறவியிலே நாகம்பொன்றைக் கொன்றாய். அதனாலேயே இப்பிறவியில் உனக்கு நாகதோஷம் ஏற்பட்டு மலட்டுத் தன்மையைப் பெற்றுள்ளாய். இச்சாப தோஷம் நீங்க வேண்டுமாயின் சிவனை நோக்கித் தவம் செய்.''—இப்படிப் பிருகு முனிவர் திருவாய் மலர்த்தருளினார்.

லவல்லி நாச்சியாரும் அவ்வாறே தவஞ்செய்யுங் காலை சிவபிரான் தோன்றி, ''நீ மறுபிறவியில் வல்லிபுரம் எனும் தொல்பதியிற் பிறப்பாய். பத்மநாபன் மீன் வடிவங் கொண்டு உன் மடியில் குழந்தை வடிவமுடையவராவார். அவருடைய திருவடியைத் தீண்டிய உடன் உன் நாக சாபம் தீரும்''— என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஒருநாள் வல்லிபுரம் என்னும் திருப்பதிக்கு அண்மையில் உள்ள கற்கோவளம் கடலிலே மீனாகத் தோன்றி மீனவர்களின் வலையுட் புகுந்து அவர்கள் கையிற் பிடிபடுவதும், பின்னர் தப்பி விடுவதும் போன்ற திருவிளையாடல்களைச் செய்துகொண்டிருந்தார். ஆரம்பத்தில் இதுஸ்ரீமத் நாராயணன்ன் திருவிளையாடல் என்று அறியாத மீனவர்களும் அதனை எப்படியாவது பிடித்துவிடுவதென்று கங்கணம் கட்டி நின்றனர். என்னும் படிப்படியாக இது ஏதோ அற்புதச் செயல் என்று எண்ணிப் பரவசமுற்று இருந்தனர். இக் காட்சியைப் பார்க்க ஏராளமான மக்கள் கற்கோவளம் கடற்கரையில் கூடி நின்றனர். என்னே அதிசயம்! கடலிலே குதித்து விளையாடிக்கொண்டிருந்த மீன் துள்ளிப் பாய்ந்து வல்லி நாச்சியாரின் மடியிலே குழந்தையாகத் தவழ்ந்து கொண்டிருந்தது.

> சரித்திரப் புகழ் வாய்ந்த பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இதை யொட்டி ஆலய வரலாற்றை விளக்கும் இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

அப்பொழுது அப்பெண் பரவசமுற்றவளாய் குழந்தையை தன் கரங்களிற் தாங்கித் தாலாட்டினாள். துளசிமாலையோடும், பச்சை நிறத்தோடும் லவல்லி நாச்சியாரின் மடியில் இருந்த குழந்தையைத் தரிசித்த ஜனசமுத்திரமே பரவசமுற்றது. பின்னர் குழந்தையையும், வல்லியையும் ஒரு பல்லக்கில் வைத்து, கற்கோவளம் மக்கள் தூக்கி வல்லிபுரம் பதியை நோக்கிச்சென்று கொண்டிருந்தனர். பல்லக்கைத் தூக்கிவந்தவர்களுக்கு களைப்பு ஏற்பட்டதனால் ஒரு மரநிழலில் பல்லக்கை இறக்கி வைத்துத் தாகசாந்திசெய்து கொண்டபின் மீண்டும் பல்லக்கைத் தூக்கியபோது பல்லக்கை அசைக்கமுடியாமல் இருந்தது. எம்பெருமானின் திருவிளையாடல் என்னே! என்று அதிசயித்து இருந்த வேளையில், குழந்தையாக இருந்த நாராயணன் கிழப் பிராமணன் வடிவம்தாங்கி ஒரு சக்கராயுதத்தை அங்கிருந்தவர்களிடம் கொடுத்து 'இதனைவைத்துப் பூஜியுங்கள்' என்றுசொல்லி மறைந்தருளினார்.

**கைலாய மான்மியம்**

இவையனைத்தும் கற்பனையோ அன்றிக்கர்ணபரம்பரைக் கதையோ அல்ல. நையிசாரிணியத்து முனிவர்களுக்கு ஆதமாமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய ஸ்கந்த புராணத்தின் தட்சிணகைலாய மான்மியத்திலேயே சொல்லப்பட்டுள்ளது.

இதனை உண்மையென உணருவதற்கு ஏதுவாக சில சம்பவங்களைக் கொள்ளக்கூடியதாக உள்ளது.

1. ஏனைய ஆலயங்களைப் போலன்றி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் தீர்த்தோற்சவ தினமான புரட்டாதி மாதப் பூரணையில் சமுத்திர தீர்த்தம் வல்லிபுரப் பதியிலிருந்து பல மைல்களுக்கு அப்பால் உள்ள சமுத்திரத்தில் நடைபெறுகின்றது. அதற்கு அடுத்த நாளே நன்னீர்த்தீர்த்தம், பட்டுத்தீர்த்தம் என்ற பெயரில் நடைபெறுகின்றது. இவ்வாறு சமுத்திரதீர்த்தம் நடைபெறும் இடமே அன்று நாராயணமூர்த்தி திருவிளையாடல் நடத்திய இடம் என்று சொல்லப்படுகின்றது. இத்தினத்தன்று இலங்கையில் எல்லாப் பகுதிகளில் இருந்தும் மக்கள் கூடுவர்.

2. இச்சமுத்திர தீர்த்தத்திற்கு உற்சவ உபயகாரர்களாக கற்கோவளம் கிராமத்தைச் சேர்ந்தவர்களே உள்ளனர்.

3. கற்கோவளம் கிராமம் வல்லிபுரப்பதியில் இருந்து ஏறக்குறைய மூன்று மைல்களுக்கு அப்பால் இருந்த போதும் இடையே பல ஊர்கள் இருந்தபோதும் இக் கிராம மக்கள் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் மூன்று முக்கிய திருவிழாக்களுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பதுடன், கோவிலின் திருத்தொண்டுகளிலும் முக்கிய பங்கினைப் பண்டைக்காலத்திலிருந்து வகித்து வருகின்றனர்.

4. பல்லக்கில் இருந்து வல்லிநாச்சியாரைத் தூக்கி வந்தது போன்றே சமுத்திர தீர்த்த உற்சவ காலங்களில் உற்சவ மூர்த்தியைத் தூக்கிச் செல்லும் உரிமையும் கற்கோவளம் மக்களுக்கே இருந்து வருகின்றது.

**சரித்திர வரலாறு**

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு பாரிய புகழ் வாய்ந்த சரித்திர வரலாறு உண்டு. காத்தற்கடவுளாம் நாராயண மூர்த்திக்கு இலங்கையின் வடமுனையாம் பருத்தித்துறையில் இவ்வாலயம் இருப்பது போன்றே தென்முனையாம் தேவிநுவர என்னும் மாத்தறையிலும் ஒரு விஷ்ணு ஆலயம் உண்டு. இவ்வாலயம் அமைந்துள்ள வல்லிபுரப்பதி வட இலங்கைத் தமிழ் மன்னர்களின் பண்டைத் தலைநகரான சிங்கநகராகுமென்பது ஆராய்ச்சி அறிஞர்கள் கண்ட முடிவாகும். கி. பி. எட்டாம் நூற்றாண்டில் கலிங்க அரசன் உக்கிரசிங்கன், கதிரமலை அரசைக் கைப்பற்றி மாருதப்புர வீகவல்லியென்னும் சோழ இராசகுமாரியை மணந்து பின் கதிரமலையை விட்டு சிங்கை நகரைத் தன் இராச தானியாக்கினான். பருத்தித் துறைக்கண்மையில் மணல் மேடுகள் கொண்ட இப்பிரதேசமே சிங்கை நகர் என்று 'யாழ்ப்பாண வைபவ விமர்சனம்' சொல்கின்றது.

இவ்வாறு கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இருந்து 15 ஆம் நூற்றாண்டு வரை இவ் வல்லிபுர ஆழ்வார் ஆலய பிரதேசமே இராசதானியாக இருந்து வந்தது. இதற்குப் பின்னரே 15 ஆம் நூற்றாண்டில் இருந்து போர்த்துக்கேயர் வரும்வரை நல்லூர் இராசதானியாக்கப்பட்டது. சிங்கைநகரை இராச தானியாக வைத்து ஆண்ட மன்னர்கள் அக்காலத்தில் இருந்து கல்வியை நன்கு வளர்த்து மக்களை மேம்படுத்தினர் என்பதற்கு அப்பகுதியைச் சூழ்ந்துள்ள மக்கள் இன்றும் கல்விச் சிறப்புப் பெற்றிருப்பதும் அவ்வூர்களின் பெயர்களும் சான்றாக உள்ளன. (உ+ம்: கற்கோவளம் கற்ற அரசர்களால் வளம்படுத்தப்பட்ட ஊர், புலோலி(புலவர்+ஒலி)

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த வல்லிபுர மாயவன், அன்று லவல்லி நாச்சியாரின் நாகதோஷம் நீக்கியது போன்றே இன்று தன்னை நாடி வருகின்றவர்களுக்கெல்லாம் நாகதோஷத்தை நீக்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார் என்பது அனுபவ உண்மைகளாகும். ★

- கற்கோவளன் -

## துயர உணர்ச்சி

மனமது மகிழும் போது
வருமிசை மகிழ்ச்சி கூட்டும்
மனமது கலங்கும் போது
வருமிசை கவலை சேர்க்கும்

இயல்பிது மனித வாழ்வில்
இயற்கையும் மகிழ்ச்சி ஊட்டும்
துயரது வந்து சேர்ந்தால்
சூழலே துயரைக் கூட்டும்

குழந்தையின் மழலை தானும்
குழலினின் ஓசை தானும்
மனதினில் துயரம் கண்டால்
மாறியே வெறுக்கத் தோன்றும்

கொடியினில் பூத்த முல்லைக்
கொத்துடன் பறித்துச் சூடி
மகிழ்வது வழக்க மாகும்
மலர்களும் மகிழ்ச்சி ஊட்டும்

துயரமே சூழ்ந்த தாலே
சூடிடும் முல்லை கூட
பூத்தது பொருத்த மில்லை
புலவனே வெறுத்தான் பாடி

ஊரெலாம் கவலும் போது
உனக்கு ஏன் மகிழ்ச்சி என்று
கேட்கிறான் முல்லை தன்னை
கேள்வியில் துயரம் தோன்றும்

— வ. யோகானந்தசிவம்

## தினமும் 200 பேர் மேற்கு ஜேர்மனியில் தஞ்சம்!

தினமும் 200 முதல் 300 வரையான வெளிநாட்டவர் மேற்கு ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி வருகின்றனர்.

அவர்களின் விண்ணப்பங்களில் 10 இல் 1 தான் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இருப்பினும் மூன்றாம் உலக நாடுகளில் இருந்தும் கிழக்கு ஐரோப்பாவில் இருந்தும் மேற்கு ஜேர்மனி செல்லும் அகதிகள் எண்ணிக்கை கூடுகிறது.

இந்த ஆண்டின் (1988) முதல் 6 மாதங்களில் சுமார் 40 ஆயிரம் வெளிநாட்டவர் மேற்கு ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

தஞ்சம் கோருபவர் தெரிவு செய்யும் முதலாவது ஐரோப்பியநாடு என்ற பெருமை மேற்கு ஜேர்மனிக்குக் கிடைத்திருக்கிறது.

தற்சமயம் 45 லட்சம் வெளிநாட்டவர் மேற்கு ஜேர்மனியில் வாழ்கின்றனர். அந்த நாட்டு சனத்தொகையில் இது 7.5 சதவீதமாகும்.

அவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் அங்கேயே பிறந்தவர்கள்; சொந்த நாட்டுத் தொடர்பே அற்றவர்கள்.

இரண்டாம் யுத்தத்துக்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதாரப் புரட்சியைக் கண்டு மேற்கு ஜேர்மனி சென்றவர்களே பெரும்பாலோர்.

இவர்களில் 15 லட்சம் பேர் துருக்கியர்கள். 6 லட்சம் யூகோஸ்லேவியர்களும் 5½ லட்சம் இத்தாலியர்களும் 2 லட்சத்து 80 ஆயிரம் கிரேக்கர்களும் அடங்குகின்றனர்.

1980 க்கும் 1987 க்கும் இடைப்பட்ட காலத்தில் 5 லட்சம் பேர் வரையில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்தனர்.

சட்டபூர்வமாகவோ, சட்ட விரோதமாகவோ 5 லட்சம் பேர் அகதிகளாக மேற்கு ஜேர்மனியில் வசிப்பதாக ஜெனிவா அகதிகள் அமைப்பு தெரிவித்திருக்கிறது.

90 சத விதமான அகதிகள், அகதிகளுக்குத் தேவையான தகுதியைப் பெற்றிருக்கவில்லை.

அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்துவது மேற்கு ஜேர்மனியின் அரசுக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்கு ஜேர்மனி கூட்டரசில் அங்கம் வகிக்கும் கன்சர்வேட்டிவ் கட்சி, அகதிகள் நாட்டுக்குள் வருவதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று வாதாடி வருகின்றது.

லிபரல் கட்சியோ அகதிகள் விஷயத்தில் அரசு தாராளமாக நடந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றது.

மனிதாபிமான அம்சங்களுக்கு முன்னுரிமை கொடுத்து மேற்கு ஜேர்மனி சமுதாயத்துடன் இணைய வெளிநாட்டாரை அனுமதிக்க வேண்டும் என்றும் லிபரல் கட்சி கூறுகிறது.

தஞ்சம் கோருபவர்களில் பத்துச் சதவீதத்தினரையே மேற்கு ஜேர்மனி அகதிகளாக அங்கீகரிக்கிறது. அதுவும் நீண்டகால நடைமுறை ஒன்றின் பின்னரே இடம் பெறுகிறது.

இக்கால இடைவெளியில் வெளிநாட்டவர் தங்கள் அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள முடியும்.

உதாரணத்துக்கு மேற்கு ஜேர்மன் பிரசை ஒருவரை மணந்து கொள்வதன் மூலம்.

## அவள் ஒரு நாணல்

சிறுகதை

சைக்கிளை நெல்லிமரத்தோடு சாத்திப் பூட்டிவிட்டு வீட்டுக்குள்ளே வருகிறான சிவானந்தன்.

யாருக்கும் எதுவுமே சொல்லிக் கொள்ளாமல் கட்டிலில் விழுந்து படுக்கிறான். மண்டைக்குள் 'ஷெல்' துளைத்த மாதிரி விண் விண் என்று வலித்தது.

'சிவா! எங் டராசன் அத்தான் மூண்டு மாத லீவிலை கனடாவாலை வந்து நிற்கிறார்... அவருக்கும் எனக்கும் முடிச்சுப்போட முயற்சி நடக்குது போலை தெரியுது... எனக்கென்றால் சரியான பயமாயிருக்குது சிவா... அப்பிடியெண்டால் நான் செத்துப் போவன்...'

கண்ணை மூடினாலும் திறந்தாலும் விஜோதியின் இந்தப் பயம் கலந்த வார்த்தைகள் காதுக்குள் முள்ளாய்க் குத்தின. இவ்வார்த்தைகள் அவனின் நிம்மதியைக் கெடுத்தன.

'டேய் சிவா! .. உன்னேட கதைப்பம் எண்டு பாத்தன்... அதுக்கிடையில என்ன நித்திரையாய்ப் போனயே......' அழைத்தது அவனுடைய அக்கா தேவிதான்.

'இல்லை...சொல்லுங்கோ...' என்றான் கண்களைத திறவாமலே. அவள் என்ன சொல்லப் போகிறா என்கிற ஆவல் இல்லாமல்.

'அந்தப் பொம்பிளையின் தகப்பன் காலமையும் வந்திட்டுப் போகிறார்... வேணுமெண்டா காசில கொஞ்சம் கூட்டித்தரலாமாம்... அவைக்கு உன்னை நல்லாப் பிடிச்சுக் கொண்டுது போலை... அதுதான் ஒற்றைக் காலிலை நிற்கினம்... 'பொம்பிளையும் நல்ல வடிவு...சோலி சுறட்டில்லாத இடமும் .. சிவாவுக்கு நீரெண்டாலும் புத்தி சொல்லும்' எண்டு அத்தானும் சொல்லுகிறார்... நீ வடிவா யோசிச்சுப் பார் தம்பி...

அக்கா மீது ஒருகணம் ஆத்திரம் பிறிட்டது அவனுக்கு. 'என்னால எதுவும் யோசிக்க ஏலாது... என்னை நிம்மதியாக இருக்க விடுங்கோ...' எழுந்து உட்கார்ந்து தலையை இரு கைகளிலும் புதைத்துக் கொண்டான்.

உனக்கு நல்லதொரு வழி காட்டலாம் என்று தான் பக்கிறம்... நாளைக்கு நீயும் ஒரு பொம்பிளைப் பிள்ளைக்குத் தேப்பனாகி... ஒவ்வொரு படியிலும் ஏறி இறங்கினத்தான் உனக்கும் புத்திவரும்... பாவப் அந்த மனுஷன் எத்தினை தடவை வந்திட்டுது......'

'ஒரே முடிவா ஏலாதெண்டு சொல்லுங்கோ...... ஏன் அலைக்கழிக்கிறியள்......?' அக்கா தேவி கதிரையை விட்டு எழுந்தாள். பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிச்சா உலகம் இருண்டு விடுறதில்லையடா சிவா...... நீ ஏன் இதற்கு மறுக்கிறாயெண்டு எங்களுக்குத் தெரியும்......'

தேவியின் பேச்சில் ஒருகணம் திடுக்குற்று அவன் மௌனமானான்.

'வளர்ப்புப் பிராணி மாதிரி அவன் உன்னைச் சுத்திச் சுத்தி வரேக்குள்ளேயே நான் பயந்தனான்... எண்டாலும் உன்னில நம்பிக்கை இருந்தது... அந்தக் குடும்பத்திலை நீ கால் வைக்க மட்டும் நான் விடமாட்டன்...' தேவி தொடர்ந்தாள்.

'ஏன் அந்தக் குடும்பத்துக்கென்ன...?' என்றான் இறங்கின குரலில், 'இந்த ஊர் உலகம் முழுக்கத் தெரிஞ்ச கதை...... உனக்குத் தெரியாதெண்டு நம்பச் சொல்லுறியே......' அக்கா ஏளனமாய்க் கேட்டாள்.

'அந்தக் கதையளை நானென்டும் நம்பிக் கவலைப்படேல்லை......'

'கண்கெட்ட பிறகுதான் கவலை வரும்... இப்ப வராது தான்...... தாயைப் போல பிள்ளை... நூலைப்போல சீலை எண்டு சும்மாவே சொல்லுறவை...?'

அதற்கு மேலும் கதையை வளர்த்துக்கொண்டு போய் அந்தக் குடும்பத்தின் அந்தரங்கங்களை அநாகரிகமான முறையில் விமர்சிக்க அவன் விரும்பாமல் மௌனித்தான்.

'உனக்கு முடிவாச் சொல்லுறன் சிவா... உன்ரை எண்ணப்படி நீ தவராசன்ரை தங்கச்சியைத் தான் கட்டுறதெண்டால்... பிறகு உனக்கும் எங்களுக்கும் ஒரு உறவும் இராது... நாங்கள் தேவையா இல்லையா எண்டதை நீ முடிவு செய்து கொள்...' அவள் வெளியேறினாள்.

அவள் போன பிறகு...... நீண்டநேரமாய் அவன் மனத்துடன் போராடினான். அவளைப் பொறுத்தவரைக்கும் விஜோதினி இல்லாத வாழ்க்கை சூரியன் இல்லாத ஆகாயம் போல்தான்.

அவளுக்கும் ராசனுக்கும் திருமணம் நடந்துவிட்டால்... அதற்குமுன் அவளைக் காப்பாற்ற வேண்டும். மிகவும் பயந்த சுபாவமுள்ளவள் விஜோதினி. வீட்டுக்காரரை எதிர்க்கப் பயந்து தற்கொலை செய்துவிட்டால்...... என்ற நினைப்பு அவனை மிகவும் மிரட்டிக் கொண்டிருந்தது.

★ ★ ★

காலை எழுந்ததும் வழக்கம் போல அவன் குளித்து பாடசாலைக்குப் புறப்பட்டான். இரவு நடந்த உரையாடலுடன் அக்கா அவனுடனான உறவை முறித்துக்கொண்ட மாதிரி...... முகம் கொடுத்துப் பேசாமல் திரிந்தாள். எந்த விதமான உணர்வையும் வெளிக்காட்டாமல் அவன் சயிக்கிளை எடுத்தபோது,

'நீ சாப்பிடேல்லையே ராசா...?' என்றாள் அம்மா.

'இல்லை...' என்றுவிட்டு சைக்கிளை 'கேற்' வரை உருட்டினான்.

முகில் கலைந்த ஆகாயம் போல் அவன் மனமும் தெளிவாக இருந்தது; விஜோதினி வீட்டுப் படலையில் அவன் போய் நின்றான்.

'ஏன் சிவா... இண்டைக்கு ஸ்கூலுக்கு லீவே...' அவளுக்கு ஆயிரம் ஆயிரமாய் சொல்ல நினைத்த எதுவும் சொல்லமுடியாமல் சிக்கிக்கொண்டன.

'என்ன சிவா! ஒருமாதிரியா இருக்கிறியள்?... ஏதும் பிரச்சினையே?... எனக்குப் பயமாயிருக்கிறது...' அவள் விழிகள் கலவரத்துடன் அவனை நோக்கின.

'எங்கட விஷயத்தைகேள்விப்பட்டு அக்கா துள்ளினா... இனிமே நான் வீட்டைபோறதில்லை என்று முடிவெடுத்திட்டன்...

'ஐய்யய்யோ... என்ன செய்யப்போறியள் சிவா...' அவள் பதறிப்போனாள்......

'உமக்கும்கூட இப்ப ராசன் விஷயத்தாலை நெருக்கடி தானே விஜோ... பேசாமல் நாங்கள் ஒரு புதுவாழ்க்கையைத் துவங்குவம்......சரி தானே...'

'நீங்கள் என்ன சொல்லுறியள் சிவா...'

[illegible]

நான் உம்மைக் கைவிடமாட்டன் விஜோ... இந்த நிமிசமே உம்மைக் கூட்டிக்கொண்டு போக நான் தயாராக இருக்கிறேன்... வாழ்க்கையில சேரப் போகிற இருவரும்தான் அது பற்றிய முடிவை எடுக்க வேணும்... மற்றவை எடுக்கிற முடிவுக்கு நாம் வாழ ஏலாது...' கூறிவிட்டு அவன் அவளுடைய முகத்தை ஆவலோடு பார்த்தான். அவள் மௌனம் கலைவதாக இல்லை– அவனே அந்த மௌனத்தைக் கலைக்க முன்வந்தான்.

'என்ன விஜோ கடுமையாக யோசிக்கிறீர்?...நான் ஒண்டும் அவசர முடிவு எடுக்கேல்லை... எப்ப எடுத்தாலும் இதே முடிவைத்தான் என்னால் எடுக்கமுடியும்...'

'என்னை மன்னிச்சிடுங்கோ சிவா...' ஒருகணம் நிலைகுலைந்துபோய் அவளைப்பார்த்தான் சிவானந்தன்.

'நீங்களில்லாமல்... உங்கட நினைவுகளோடை என்னால வாழமுடியும் சிவா... ஆனால்··· ஓடிப்போனவள் என்ற பட்டத்தோடை என்னால வாழ முடியாது...! பெற்றவர்களின்ரை ஆசீர்வதிப்புக்களில்லாமல்... அவர்களுடைய வயிற்றெரிச்சலுடன் நாங்கள் வாழமுடியுமென்று நான் நினைக்கேல்லை... எவ்வளவு காலம் கடந்தாலும் அவர்களின்ரை பூரண சம்மதத்தோடை நாம் வாழ முயல்வோம் சிவா...' கூறிவிட்டு அவள் உள்ளே போய்விட்டாள்.

சிவா சிலையானான். விஜோதினி நாணல் ஆனாள். ★

- ஆதிலட்சுமி இராசையா -

## ஆதவன் வழிபாடும் ஆவணி ஞாயிறும்

இந்துக்களின் கண்கண்ட தெய்வங்களாய் விளங்குபவர் சூரியர், சந்திரர் ஆவர். சிங்க மாதமெனப்படும் ஆவணியில் பிரதி ஞாயிற்றுக் கிழமையும் சிங்கராசியதிபதியுமாகிய சூரியனுக்குரிய வாரங்களாகக் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன.

உடல் கண் சம்பந்தமான நோய்க் குறைபாடுள்ளவர்களும் ஒளிமயமான வாழ்வைப் பெற்றுக் கொள்ளவும் இவ்விரதம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

இந்நாட்களில் இந்துக்கள் அனைவருமே காலையில் ஆசார அனுட்டானங்களுடன் பன்னிரு செவ்வரத்தை மலர்களால் அல்லது செந்தாமரை மலர்களால் பன்னிரு சூரியர்களின் பெயர்களையும் சொல்லி வழிபட வேண்டும்.

அத்துடன் சூரியனுக்கு நைவேத்தியமாக சர்க்கரைப் பொங்கலிட்டு வணங்குவதும் பிரதானமானதாகும்.

இவ்விரதநாட்களில் நாகதோஷம் உடையவர்கள் அறுகம்புல்லினை விநாயகப் பெருமானுக்குச் சாத்தி வழிபட்டு வந்தால் அத்தோஷம் நிவர்த்தியாகும்.

சூரியபகவானின் மகனான சனீஸ்வரனின் சேஷ்டைகளுக்கு உட்பட்டவரும் இவ் அரியகாலத்தில் (ஏழரைச் சனி, அட்டமத்துச்சனியினால் பீடிக்கப்பட்டிருப்போர்) திரிகரண சுத்தியோடு வழிபாடு செய்து வந்தால் தோஷ நிவாரணம் கிடைக்கும்.

அதாவது மஞ்சள் மலர்களினால் (10 பூ) சூரியனைப் பார்த்து ''சிவசூரிய நாராயண சுவாமியே நமஹா'' என்று பத்துமுறை சொல்லி வணங்கி வரவும். ★

தொகுப்பு:
செல்வி சற்குணவதி சண்முகலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து அணி கப்டன் ஹுச் இந்தியா வர அனுமதிக்கப்படுவாரா?

இங்கிலாந்து கிரிக்கெட் சழகம், வருட இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்ளும் அணியின் கப்டனாக கிரஹாம் ஹுச் என்பவரைத் தெரிவு செய்திருக்கிறது.

இது இந்தியாவுக்குப் பெருத்த தலையிடியைக் கொடுத்திருக்கிறது.

காரணம் ஹுச் தென் ஆபிரிக்கா சென்று கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொண்டதே.

ஹுச் இந்தியா வர அனுமதிக்கக்கூடாது என்று இந்தியாவுக்குச் சொல்லப்பட்டுள்ளது.

1994 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியை தனது நாட்டில் நடத்தவேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

1994 போட்டி எங்கே நடத்தப்பட வேண்டும் என்பது இம் மாதம் 15 ஆம் திகதி தீர்மானிக்கப்படும்.

பிரிட்டிஷ் கொலம்பியாவும் வேல்ஸும் தங்கள் நாட்டில் போட்டி நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகின்றன.

இந்த நிலையில் ஹுச் இங்கிலாந்து அணியின் கப்டனாக வருவதை அனுமதித்தால் 1994 போட்டியை நடத்த இந்தியா தெரிவு செய்யப்படுவதை ஆபிரிக்க நாடுகள் எதிர்க்கும்.

ஹுச்சிற்கு அனுமதி வழங்க மறுத்தால் இங்கிலாந்து கிரிக்கெட் அணி தனது 11 வார இந்தியப்பயணத்தை ரத்துச் செய்து விடும்.

ஹுச் 1982 இல் தென் ஆபிரிக்கா சென்று விளையாடினார்

அதன் காரணமாக ஐ. நா. வின் கறுப்புப் பட்டியலில் அவர் பெயர் இடம்பெற்றது.

1994 காமன் வெல்த் விளையாட்டுப் போட்டி எங்கே என்பது இம் மாதம் 15 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்ட பின்னர் கிரஹாம் ஹுச் வர அனுமதிப்பதா என்பதை இந்திய கிரிக்கெட் சபை முடிவுசெய்யப்போகிறது. ★

## உஷா ஒலிம்பிக் செல்வாரா!

உஷா ஒலிம்பிக் செல்வாரா? கால் வலியைத் தொடர்ந்து எழுந்துள்ள கேள்வி.

இந்தியாவின் ஓட்டப்பந்தய ராணி என அழைகப்படும் பி. டி. உஷாவுக்கு காலில் திடீர்வலி ஏற்பட்டிருக்கிறது.

சோல் ஒலிம்பிக்கில் குறிப்பாக 400 மீற்றர் தடை தாண்டு ஓட்டப்போட்டியில் உஷா தங்கப்பதக்கம் பெறுவார் என்கிற நம்பிக்கையிருந்தது.

ஆனல் சமீபத்தில் லண்டனுக்குச் சென்று வந்தபின் உஷாவின் வலது காலில் கடும் வலி ஏற்பட்டது.

அதன் காரணமாக சடந்த சில தினங்களாக எந்த வித பயிற்சியையும் அவர் மேற்கொள்ளவில்லை. இது இந்தியா தரப்பிலும் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஒலிம்பிக் போட்டிக்குச் செல்லும் உடற்பயிற்சி வீரர்கள் முதலாவது தெரிவு புதுடில்லியில் நடந்தது. அதிலும் உஷா கலந்துகொள்ளவில்லை.

உஷாவுக்காக எந்தச் சலுகையும் அளிக்கப்போவதில்லை. தேர்வுப்போட்டிகளில் கலந்து வெற்றிபெற்ருல் மட்டுமே ஒலிம்பிக்குழுவில் சேர்க்கப்படுவார் என உடற்பயிற்சிச் சங்கம் எச்சரித்துள்ளது.

இதன்படி உஷா ஒலிம்பிக் செல்வாரா? என்பதே கேள்விக்குறியாகிவிட்டது. ★

## எழுதத் தடை

இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் பத்திரிகைகளில் எழுதக்கூடாது என்று தடைவிதிக்சப்பட்டுள்ளது.

மீறிப் பத்திரிகைகளில் எழுதும் வீரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தியக் கிரிக்கெட்சபை தீர்மானித்துள்ளது. ★

## குத்துச்சண்டை மூலம் தீர்வு காணப்படும்

ஒரு நிமிடத்தில் 60கோடி ரூபா பரிசுப் பணம் பெற்று உலகக் குத்துச் சண்டை சாம்பியனுக வந்தவர் மைக் டைஸன்.

இவரிடம் தோற்றவர் ஸ்பிங்க்ஸ்.

இவ்வளவு பெருந்தொகைப் பணத்தைக் குத்துச்சண்டை உலகில் எவரும் பெற்றதில்லை.

ஆனல் சாம்பியனுக வந்த பின்னர் மைக் டைஸன் இரண்டு சம்பவங்களில் காயமடைந்தார்.

நியூயார்க் நகரில் வீதியில் நடந்து வந்து கொண்டிருந்த போது இன்னெரு குத்துச் சண்டை வீரர் மிட்ச் கிறீனுடன் மோதிக் கொண்டார்.

அதில் டைஸனின் கையில் மயிரிழை உடைவு ஏற்பட்டது. கிறீனுக்கு மூக்கில் காயம் ஏற்பட்டது. ஐந்து தையல்கள் போடப்படவேண்டியதாயிற்று.

என்னுடன் மீண்டும் ஒரு குத்துச் சண்டை மோதலில் ஈடுபடுவதாக டைஸன் ஒப்புக் கொண்டுள்ளார். அதனுல் டைஸன் மீதான வழக்கை நான் கைவிடத் தீர்மானித்துள்ளேன்''—

இப்படிக் கிறீன் தெரிவித்தார்.

இதனிடையில், கடந்த ஞாயிறு டைஸன் கார் விபத்து ஒன்றில் சிக்கிக் கொண்டார். காயங்கள் ஏற்பட்டன. ஆனல் அவை பாரதூரமாக இல்லை என்று அறிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக டைஸன் மீண்டும் ஒப்புக் கொண்ட பிரிட்டன் வீரர் பிராங்க் புருனே வுடனுன மோதல் திட்டமிட்டபடி அடுத்தமாதம் 6 ஆம் திகதி லண்டனில் இடம் பெறுமா? என்பது கேள்விக் குறியாக உள்ளது. ★

## பத்தாண்டுகள் தடை

உலாப் புகழ் பெற்ற உதைபந்தாட்ட வீரர் ஒருவர் மீது பத்துஆண்டுகளுக்கு விளையாடக்கூடாது என்று தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1974 உலக கிண்ணத்துக்காக விளையாடிய ஆஸ்திரேலிய அணியில் இடம்பெற்ற பீட்டர் ஒல்லேர்ட்டனே இத்துர திருஷ்டசாலி.

37 வயதான இவர் கடந்த மாதம்ஒரு போட்டியின் போது மத்தியஸ்தருக்கு முகத்தில் குத்து ஒன்றை விட்டார்.

ஆஸ்திரேலியாவின் சார்பில் 30 க்கு மேற்பட்ட சர்வதேச போட்டிகளில் இவர் பங்குபற்றினர்.

இந்த ஆண்டு முற்பகுதியில் இன்னெரு ஆஸ்திரேலிய உதைபந்தாட்ட வீரர் இஸ்ரவேல் வீரரை உதைத்ததற்காக 6 மாதகாலம் விளையாடக்கூடாது என்று தடை விதிக்சப்பட்டார். ★

# 37 ஆயிரம் டாலர் நஷ்டஈடு; இஸ்ரவேலுக்கு இந்தியா வழங்கியது!

1987 ஏப்ரலில் டேவிஸ் கிண்ண டென்னிஸ் இறுதிப் போட்டியில் மறுத்ததற்காக இந்தியா 37 ஆயிரம் டாலர் பணத்தை நஷ்டஈடாக இஸ்ரவேல் டென்னிஸ் சங்கத்துக்கு வழங்கியது.

சென்ற ஆண்டு இறுதிப் போட்டி இஸ்ரவேல் தலைநகர் டெல் அவிவில் நடந்தது.

இறுதிப் போட்டியில பங்குபற்ற இந்தியா தகுதி பெற்றது. விஜய் அமிர்தராஜ் இறுதிப் போட்டியில் விளையாட இருந்தார்.

பலஸ்தீனியர்களை அடக்கும் இஸ்ரவேலுக்குச் சென்று போட்டியில் விளையாடக் கூடாது என்று கோரிக்கை எழுப்பப்பட்டது.

அதைத் தொடர்ந்து இந்திய டென்னிஸ் குழு இஸ்ரவேல் செல்லக்கூடாது என்று பிரதமர் ராஜீவ் காந்தி உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்தே இந்தியா கலந்து கொள்ளவில்லை.

சர்வதேச டென்னிஸ் கழகம் டேவிஸ் கிண்ணப் போட்டிகளில் இந்தியா கலந்து கொள்வதற்கு ஒரு வருட காலத் தடை விதித்தது.

நஷ்டஈடு வழங்குவதாக இந்தியா சம்மதித்ததைத் தொடர்ந்து தடையை நீக்கிய சர்வதேச டென்னிஸ் கழகம் போட்டியின் மூன்ருவது கடைசிப் பிரிவுக்கு இந்தியாவைத் தரம் குறைத்தது. ★

## பரபரப்பு ஏற்படுத்திய பார்பரா

லண்டனில் விம்பிள்டன் டென்னிஸ் போட்டி அண்மையில் நடந்து முடிந்தது அல்லவா!


பெண்களுக்கான போட்டியின் ஒரு கட்டத்தில் அமெரிக்க வீராங்கனை பார்பரா போர்ட்டர் பரபரப்பை ஏற்படுத்தினர்.

ஆட்ட ஓய்வு நேரத்தில் மைதானத்தில் வைத்தே பாார்பரா தனது சட்டையைக் கழற்றி வேறு சட்டை அணியத் தொடங்கினர்.

அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். பாதுகாப்பு அதிகாரிகள் பார்பராவைச் சுற்றி வளைத்துக்கொண்டனர்.

''மேடம்! இனிமேல் இப்படி எல்லாம் செய்து தொந்தரவு தராதீர்கள்''—இப்படிப் பாதுகாப்பு அதிகாரிகள் பவ்யமாக பார்பராவுக்கு எடுத்துச் சொன்னர்கள். ★

## சொற்சிலம்பம்




போட்டி இல. 87

சொற்சிலம்பம் இல: 87
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

———— இங்கே வெட்டுக ————

**முடிவு திகதி: 21-9-1988**

### இடமிருந்து வலம்

1. பனே, 6. நடனத்தின் ஒரு பிரிவு (மாறியுள்ளது) 7. அஹிம்சாவாதி (குழம்பிய நிலையில்), 8. யுகங்களில் ஒன்று (மாறி நிற்கிறது), 9. இப்படிக் கனவும் உண்டு, 11. அன்பு, 12. யாழ்ப்பாணத்தில் இது அதிகம், 13. ஊதியம் (குழம்பியுள்ளது), 15. நிலே, 16. 'கழி' சேர்ந்தால் மாதத்தின் பெயர், 17. 'தை' சேர்ந்தால் ஒரு பறவை 20. பிரணவ மந்திரம் (மாறிவருகிறது), 21. பாதுகாப்புச் சாதனம் (மாறி நிற்கிறது), 22. கண் தெரியாதவன் (குழம்பி நிற்கிருன்).

### மேலிருந்து கீழ்

1. வாழை இனம், 2. ......கசடற (ஒழுங்குபடுத்தவும்), 3. 'ல்' சேர்ந்தால் வெளிச்சம், 4. பதற்றம் — இறுதி எழுத்து இல்லை (மாறிவரும்), 5. சிலருக்கு இது அதிகம், 7. மனித உறுப்பு, 10. வீடு கட்டத் தேவை, 11. காவிரிப்பூம்பட்டினம் (குழம்பி நிற்கிறது), 12. கணவன், 14. பார்வதி, 15. முருகன், 18. படகோட்டி (மாறி வருகிருன்), 19. வனம், 20. கார் 'ஹோர்ன்' ஒலி (மாறி வருகிறது)

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினுல் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்ரும் பரிசு: 25 ரூபா

## உலக விளையாட்டு


# கையிலே கமரா ஏந்தி

## காரிகை இவள் கண் சிமிட்டுவது ஏன்...?



கமராவைக் கையில் பிடித்து எவரும் படம் எடுக்கலாம்...

.... ஆனல் கலையம்சத்துடன் தரயான படம் பிடிப்பது என்பது ஒரு கலே. எல்லோராலும் அது முடியாது.

அது போலவே...

படச்சுருள்களைக் கழுவுதல், பிரதி செய்தல் என்பனவற்றையும் எல்லோராலும் நுட்பமாகவும், நுணுக்கமாகவும், தரமாகவும் செய்து தர முடியாது.

✶ உயர்ந்த தொழில் நுட்பத்துடனும், நுணுக்கத்துடனும் படச்சுருள்களை நவீன கம்பியூட்டர் மூலம், நேரில் பார்ப்பது போன்று மின்னும் தெளிவான கலர் போட்டோ பிரதிகளாக்கித் தருவதற்கும்-

✶ படச்சுருள்களை முற்றிலும் இலவசமாகக் கழுவுவதற்கும்-

✶ ஒரு பிரதிக்கு ரூபா 4-75 மட்டுமே செலுத்தி -

✶ மூன்று முதல் ஐந்து நாட்களில் நம்பிக்கையாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே இடம்:

**'ஷப்ரு'** 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

எல்லா நாட்களிலும் படச்சுருள்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது.
முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
**MACK TRAVELS**
1st - Lane, Pt - Pedro Road,
Jaffna.

சஞ்சீவி சஞ்சிகை

10-09-1983 சனிக்கிழமை

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION
★ பாஸ்போட் பொன்டிங் இந்தியன். விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
**MACK TRAVELS**
Jaffna.

# போலந்தில் தொழிலாளர் பிரச்சினை தீரும் அறிகுறிகள்

## எட்டு வருடகால கருமேகங்கள் கலைகின்றன

சர்வதேச அரங்கில் வீசிக்கொண்டிருக்கும் சமாதானக் காற்று கிழக்கு ஐரோப்பாவின் கம்யூனிஸ்ட் நாடான போலந்திலும் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளது.

கடந்த எட்டு வருடகாலமாக அந்த நாட்டில் கவிந்திருந்த கருமேகங்கள் கலையும் அறிகுறிகள் தென்படுகின்றன.

நிக்கரகுவா, ஆப்கானிஸ்தான், வனௌடா, அங்கோலா ஆகிய நாடுகளைப் போன்றதல்ல போலந்தின் பிரச்சினை.

போலந்து முற்றுமுழுதாக உள் நாட்டுப் பிரச்சினையையே எதிர்நோக்கி உள்ளது.

ஆனால் இந்த உள்நாட்டுப் பிரச்சினை சர்வதேச பிரச்சினையாக உருவெடுக்கும் சாத்தியங்கள் கடந்த 8 வருடகால நெருக்கடியின்போது ஏற்பட்டிருந்தன.

1968 ஆம் ஆண்டு செக்கோஸ்லாவாக்கியாவில் வார்ஸோ ஒப்பந்தநாடுகளின் படைகள் தலையிட்டது போன்று ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தால் அது சர்வதேசப் பிரச்சினையாக உருவெடுத்திருக்கும்.

சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான கெடுபிடி யுத்தத்தை அதிகரித்திருக்கும்.

செக்கோஸ்லாவாக்கிய நெருக்கடியின் பின்னர், கிழக்கு ஐரோப்பிய சம்யூனிஸ்ட் முகாமில் சோவியத் யூனியனுக்குப் பெரும் தலையிடி கொடுத்து வந்த பிரச்சினையாகப் போலந்துப் பிரச்சினை கருதப்படுகிறது.

மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் இந்தப் பிரச்சினை போலந்தைத்தள்ளி உள்ளது.

போலந்தின் சுதந்திர தொழிற்சங்கத்துக்கும் சம்யூனிஸ்ட் நிர்வாகத்துக்கும் இடையில் நடைபெறப்போகும் பேச்சுக்கள் வெற்றி அளித்தாலும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளில் இருந்து போலந்து மீழ மேலும் பல சகாப்தங்கள் செல்லலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### வேலை நிறுத்தம்

கடந்த இருவாரங்களாக நடைபெற்று வந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதே போலந்தில் தற்போது உருவாகி வரும் சுமுக நிலைக்குக் காரணம் ஆகும்.

ஆகஸ்ட் 15 ஆம் திகதி இந்த வேலை நிறுத்தம் ஆரம்பமாகி இருந்தது.

அரசாங்கத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் பெரும் பலப்பரீட்சையாக இந்த வேலை நிறுத்தம் உருவெடுத்திருந்தது.

சம்பள அதிகரிப்பு, லெச் வலேசாவைத் தலைவராகக் கொண்ட சுதந்திர தொழிற் சங்கம் மீதான தடை நீக்கப்படவேண்டும் ஆகிய கோரிக்கைகளே வேலைநிறுத்தக்காரர்களின் பிரதான கோரிக்கைகள்,

1980–81 ஆம் ஆண்டுகாலத்தில் போலந்தில் ஏற்பட்ட மோசமான தொழிற்சங்க நெருக்கடிக்குப்பின்பு பெரிய நெருக்கடியாக இந்த வேலை நிறுத்தம் கருதப்பட்டது.

போலந்தின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்துவரும் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், கப்பல் கட்டும் தொழிற்சாலை ஊழியர்கள், பஸ் சாரதிகள், நடத்துனர்கள் ஆகியோர் இந்த வேலை நிறுத்தத்திற் கலந்துகொண்டிருந்தனர்.

போலந்து கம்யூனிஸ்ட் அரசு பணிந்துவந்து பேச்சுவார்த்தைக்கு அழைப்புவிடுத்ததை அடுத்து வேலைநிறுத்தத்தைக் கைவிடும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

6 வருடத்தின்பின்னர் முதல் தடவையாக போலந்து நிர்வாகம் லெச் வலேசாவுடன் இவ்வாரம் உத்தியோகபூர்வமாகத் தொடர்புகொண்டது.

1983 ஆம் ஆண்டு சுதந்திர தொழிற்சங்கத்துக்குத் தடைவிதித்து லெச் வலேசாவுக்கு 11 மாதத் தடுப்புக்காவல் உத்தரவு விடுத்த அதே உள்துறை அமைச்சர் செலோகிஸ்செக் வார்ஸோவின் அரச விடுதி ஒன்றில் வலேசாவுடன் பேச்சுநடத்தியுள்ளார்.

இம்மாத இறுதிக்குள் சுதந்திர தொழிற்சங்கத்துக்கும் கம்யூனிஸ்ட் நிர்வாகத்துக்கும் இடையில் வட்ட மேசை மாநாடு நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வட்டமேசை மாநாட்டில் நாட்டின் பிரச்சினைகள் ஆராயப்படவுள்ளன.



சம்யூனிஸ்ட் கிழக்கு ஐரோப்பாவின் முதலாவது சுதந்திர தொழிற்சங்கமான போலந்து சுதந்திரத் தொழிற் சங்கத் தலைவர் லெச்வலேசா தொழிலாளர்கள் மத்தியில் உரையாற்றுகிறார். (இ)

சுதந்திர தொழிற்சங்கமும், அரசதரப்பினரும், தேவாலயங்களின் பிரதிநிதிகளும் இந்த வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போலந்து அரசியலில் தேவாலயங்கள் குறிப்பிட்ட அளவு செல்வாக்குப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய பாப்பரசர் இரண்டாவது ஜோன்போலும் போலந்து தேசத்தவரே.

### தொழிற்சங்க உதயம்

1980 ஆம் ஆண்டு போலந்தில் ஏற்பட்ட தொழிலாளர் கிளர்ச்சியின்போது சுதந்திர தொழிற்சங்கம் உருவானது.

தொழிலாளர்களின் கோட்டைபோன்று விளங்கும் லெனின் கப்பல் கட்டும் தொழிற்சாலையில் கம்யூனிஸ்ட் நிர்வாகத்துக்கும் லெச் வலேசாவுக்கும் இடையில் 1980 ஆகஸ்ட் 31ஆம்திகதி ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டது.

அன்றிலிருந்து போலந்தின் சுதந்திர தொழிற்சங்கம் கம்யூனிஸ்ட் கிழக்கு ஐரோப்பாவின் முதலாவது சுதந்திர தொழிற்சங்கமாக உருவெடுத்தது.

ஆனால் 15 மாதகாலமே அது சட்டரீதியாக இயங்க அனுமதிக்கப்பட்டது.

1980–81 ஆம் ஆண்டுப்பகுதியில் போலந்தில் இடம்பெற்ற மோசமான வேலைநிறுத்தப் போராட்டத்தை அடுத்து 1981 டிசம்பரில் போலந்தில் இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது.

அடுத்த ஆண்டு— அதாவது 1982 ஆம் ஆண்டு சுதந்திர தொழிற்சங்கத்துக்குத் தடைவிதிக்கப்பட்டது.

அன்றில் இருந்து இன்று வரை தொழிற்சங்கம் மீதான தடை நீக்கப்படவில்லை 1986 ஆம் ஆண்டு தொழிலாளர் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக அரசினால் ஆலோசனைக் சவுன்ஸில் ஒன்று நிறுவப்பட்டது. அரசாங்க எதிர்ப்பாளர்கள் அதனைப் பகிஷ்கரித்ததினால் அதுவும் செயலிழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நிலையிலேயே தொழிலாளர்கள் மீண்டும் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

இந்த வேலை நிறுத்தம் கடந்த ஆகஸ்ட் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த வருடம் சுதந்திர தொழிற்சங்கத்துக்கு ஆதரவாக நடைபெற்ற இரண்டாவது பெரிய வேலை நிறுத்தம் இதுஆகும்.

1980 - 81 ஆம் ஆண்டு வேலை நிறுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பேரழிவு ஏற்பட்டிருந்தது. அதில் இருந்து மீள முன்னர் தற்போது இடம்பெற்ற வேலை நிறுத்தம் நாட்டைக் குட்டிச்சுவராக்கும் நிலைக்குள் தள்ளிக் கொண்டிருக்கிறது.

இப்படியான இக்கட்டான நிலையிலேயே தற்போது வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு புதிய சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### பொருளாதார நெருக்கடி

போலந்தின் பெரும்பாலான தொழிலாளர்கள் வறுமையின் பிடியிலேயே வாழ்ந்து வருகின்றனர். 12 மணித்தியாலமும் சனிக்கிழமையும் வேலை செய்தால் மட்டுமே ஓரளவு குடும்பத்தைப் பராமரிக்க முடிகின்றது என்று தொழிலாளர்கள் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

போலந்தில் ஒரு கலர் டெலிவிஷன் வாங்க ஒரு வருட உழைப்புத் தேவை. திருமண மோதிரம் ஒன்றுக்கு ஒரு மாத உழைப்புத் தேவை என்று சுதந்திர தொழிற் சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கிறார்.

போலந்தின் பொருளாதாரம் மோசமடைந்துள்ள இன்றைய நிலையில் தொழிற் சங்கம் சுதந்திரமாக இயங்க அனுமதிப்பது நிலைமையை மேலும் மோசமாக்கலாம் என்று கம்யூனிஸ்ட் நிர்வாகத்தில் உள்ள பெரும்பாலான பழைமை விரும்பிகள் கருதுகின்றனர்.

அரசின் கடன் பழு 3900 கோடி டாலராக அதிகரித்துள்ளது குறித்து அரச தரப்பில் பெரும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் சிக்கனத் திட்டத்தின் மத்தியிலும் பணவீக்கம் அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு பணவீக்க உயர்வை 50 சதவீதத்தில் வைத்திருக்க அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால் இந்த ஆண்டின் முதல் நான்கு மாதத்திலேயே பணவீக்கம் 45 சதவீதத்தை எட்டிவிட்டதாக போலந்தின் பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவிக்கிறார்.

உலக உலா

போலந்து ஜனாதிபதி ஜருசெல்ஸ்கியின் எதிர்காலம் தொழிலாளர் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்ப்பதிலேயே தங்கி உள்ளது.

அதிபர் கோர்பச்சேவ் சோவியத் யூனியனில் புதிய அரசியல் சீர்திருத்தங்களைப் புகுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால் போலந்திலும் அரசியல் சீர்திருத்தங்கள் மூலம் தொழிலாளர் பிரச்சினைகள் தீரும் சாத்தியங்கள் இருந்து வருகின்றன. *

# பொது அறிவுப்போட்டி இல. 12

1. பூச்சிகொல்லிகளில் இதுவும் ஒன்று? ... ... ... ... டி.டி.ரி / வேப்பம் இலை
2. காதல் தேவதை யார்? ... ... ... ... ... ... ... வீனஸ் / மோகினி
3. உடலுக்கு உருவத்தைக் கொடுப்பது எது? ... ... ... ... தசை / எலும்பு
4. அருள் இல்லாருக்கு எது இல்லை? ... ... ... ... அவ்வுலகம் / இவ்வுலகம்
5. ரோஜாவின் ராஜா என்று யாவரை அழைப்பர்? ... ... நேருஜி / கென்னடி
6. எதைவிட்டால் துயரம் இல்லை? ... ... ... ... ... ... கோபம் / ஆசை
7. இராமபக்தர்களில் சிறந்தவர் யார்? ... ... ... அனுமான் / இராமதாஸர்
8. ஓவியங்களுக்கு பேர்போன குகை எது? ... ... ... அஜந்தா / சிகிரியா
9. தேவிக்குரிய மந்திரம் எது? ... ... ... ... ... ... ... காயத்ரி / தாரகம்
10. அக்பர் அரியணையில் ஏறியதும் என்ன செய்தார்? உட்கார்ந்தார் / ஆணையிட்டார்
11. உலகின் முதலாவது பெண்பிரதமர் யார்?... ... இந்திராகாந்தி / சிறிமாவோ பண்டார நாயக்கா
12. மரங்களுக்கும் இதுவேண்டும் என்பர் விஞ்ஞானிகள் ... அன்பு / தண்ணீர்

பெயர்:- ..................
விலாசம்:- ........................
................

பொது அறிவுப்போட்டி இல: 12
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——————— இங்கே வெட்டுக ———————

**நிபந்தனைகள்:**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 14. 9. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**முதலாம் பரிசு: 100 ரூபா**
**இரண்டாம் பரிசு: 50 ரூபா**
**மூன்றும் பரிசு: 25 ரூபா**

# அண்ணா வளர்த்த திராவிட பாரம்பரியத்துக்கு

## இன்று ஏற்பட்டுள்ள சோதனை!

ஆண்டுதோறும் அண்ணாவின் பிறந்த தினம் வருகின்றது: ஆனால் இம்முறை வரும் பிறந்த தினத்துக்கு ஒருசிறப்பு உண்டு.

ஆரம்பத்தில் அண்ணாவின் பிறந்த தினத்தைக் கருணாநிதி அணி (தி. மு. க.) தான் கொண்டாடி வந்தது.

எம். ஜி. ஆர். பிரிந்து அண்ணா தி. மு. க. ஆரம்பமானது.

அதன் பின்னர் இரண்டு அணிகள் போட்டி போட்டுக் கொண்டு 'அண்ணா' வை நினைவு கூர்ந்தன

எம். ஜி. ஆர். மறைவின் பின்னர் அ. தி. மு. க. இரண்டாகப் பிரிந்தது.

கருணாநிதி அணியுடன் ஜானகி அணியும் ஜெயலலிதா அணியும் அண்ணாவின் பிறந்ததினத்தைக் கொண்டாடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் யாரும் எதிர்பாராத வகையில் அ.தி.மு.க. 'ஜெ' அணி இரண்டாக உடைந்தது.



நாவலர் அணி பிறந்தது. அதனால் நான்கு அணிகள் இம்முறை அண்ணா பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ளன. ஆகவே அண்ணாவின் இயக்கம் பல அணிகளாக வளர்ந்துள்ளன என்று கூடச் சொல்லலாம்.

இக் கட்டத்தில் அண்ணா வளர்த்த திராவிடப் பாரம்பரியம் இன்று என்ன நிலையை

இம் மாதம் 15 ஆம் திகதி பேரறிஞர் அண்ணாவின் பிறந்த தினம் வருகிறது. அவர் ஆரம்பித்த திராவிட முன்னேற்றக் கழகம் இன்று நான்கு அணிகளாகப் பிரிந்து நின்று அவரின் பிறந்த தினத்தைக் கொண்டாடப் போகின்றன. இதையொட்டி இக் கண்ணோட்டம் பிரசுரமாகிறது.

அடைந்திருக்கின்றது என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

திராவிடர் கழகத்தின் தலைவர் ஈவெரா இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். வயதில் குறைந்த மணியம்மையை மனையாளாக ஏற்றுக் கொண்டது பிடிக்காமல் அண்ணா தனது தம்பிமார்களுடன் வெளியேறித் திராவிடர் முன்னேற்றக் கழகத்தை ஸ்தாபித்தார்.

அரசியல் அதிகாரத்தைப் பெற, ஆட்சியைப் பிடிக்க அண்ணா அடுக்கு வசனத்தை உபயோகித்தார். சினிமாவைப் பயன்படுத்தினார். மேடைகளைப் பயன்படுத்தினார்: வெற்றியும் கண்டார்.

1967 இல் திராவிடர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு— மூன்று தாரக மந்திரங்களைப்பயன்படுத்தி 'ஆட்சி' யைப் பிடித்த மூன்று எழுத்து மன்னராக 'அண்ணா' விளங்கினார்.

அண்ணா போதித்த கடமை, கண்ணியம் கட்டுப்பாடு



இன்று இல்லை. மாற்றான் தோட்டத்துக்கும் மல்லிகைக்கும் மணம் உண்டு என்று பரந்த மனத்துடன் சொன்னவர் அண்ணா.

20 ஆண்டுகளாக தி. மு. க. அ. தி. மு. கவுடன் கூட்டணி அமைத்தும் ஆட்சியை காங்கிரஸால் பிடிக்கமுடியவில்லை.

தமிழகத்தில் இருந்து சில எம். பி. பதவிகளை மட்டுமே காங்கிரஸால் பெற்றுக் கொள்ள முடிந்தது.

ஆனால் ராஜீவ் தலைமையில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்க பகீரதப் பிரயத்தனம் எடுத்து வருகிறது.

தமிழ் நாட்டில் திராவிட மாயையை ஒழித்துவிடப் போவதாகத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் காட்டமாகப் பேசி வருகிறார்.

திராவிடப் பாரம்பரியத்தைத் தொடரவிடமாட்டோம் என்றும் காங்கிரஸ் தலைவர்கள் கூறிவருகிறார்கள்.

திராவிட இயக்கங்களுக்கு இன்று போல் என்றுமே சோதனை ஏற்பட்டது இல்லை.

தமிழ்நாட்டில் தமிழனுக்குப் புத்துயிர் கொடுத்தது திராவிடர் இயக்கம் என்பதில் சந்தேகமே இல்லை.

அண்ணா கட்டி எழுப்பிய அந்தத்திராவிட பாரம்பரியம் இன்று அவரின் தம்பிமார்களினாலேயே சோதனைக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இச் சோதனையில் இருந்து திராவிடர் இயக்கம் மீளுமா? அல்லது மாளுமா?

அண்ணா பிறந்த நாள் அன்று அண்ணா சமாதிக்கு நான்கு அணிகளாகப் பிரிந்து சென்று அவரின் தம்பிமார்கள் அஞ்சலி செய்வதன் மூலம் அண்ணா வளர்த்த பாரம்பரியத்தை மீண்டும் கட்டி எழுப்ப முடியுமா?

காலம்தான் இதற்கு பதில் சொல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org